ஆய்வுக் களஞ்சியம்

வரிசை

3

குறும்பொறைக் கோமான்

கொடுமுடி சண்முகப் பிரகதம்

ஆய்வுக் களஞ்சியம்–3

குறும்பொறைக் கோமான்

பதிப்பாளர்

கொடுமுடி சண்முகப் பிரகதம்

வெளியீடு:

தேனோலை

11-ஆ, இரண்டாம் பெருஞ்சாலை

இந்திராநகர், சென்னை-600020.

BIBLIODATA

Title :	Aayvukkalanjiam-3 KURUMBORAIKKOOMAAN
Author :	Kodumudi Shanmuga Bragadham
Date of Birth :	19-1-1947
Language :	Tamil
Edition :	First, September 1981
Paper used :	15.2 kg white printing
Size :	Demy 21.5 × 14 cm
Printing points :	10 pt, 14 pt.
No.of pages :	4 + 128
No.of copies :	1000
Printer :	A G.G. Printers, Indira Nagar, Madras-20.
Binding :	Card Board
Price :	Rs 12/-
Publishers :	THENOLAI 11-B, LIG Flat, Second Avenue Indira Nagar, Madras-600020.
Editor :	Kodumudi Shanmuga Bragadham,

படையல்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

கேட்கக் கொடுத்து வைக்காத தாய்

பழனியம்மாள்

பாத மலர்களில் படைக்கின்றோம்

வணக்கம்

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், தமிழகத் தொல்லியல் துறை, மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவை அவ்வப்போது நடத்திய கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள், மற்றும் கொங்கு, முரசொலி போன்ற இதழ்களிலும், விழா மலர்களிலும் வெளிவந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டுத் தங்களின் கைகளில் தவழ்கிறது.

இதிலுள்ள பல செய்திகள் புதியவை. ஆய்வாளர்கள் உரைகல்லில் தேய்த்துப்பார்த்துக் தங்களின் கருத்துக் களை எங்களுக்கு அனுப்பலாம். வரவேற்கின்றோம்

ச. பிரகதம்

பதிப்பாளர்.

உள்ளே

	பக்கம்
குறும்பொறைக் கோமான்	1
திருப்பாண்டிக் கொடுமுடி	8
சேரர் வழிமுறை	17
கந்தபுரம்	23
சுக்காலியூர்	27
கரூர்க் கோட்டை	31
எழுமாத்தூர்	35
விசய மங்கலம்	37
தொன்று தொட்டுவரும் தொழில்கள்	44
குமரிக்கண்டம் : சில புவியியல் உண்மைகள்	57
குன்றுடையன் கரடு	65
கருங்கல் பணிகள்	68
சிற்பக் கலைகள்	71
நான்காவது உலகத் தமிழ் மாநாடு, இலங்கை	73
குயவர் பெருங்குடி	81
காதம்	87
மாதவியின் கடிதங்கள்	90
கயலும் வில்லும்	95
சேலம் மாவட்டத்து நடுகற்கள்	97
மாமல்லை	103
புகார்த் தூம்பு	107
மாதவி ஆடிய மேடை	109
முறைதெரியாக் கதை	111
சென்னிமலை	113
சொல்லாக்கம்	115
அடையாற்று ஈமப்பேழை	119
பொட்டுச் சூடு	115
கிண்டியில் பண்டைத் தாழி	126
அடையாற்றுப் பீரங்கி	127
ஓலைச் சுவடிகள்	128

குறும்பொறைக் கோமான்

முன்னோட்டம்

ஆமூர் கவுதமன் சாதேவனார் என்ற சங்ககாலப் புலவர் கொடுமுடி என்று பெயர் கொண்ட மாவீரன் ஒருவனை அறிமுகப் படுத்துகிறார். (அகம். 159). அவன் கோநகர் ஆமூர். பொய்யறைகள் பல கொண்ட நெடு மதில் சூழ்ந்த நகரம் அது. அதன் புகழ் நெடுந்தொலைவு பரந்திருந்தது. இடி ஒலிக்கும் உயரத்தை உடையதும், நன்மணப் பூக்கள் நிறைந்ததுமான குறும்பொறை மலையின் கிழக்கே அமைந்திருந்தது அந்நகரம். அந்நகர் மீது படையெடுத்து வந்த வானவன் ஒருவனின் மதங்கொண்ட யானைப்படை, ஆமூர்க் கோட்டையில் முட்டி மோதியதின் விளைவு அவற்றின் கொம்புகள் ஒடிந்தனவே தவிர கோட்டை மசியக்காணோம். வானவன் தோற்றோடினான்.

விம்பின் நல்லேறு சிலைக்கும் சேண்சிமை
நறும்பூஞ் சாரற் குறும்பொறைக் குணாஅது—
வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறு மூசுகவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஒடிய நூறி
கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில்
சேண் விளங்கு சிறப்பின்—ஆமூர்......

(13-19/அகம். 159)

அக்குறுநில மன்னன் கொடுமுடியின் ஆமூரும் குறும்பொறை மலையும் எது எனக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

முல்லை நிலம்

ஆமூர் செல்லும் வழியைக் கவுதமன் சாதேவனார் விவரிக்கிறார். பெரிய வண்டிகளில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு பொதி எருதுகள் பூட்டி ஓட்டிச் செல்லும் வழி. அவ்வணிகர்கள் இரவில் தங்கிய போது சமைத்து உண்ணுவதற்காகக் கூட்டிய கல் அடுப்புகள் ஆங்காங்கு நிறைந்துள்ளன. ஆறலைக் கள்வர் தம் அம்பு

களை அவ்வடுப்புக் கற்களில் தீட்டிக் கொள்கின்றனர். ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும் கொடியோர். கொடுந்தோற்றத்தினர் இறைச்சியை வேகவைத்து உண்பர். இலைகளால் ஆன மாலையை அணிந்திருப்பர். இவ்வருணனைகளிலிருந்து அறிவது இரண்டு உண்மைகள். கடற்கரையிலிருந்து நெடுந்தொலைவு தள்ளியிருக்கும் உள்நாட்டு நகரம். காடு சூழ்ந்த முல்லை நிலம். குறும்பொறை மலை ஒரு கூடுதல் அடையாளம்.

ஆமூர்கள்

தற்போது தமிழகத்தில் ஆமூர் என்ற பெயரோடு பல ஊர்கள் உள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் பொன்னேரிக்கு அருகில் ஒரு ஆமூரும், அச்சிறுபாக்கத்திற்கு அருகில் சித்தாமூர், சிறுதாமூர் என்ற ஊர்களும் உள்ளன. மாமல்லை ஆமூர் கோட்டத்தைச் சேர்ந்த ஆமூர் நாட்டில் இருந்ததாக கல்வெட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது.[1] தென்னார்க்காடு மாவட்டத்தில் பண்ருட்டிக்குப் பக்கத்தில் நாவுக்கரசர் தோன்றிய திருவாமூர் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் நாகூரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் வழியில் ஏனங்குடிக்கு அருகில் ஒரு ஆமூர் உள்ளது,

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக் கோடனின் மூன்று பெரும் ஊர்களில் ஆமூரும் ஒன்று[2]. நல்லியக் கோடன் தொண்டை மண்டலத் தலைவன். மேலே கூறிய ஆமூர்கள் நல்லியக் கோடனின் ஆமூரிலிருந்து குடிபெயர்ந்த மக்களால் அமைத்துக்கொண்ட ஊர்களாக இருக்கலாம். மேலும் செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை முதலியன கடற்கரை மாவட்டங்களாதலால், அவை கொடுமுடியின் ஆமூரல்ல எனத் துணியலாம்.

முசிரி ஆமூர்

திருச்சி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் முசிரி செல்லும் வழியில் ஒரு ஆமூர் உள்ளது. இது உள்நாட்டு ஊர்தான். ஆனால் காவிரியின் பயனால் வயல் சூழ்ந்த மருத நிலம் மேலும் அதன் மேற்கே மலைகள் ஏதும் இருந்த அடையாளமே இல்லை

இந்த ஆமூர் சங்க இலககியங்களில் குறிப்பிடப்படுகிறது. [3]சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி ஆமூர் மல்லனை வென்றதாகக் கூறப்படுகிறது (புறம் 80). "வெல்போர்ச் சோழர் ஆமூர்" என்றும் ஐங்குறுநூறு (மருதம் 56) கூறுகிறது. எனவே முசிறி ஆமூரையும் தள்ளிவிடலாம்,

கொங்கு நாட்டு ஆனூர்

கோவை மாவட்டத்தில், தாராபுரம் வட்டத்தில் நொய்யலாற்றங்கரையின் வலது கரையில் ஆனூர் என்ற ஊர் உள்ளது. தற்போது பழைய கோட்டை என வழங்கப்படுகிறது. நல்ல சேனாதிபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் சொந்தஊர்.

சென்னிமலை, அரச்சலூர் மலைகளின் தென்கிழக்கே அமைந்துள்ளது. உள்நாட்டு ஊர். கீழ்பவானிக் கால்வாய்கள் வருமுன்னர் காடுகள் நிறைந்த முல்லை நிலமாக இருந்தது. இந்த ஆனூரே கொடுமுடியின் ஆமூராக இருக்கலாம். அதை உறுதி செய்யகுறும்பொறை மலையை அடையாளம் காணல் வேண்டும்.

குறும்பொறை

குறும்பொறை என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் பொதுப்பொருளில் கரடு[5], பொற்றை[6], பாலைநிலத்தூர் ஆகியவற்றைக் குறித்து நிற்கிறது (ஐங்குறுநூறு 183, 404, பெருங்கதை 38-117). முன்னர் கூறிய அகம் 159-ஆம் பாடலிலும் பதிற்றுப் பத்து (எட்டாம் பத்து-74)லும் ஒரு மலையைக் குறித்து நிற்கிறது.

வரையகம் நண்ணி, குறும்பொறை நாடி
தெரியுநர்க் கொண்ட சிரறுடைப் பைம்பொறி
கவைமரங் கடுக்கும் கவலைய மருப்பின்
புள்ளி இரலை.........

(பதிற். 74/7—10)

பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னனைஅரிசில் கிழார் பாடியது எட்டாம் பத்து. இவன் கருரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தவன். இவனது ஆட்சிப் பரப்பில் ஒரு பெரிய மலையை அடுத்து குறும்பொறை என்ற சின்னமலை இருந்ததை அறியலாம். மான்கள் அங்கு மேய்ந்து திரிந்ததைப் புலவர் காட்டுகிறார்.

நல்லியக்கோடனைப் பாடுகின்ற நத்தத்தனார் சிறுபாணாற்றுப் படையில் கடையேழு வள்ளல்களைப் பற்றிப் பாடுகிறார். அதில் குறும்பொறை நாடு குறிப்பிடப்படுகிறது.

....நளிசினை
நறும்போது கமலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக்குதிரை காரியோடு மலைந்த
ஓரிக்குதிரை ஓரியும் எனவாங்கு

சிறுபாணாற்றுப்படை (107—117)

ஓரி கொங்கு நாட்டில் கொல்லிமலைப் பகுதியை ஆண்ட குறுநில மன்னன். பெருஞ்சேரல் இரும்பொறையோடு சமகாலத்தில் வாழ்ந்தவன். பெருஞ்சேரல் இரும்பொறையும் திருமுடிக்காரியும் சேர்ந்து, ஓரியையும் அதிகனையும் வென்றார்கள். ஓரியின் ஆற்றல் குறும்பொறை வரையிலும் பரவி இருந்திருக்கவேண்டும். முதலில் சேரமன்னன் கீழ் வாழ்ந்து பின் தன்னாட்சி புரியத் தலைப்பட்டிருக்க வேண்டும். ஓரி என்ற பெயர் இயற்பெயராக இப்பகுதி மக்களுக்கு வழங்கி வந்ததை புகழியூர் கல்வெட்டால் அறியலாம்.

பாடற் பொருளைக் காண்போம். 'செரிந்த கொம்புகளிடத்தே நறும்பூக்கள் நிறைந்த நக அல்லது சுரபுன்னை மரங்கள் அடர்ந்த நாகமலை உள்ள குறும்பொறை நாடு'' என்றாகும். 'நாகத்து' என்பது 'நாகமலை அமைந்துள்ள' என்று விரியும். சென்னிமலையை அடுத்துள்ள அரச்சலூரிலுள்ள மலையே நாகமலை ஆகும்.

குறும்பொறை மலை உள்ள இடம் குறும்பொறை நாடு என அழைக்கப்பட்டுள்ளது. சென்னிமலை அக்காலத்தில் ''சென்னிக் கோடு, என வழங்கப்பட்டுள்ளது. (நற்றிணை-28). சென்னிமலை, நாகமலை இவற்றினிடையே மணிமலைக் கரடு, குட்டிக் கரடு என்ற இரு சிறுமலைகள் உள்ளன. குட்டிக்கரடு என்பதன் இலக்கிய வழக்கு குறும்பொறை ஆகும்.

இந்தக் குட்டிக் கரடு மீது தற்போது, பழைய சான்றாக ஐயம் கொள்ளும் அளவில் ஒரு அடையாளம் உள்ளது. வட்ட வடிவமான கருங்கல் கட்டிடம் இரண்டு இருந்ததன் சாயலாக சாந்துப் பொருள் இல்லாத வெறும் கருங்கல் அடுக்குகள் இரண்டு உள்ளன. புதைபொருள் ஆய்வுகள் தமிழகத்தின் ஆதிகாலத்தில் வட்டவடிவக் கட்டிடங்கள் இருந்ததைப் பல இடங்களில் கண்டு பிடித்துள்ளது. எனவே இந்தக் குட்டிக் கரடே மாவீரன் கொடுமுடியின் குறும்பொறை மலையாக இருக்கலாம்.

இந்த ஆமூருக்கு வரும் வழி ஆறலை கள்வர் மிகுந்த இடம் என்று (அகம் 159) கவுதமன் சாதேவனார் பாடியுள்ளதைக் கண்

டோம். கொடுமுடிக்குப் பின் சுமார் 600 ஆண்டுகளுக்குப் பின்னர் சுந்தரமூர்த்தி நாயனாரை, அவிநாசியில் சிவபெருமான் பூத கணங்களை ஏவி கொள்ளையடித்ததோடு ஒப்பிட்டு மகிழலாம்.

[9] கொங்கு மண்டலத்து உள்நாட்டுப் பிரிவான 24 நாடுகளில் 'குறுப்பு நாடும்' ஒன்று.

"கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்"

என்பது சுந்திரமூர்த்தி நாயனார் தேவாரம். குறும்பு நாடு சென்னிமலையின் அடிவாரத்திலிருந்து மேற்கே உள்ள பகுதியாகும். குறும்பொறை நாடு என்று முன்னர் வழங்கி வந்த பகுதி சுருங்கி பிற்காலத்தில் 'குறுப்பு நாடு' என்று பெயர் பெற்றிருக்கும்.

எட்டாம் பத்து 74-ஆம் பாட்டில் ஐந்தாம் வரியில்

"கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்"

என்று அரிசில் கிழார் பாடுகிறார். இதற்கு அடுத்த வரியில் குறும்பொறை மலையைக் குறிப்பிடுகிறார். இந்தக் கொடுமணம் என்ற ஊர் சென்னிமலையை ஒட்டி உள்ளது. [10] குறுப்பு நாட்டு ஊர்த் தொகைப் பாடலில் கொடுமணல் என்று கூறப்பட்டுள்ளது.

கொடுமுடியை அடுத்துள்ள வள்ளியறைச்சல் என்னும் ஊர்க் கோயிலில் கிடைத்துள்ள கல்வெட்டை வெட்டியவன் "ஆமூருடையான்" என்றுள்ளது (தமிழகத் தொல்லியல் துறையின் Damilica) இந்த ஊர் பழைய கோட்டையிலிருந்து ஐந்துமைல் தொலைவில் நொய்யலாற்றங்கரையில் உள்ளது. அதனால் இன்றைய ஆனூர் அப்போது ஆமூர் என வழங்கி வந்துள்ளது புலனாகும்.

வெல்போர் வானவன்

குறும்பொறைக் கோமான் கொடுமுடியுடன் போரிட்டவன் யார்? "இலக்கிய வரலாறு" என்னும் நூலில் பேராசிரியர் கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் அடையாளம் காட்டுகிறார்கள். அவன் பல்யானைச் செல்கழுகுட்டுவன். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பி. கொங்கு நாட்டில் "கொங்கூர் (தாராபுரம்) என்ற ஊரிலிருந்து ஆட்சி செய்தவன் (கொங்கு-மாசி 71 இதழ்) வானவரம்பன் என்று பெயர் இருக்கவேண்டியவன்.[11] உம்பர்காட்டை (ஆனைமலையைத்) தன்கோல் நிரீஇயவன். அயிரைமலை (பழனியை அடுத்துள்ள அய்வர்மலை)யின் தலைவன். (கொங்கு. சன. 1972) பூழிநாட்டினை வென்றவன். பெரும் யானைப் படைகொண்டவன்.

இவன் எப்படித் தோற்றிருக்கமுடியும்? எல்லாப் போரிலும் வெற்றியே இருக்க இயலாதல்லவா! முதல் போரில் தனது படையை அனுப்பியிருக்கலாம். அதில் கொடுமுடி வென்று அப் படையைத் துரத்தியிருக்கலாம். அந்த வெற்றியைப் பாராட்டி கவுதமன் சாதேவனார் பாடியிருக்கலாம்.

பின்னர் பெரும்படையோடு தானே வந்த குட்டுவன் கொடு முடியின் ஆமூர் மதிலை அழித்து வாகை சூடியிருக்கலாம். பல் யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடும் மூன்றாம் பத்து இவ்வெற்றியைச் சிறப்பித்துப் பாடுகிறது.

"ஆ கெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்"

(பதிற் 22/15—16)

என்று விளிக்கிறார் கவிஞர். அப்பாடலின் பின் பகுதியில் குதிரை, யானை, காலாட்படை வீரர்கள் கோட்டையைத் தகர்த்து வென்ற தும், அருகிலிருந்த புனலில் நீராடும்போது எழுந்த பேரொலியை வியந்து கூறுகிறார். ஆமூர் நொய்யல் ஆற்றங்கரையில் இருந்ததை இங்கு நினைவு கொள்ளலாம்.

திருப்பாண்டிக் கொடுமுடி

இந்த ஆமூரிலிருந்து சுமார் 10 மைல் தொலைவில் உள்ளதே திருப்பாண்டிக் கொடுமுடி என்ற ஊராகும். இதன் முதற் பெயர் கரையூர். [12] காவிரியின் வலதுகரையில் அமைந்துள்ளது.

"கறையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா"

என்று (சுந்தரர்) தேவாரப்பாடல் கூறும். கோயிற் கல்வெட்டுக்கள் ,'திருப்பாண்டிக் கொடுமுடியார்" [13] "திருப்பாண்டிக் கொடு முடி மகாதேவர்" [14] "திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைப் நாயனார்" [15] என்றும் கூறுகின்றன. புதியதாக ஆற்றங்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட பனிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று (248/1961-62 A. R of I. E) '[16] ஆம்பரநாதப் பெருமாள் என்று கூறுகிறது. இது 'ஆமூர் நாதப் பெருமாள்' என்பதன் திரிபாக இருக்கலாம்.

சங்க காலத்தில் கொங்கு நாட்டில் குறும்பொறை மலைக்குக் கிழக்கே இருந்த ஆமூரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்த குறுநில மன்னன் கொடுமுடி ஆவான். அந்த ஆமூர் இன்றைய கோவை மாவட்டத்தில் தாராபுரம் வட்டத்தில் பழையகோட்டை எனப்படும் ஆனூர் ஆகக்கொள்ளலாம். இவனோடு பொருது முதல் முறை தோற்றுப் பின்னர் வென்ற சேரன் பல்யானைச் செங்கழு

குட்டுவன் ஆவான். கொடுமுடியின் சார்பாக ஏதாவது ஒரு வழியில் பெயர்கொண்ட இடம் இன்றைய திருபாண்டிக் கொடுமுடி ஆகும். கொடிமுடியின் பெயரால் அமைந்த கோயில் காலப் போக்கில் சிவபெருமானாக வழிபடப்பட்டு 'கொடுமுடி மகா தேவர்' என்றும் 'கொடுமுடி ஆளுடைய நாயனார்' என்றும் பெயர்கொண்டது. அதுவே மகுடேசுவரர், மகுடலிங்கர் என வடமொழிச் சாயல் பெற்றுவிட்டது. கரையூர் என்ற பழைய பெயர் மாறி, ஆண்டவன் திருநாமம் ஆன கொடுமுடி, ஊருக்கு அமைந்து விட்டது.

பார்வைக் குறிப்புகள்

1. S.I.I. vol. IV. No. 377
2. நல்லூர் நத்தத்தனார்—சிறுபாணாற்றுப்படை
3. சாத்தந்தையார்—புறம் 80
4. ஓரம்போகியார்—ஐங்குறுநூறு 56
5. ஐங்குறுநூறு 183, 404
6. பெருங்கதை (38—117)
7. ஐராவதம் மகாதேவன்—Corpus of the Tamil Brahmi Inscriptions.

    நல்லியூர் பிட்டன் குறுமக்கள்
    கிரன் ஓரி செப்பித்த பாலி,
8. கொங்கு-ஏப்பிரல் 71 (முதல் தொகுதி)
9. கொங்கு மண்டலம்—நாட்டுப் பாடல்—கொங்கு மண்டல சதகம்.
10. குருப்பு நாடு—ஊர்த்தொகைப்பாடல்—கொங்கு மண்டல சதகம்.
11. கொங்கு—முதல் தொகுதி. (மாசி 2002) பிப்ரவரி 71 இதழ்.
12. சேதுப்பிள்ளை—ஊரும் பேரும்
13. தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுக்கள் (பாகம் I) சாசனம் 253
14. ,, சாசனம் 254
15. ,, சாசனம் 252
16. Annual report of Indian Epigraphy 284/1961-62. கி.பி 11-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு.

1971 ஜூன் திங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் இரண்டாவது கருத்தரங்கில், வரலாற்றுப் பகுதியில், தமிழகத் தொல்லியல் துறை இயக்குநர் திரு இரா. நாகசாமி அவர்களின் தலைமையில், திரு. தே. பொ. மீ அவர்களின் முன்னிலையில் படித்து ஆராயப் பெற்ற எழுத்துரை.

திருப்பாண்டிக் கொடுமுடி

அமைவு

வான் பொய்த்தாலும், தான் பொய்யாது வளம் சுரக்கும் காவிரி நதியின் மேல்கரையில் அமைந்துள்ளது திருப்பாண்டிக் கொடுமுடி. ஈரோடு-திருச்சி செல்லும் புகைவண்டிப் பாதையில் 24 மைல் தொலைவில் அமைந்துள்ளது; ஐந்தாவது நிலையம். பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தது, நொய்யலாறு காவிரியில் வந்து கலக்கும் கூடுதுறைக்கு மேற்கே 5 மைல் தொலைவில் அமைந்துள்ளது. காவிரியைக் கடந்தால் சேலம் மாவட்டத்தையும், நொய்யலைக் கடந்தால் திருச்சி மாவட்டத்தையும் அடையலாம்.

கொங்குத் தலம்

பண்டைத் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு பாண்டிய நாடு தொண்டை நாடு, கொங்கு நாடு என ஐந்து பிரிவுகளாக பிரிந்திருந்தது. சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி மாவட்டங்களும் திருச்சி மாவட்டத்தில் கரூர் குளித்தலை வட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பழனி வட்டமும், கொங்கு நாட்டின் பகுதிகளாகும். கொங்குநாட்டில் ஏழு சைவத்தலங்கள் சிறப்புடையன. அவை கரூர், வெஞ்சமாக்கூடல், பவானி, அவிநாசி, திருமுருகன் பூண்டி, திருச்செங்கோடு, திருப்பாண்டிக் கொடுமுடி ஆகியன. கொடுமுடி ஆறாவது தலம் ஆகும்.

கறையூர்

திருப்பாண்டிக் கொடுமுடியின் பழைய பெயர் கறையூர். கறைசை எனவும் வழங்கப்படும். பேராசிரியர் இரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் தமது ஊரும் பேரும் என்ற நூலில் தேவும் திருவும் என்ற அத்தியாயத்தில் இதைப்பற்றி ஆராய்ந்துள்ளார். பழம் பாடல் களிலும், கல்வெட்டுகளிலும் கறைசை, கறையூர் என்னும் பெயர் அதிகப் புழக்கத்தில் உள்ளது.

மாவீரன் கொடுமுடி

சங்க காலத்தில் 'கொடுமுடி' என்ற பெயரில் குறுநில மன்னன் ஒருவன் இருந்துள்ளான். அவனது தலை நகரம் ஆமூர் ஆகும். கோட்டை, கொத்தளங்களுடன், பாதுகாப்பு மிக்கது அந்த ஆமூர். ஆமூர் கோட்டையில் மறைந்திருந்து பகைவர்களைத் தாக்கப் பொய்யறைகள் பல இருந்தன. குறும்பொறை மலையின் கிழக்கே அமைந்திருந்தது அந்த ஆமூர், விண்ணை முட்ட நெடிதுயர்ந் திருந்தது அம்மலை. காட்டுப் பூக்கள் அதன் சாரலில் பூத்துக் குலுங்கின. (அகம் 159).

ஆமூர் கவுதமன் சாதேவனார் தன் புலமைத் திறத்தால் கொடு முடியைப் புகழ்ந்து பாடி, அவன் ஆதரவில் வாழ்ந்து வந்தார். நொய்யலாற்றங்கரையில் தற்போது அமைந்துள்ள பழையகோட்டை ஆனூர் என்று வழங்கப்படும். இதுவே அக்கால ஆமூராக இருக் கலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வள்ளியறச்சலில் உள்ள கோயிலின் கதவு நிலையில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'இது ஆமூரான் எழுத்து' என்று வருகின்றது. அவனும் இந்த ஆமூரைச் சேர்ந்தவனாக இருக்கலாம். அறச்சலூர் தலைமலைக்கும், சென்னி மலைக்கும் நடுவில் குட்டிக்கரடு என்ற சிறுமலை உள்ளது. அதுவே குறும்பொறை மலை ஆகலாம். அதன் உச்சியில் தொன்மைச் சின்னங்களான வட்டக் கட்டிடத்தின் அழிபாடுகள் உள்ளன.

கொடுமுடியின் தலைநகரான ஆமூரின் புகழ் நெடுந்தொலைவு பரந்திருந்தது. புகழ் பெருகப் பெருகப் பகை பெருகுமன்றோ? அப்போது சேரநாட்டை ஆண்ட வானவன் ஒருவன் கொடுமுடியை அடக்கி அடிபணிய வைத்திட எண்ணித் தனது பெரிய யானைப் படையை அனுப்பி வைக்கிறான். கொடுமுடியின் வாள்வீச்சாலும், படைத்திறத்தாலும் அவ்யானைகள் தம் கொம்புகளை ஒடித்துக் கொண்டு திரும்பி ஓடிவிட்டன.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

அந்த வானவன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆவன், ஆவன் இமயவரம்பனின் தம்பியாவன். பின்னர் அரியணை ஏறிய செங்குட்டுவனின் சிறிய தந்தையாவான். பல்யானைச் செல்கெழு குட்டுவனின் யானைப்படை பெரும் புகழ் பெற்றது. ஒரு பகற் பொழுதில் வங்கக் கடல் நீரும், அரபிக் கடல் நீரும் ஒரு சேரக் கொண்டு வரக்கூடியவை. தனது படை தோற்றுவிட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பல்யானைச் செல்கெழு குட்டுவன்

தானே முன்னிற்று படையெடுத்து வந்து கொடுமுடியை வென்று ஆமூர்க் கோட்டையைத் தரை மட்டமாக்குகிறான். புரவிப் படை வேழப்படை, தேர்ப்படை, காலாட்படை அனைத்தையும் அனுப்பிப் போரிடுகிறான். ஐயவி என்னும் பொறியால் கோட்டைக்குள் வில் மழை பொழிகிறான். அகப்பா எனப்படும் உள்ளரணையும் தாக்கி ஆமூரை அழித்தே விடுகிறான். போர் வெற்றிக்குப்பின் அவனது படைஞர் நொய்யலாற்றில் இறங்கி நீர் விளையாடியபோது எழுந்த குரலோசை பேய்களையும் அலற வைத்தது. (பதிற்றுப்பத்து-22).

கவுதமனார்

இதனைப் பாடிய புலவர் பாலைக் கவுதமனார் என்பர். முன்னர் ஆமூர்க் கொடுமுடியைப் பாடியவரும் இவரேயாவர். அவர் பாடியுள்ள அகநானூறு 159-ஆம் பாடல் பாலைத் திணை ஆகும். பாலை பாடுவதில் வல்லவர் ஆதலின் பாலைக் கவுதமன் எனப்பட்டார். வயது கூடிய காலத்தில் கவுதமனார் என்று ஆர் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கொடுமுடி இறந்ததும், அந்நாட்டினை மேற்கொண்ட பெருமன்னான பல்யானைச் செல்கெழு குட்டுவனை அண்டிப் பல நன்மைகளை அடைந்தார். பதிற்றுப் பத்தின் மூன்றாம் பத்தினைப் பாடியவர் இவரே.

அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். தான், தன் மனையாளோடு சுவர்க்கம் செல்ல வேண்டுமென்று விரும்பினார். அதற்காகப் பல யாகங்கள் செய்ய வேண்டுமென்றார். இவரது விருப்பங்களைப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பூர்த்தி செய்து யாகங்கள் செய்ய உதவினான். வயதில் முதிர்ந்த பார்ப்பனரைக் கொண்டு சிறந்த முறையில் 9 யாகங்கள் நடைபெற்றன. பத்தாவது யாகத்தின் இறுதியில், பாலைக் கவுதமனாரும் அவரது பார்ப்பினியும் மறைந்து விட்டார்கள் (காணாராயினர்) என்று பதிகம் கூறுகிறது. இக்காலம் கி.பி. முதல் நூற்றாண்டாகும்.

கொடுமுடி : ஊர்—பேர்

பழைய கோட்டையின் மிக அண்மையிலே தான் தற்போதைய திருப்பாண்டிக் கொடுமுடி உள்ளது. எனவே அத்தலைவனின் பெயருக்கும், ஊரின் பெயருக்கும் தொடர்புண்டு எனக் கருத இடமுண்டு. அக்கால ஆமூருக்கு மிக அண்மையில் உள்ள புண்ணிய நதி காவிரி தான். அதனால் அவனது ஈமக்கடன்கள் இங்கு நிறைவேற்றப்பட்டிருக்கலாம். அவனது வீரத்தையும், கொடையையும் போற்றி நடுகல் அமைத்து வழிபட்டிருக்காலம்.

இதுவே காலப்போக்கில் ஈசனது திருநாமமாகவும், ஊரின் பெயராக வும் ஊருமாறி விட்டது. காவிரிக் கரையில் கண்டு பிடிக்கப்பட்ட பனிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு (ARE 284/1961-62)ச் செய்தி இதை உறுதிப்படுத்தும். திரைக்கொற்றவாயில் குடி ஈசனான ஆம்பர நாதப பெருமானனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆமூர்நாதன் என்பதே ஆம்பரநாதன் என மறுவியதாகக் கொள்ளலாம்.

மகுடலிங்கர்—மகுடேசுவர்

திருப்பாண்டிக் கொடுமுடி ஈசனின் திருநமாம் தற்போது மகுடேசுவரர், மகுடலிங்கர், கொடுமுடி நாதர் எனப் பலவாறாக வழங்கி வருகின்றது. மகுடேசுவர் என்பது கொடுமுடி என்பதன் வடமொழி வழக்கு என்பது சொல்லாமல் விளங்கும். அப்பர் சுந்தரர், சம்பந்தர் காலத்திலும், வேள்விக் குடிச் செப்பேட்டுக் காலத்திலும் பாண்டிக் கொடுமுடி என்றே அழைக்கப்பட்டது. பின்னர் கல்வெட்டுக் காலமான 12, 13 நூற்றாண்டுகளில் கொடுமுடி மகா தேவர், கொடுமுடி ஆளுடைய நன்னாயனார், என்றும் அழைக்கப் பட்டது. தமிழ் நாட்டுத் தலங்களின் பெயர்கள் எல்லாமே கி. பி. பதினாலாம் நூற்றாண்டு வாக்கில் வடமொழிப் பெயரில் மாறி வழங்கின. அப்போதைய வடமொழி வேகம் காட்டாற்று வெள்ளம் போலத் திரண்டு வந்து தமிழ்ப் பெயர்களையெல்லாம் அழித்து விட்டுப் போய் விட்டன. பல ஊர்களில் பண்டைத் தமிழ் பெயர் களின் காலத்தடம் கூட இல்லையெனில், அக்கால வடமொழி வெறி வேகத்தை அளவிடக் கருவி ஏது?

திருப்பாண்டிக் கொடுமுடியும், அதற்கு விதிவிலக்கு அல்ல. ஈசனின் திருநாமம் மகுடலிங்கர் என மாறியது. எனினும் ஊருக்குக் கொடுமுடி என்ற பெயர் நிலைத்து விட்டது.

புதிதாக அமைக்கப்படும் நகரங்களில், ஆகம சிற்ப விதிகளின் படி, சிவன் கோயில் நகரத்தின் வடமேற்கு மூலையில் அமையும். கொடுமுடியில் அவ்வாறு இல்லை. அதனால் முதலில் அமைந்த கோயிலைச் சுற்றி ஊர் வளர்ந்து விட்டது எனக் கொள்ளலாம்.

சமயக் குரவர் நால்வர்

அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய சமயக் குரவர் மூவரும் திருப்பாண்டிக் கொடுமுடி வந்துள்ளனர். பாண்டிக் கொடுமுடி ஈசனைப் பாடி பரவச மடைந்துள்ளனர். அப்பர் பெருமான் திருக் குறுந்தொகை என்னும் ஐந்து பாடல்களைப் பாடியுள்ளார். திருக் கொடுமுடி என்றாலே தீவினை அகலும் என்பது அவர் வாக்கு.

புகழ்பெற்ற நமச்சிவாய பதிகம் என்னும் பத்துப் பாடல்களைச் சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றியுள்ளார். கற்றவர் தொழுது புகழும் பாண்டிக் கொடுமுடி எனப் பாராட்டுகின்றார்.

திருஞானசம்பந்தர் தன் பதிகத்தால் இசைமாரி பொழிந்துள்ளார். கானமர் மஞ்ஞைகள் ஆடும் கோலக் காவிரி என மகிழ்ந்து போனார்.

மாணிக்கவாசகப் பெருமான், கொடுமுடி வந்ததாகத் தெரியவில்லை. எனினும் வைப்புத் தலமாகக் கொடுமுடியை நினைந்து பாடியுள்ளார். தில்லையிலருளிய ஆனந்தமாலையின் ஏழாவது பாட்டில்,

> ''அரிய பொருளே, அவிநாசி யப்பா,
> பாண்டி வெள்ளமே''

என விளித்து வணங்குகிறார்.

வேள்விக்குடிச் செப்பேடு

கி பி. 765 முதல் 795 வரை அரசாண்டவன் பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன் பராந்தகன். அவன் தந்தை அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்ற தேர்மாறன். கொங்கு நாட்டில் பல போர்க்களங்களில் பங்கேற்று வெற்றியுலா வருகிறான். மழகொங்கத்தை அடிப்படுத்தியதும், காவிரியைத் தாண்டி கொடுமுடி வந்து சேருகிறான். அப்போதே திருக்கோயில் சிறந்து விளங்கியது. எழில் சேர்ந்து நெடிதுயர்ந்திருந்தது கோயிலின் மதிற்சுவர். பசுபதி ஈசனைத் தெண்டனிட்டு வணங்கி, பொன்னும் மணியும் காணிக்கையாக வழங்குகிறான். வேள்விக் குடிச் செப்பேடு தேர்மாறனின் மகன் நெடுஞ்சடையன் வழங்கியது.

அதில் ஈசனின் பெயர் பசுபதி என வருவது கொண்டு அவன் வணங்கிய தலம் கரூர் பசுபதீச்சுரமாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர். கொடுமுடி ஈசனையும் பசுபதி என்றழைக்கும் வழக்கம் இருந்ததால், இவ்வாறு மலைந்து பொருள் கொள்ள வேண்டுவதில்லை. புலவர் செ. இராசு வசம் வந்து சேர்ந்த ஓலைச் சுவடிகளில் ஒரு ஒத்தை ஓலை கிடைத்துள்ளது. ஒரு கட்டு ஓலையில் அது 33 வது ஏடு. ''கொடுமுடி பசுபதி லிங்கர் பேரில்'' என்று தலைப்பிட்டு ''திங்களணி வேணியும்'' என்று தொடங்கும் விருத்தப் உள்ளது. எனவே கொடுமுடி ஈசனையும் பசுபதி என்றழைக்கும் வழக்கம் தொடர்ந்து இருந்து வந்துள்ளதை அறியலாம்.

சோழன் பூர்வ பட்டயம்

தமிழ்நாடு அரசாங்கத்தின் பழஞ்சுவடி நூலகத்தில் சோழன் பூர்வ பட்டயம் என்ற நூல் கிடைத்துள்ளது. அந்தச் செய்தி எழுத்து வடிவம் பெற்றது பிற்காலம். எனினும் நிகழ்ச்சிகள் நடந்ததாகச் சொல்லப்படும் காலம் மூன்றாம் குலோத்துங்கன் காலம். அவனுக்குக் கரிகால் சோழன் என்ற பெயரும் உண்டு,

கொங்கு நாடு அக்காலத்தில் சீர்திருத்தம் அடையாமல் இருந்ததாம், அதனால் ஆட்சி முறையைச் செப்பம் செய்ய கரிகாலன் தன் பரிவாரங்களுடன் வருகிறான். பல ஊர்களில் கோயில் கட்டி குளம் வெட்டி விழா எடுக்கிறார்கள். சிவன் கோயில்களில் விழா எடுக்குமுன் உள்ளூர் தேவதைகளுக்கு பலிபூசை செய்ய ஏற்பாடு செய்கிறான், சில இடங்களில் நரபலி கூட நடக்கின்றது அந்த வகையில் கரூரிலிருந்து கொடுமுடிக்கு வருகிறார்கள்.

கொடுமுடியில் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தலைவரை நியமிக்கிறான். கோயிலுக்கு மானியம் விட்டு கல்லிலும் ஓலையிலும் எழுதித் தருகிறான். கோயிலுக்குப் புனருத்தாரணம் செய்கிறான்.

கல்வெட்டுக்கள்

தற்போது வீரநாராயணப்பெருமாள் சந்நிதிக் கருவரையில் பின் புறம் ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் உள்ளது. ஆனால் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து கல்வெட்டுக்கள் இருந்தன. திருக் கோயில் அவ்வப்போது புதுக்கப்படும் போது, அவர்களின் அறியாமையால் அவை அழிந்து விட்டன. மெக்கன்சி என்ற வெள்ளைக் காரர், அந்தந்த ஊரில் உள்ளவர்களையே பயன்படுத்தி, கல்வெட்டுக் களைப் படித்து காகிதத்தில் பிரதி செய்து வைத்திருந்தார். அவை மிகவும் பிழைப்பட படிக்கப்பட்டுள்ளன தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் என்ற நூலில் அவற்றை அச்சிட்டுள்ளனர். வாசகத்தில் படித்தவர்கள் பிழை செய்து இருந்திருந்தாலும், செய்தியை ஓரளவு யூகிக்க முடிகிறது.

புகலூரான் வாய்க்கால் கரை நந்தவனக் கட்டிடத்தில் ஒரு கல் வெட்டு இருந்ததாகத் தெரிகிறது. அதன் வாசகம் கிடைக்கவில்லை. காவிரிக் கரையில் இரண்டு கல்வெட்டுக்களை மைசூரிலுள்ள, தொல்லெழுத்துத் துறை படியெடுத்துள்ளது. ஆனால் அவற்றின் முழுவாசகம் வெளியிடப்படவில்லை. தற்போது அக்கற்கள் எங்குள்ளன என்றும் தெரியவில்லை.

கல்வெட்டுக்கள், சுந்தர பாண்டியன், வீர நாராயணன், ரவி வர்மன் முதலியோர் அளித்துள்ளனர்.

சேக்கிழார்

சிவன்பால் சிந்தை முழுவதும் செலுத்தியதால் சிறப்புப்பெற்ற சிவனடியார்கள் வரலாற்றைத் தொகுத்துத் தந்தவர் சேக்கிழார் பெருமான். இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133முதல் 1145 வரை) அவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். அதனால் அக்காலத் தமிழ் நாட்டின் அரசியல் எல்லைகள், சமுதாயப் பண்புகள் முதலியவற்றைத் தெளிவாகத் தந்துள்ளார்.

ஞானசம்பந்தர் திருச் செங்கோட்டில் தரிசனம் முடித்துக் கொண்டு 'முப்புரி நூலுடன், தோலணி மார்பர் முனிவரோடும் செப்பரும் சீர் திருப்பாண்டிக் கொடுமுடி சென்றணைந்தார்' எனக் கூறுகிறார் சேக்கிழார். பருவம் மாறாத பொன்னி நதி சூழ்ந்த பாண்டிக் கொடுமுடியார் பாதம் மருவி வணங்கி வளம் மிக்க தமிழ் மாலை சாத்தி மகிழ்ந்தாராம்.

சுந்தரர் சுற்றுலாவிலும் பாண்டிக் கொடுமுடி இடம் பெறுகிறது. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் இவை கூறப்படுகின்றன. நமச்சிவாயப் பதிகம் பாடி மகிழ்ந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

அருணகிரி நாதர்

குமரக் கடவுளைப் பாடுவதையே தன் பணியாகக் கொண்டவர் அருணகிரியார், தவறான வழி மேற்சென்ற தன்னைத்தடுத்தாட் கொண்ட குமரவேளை ஊர் தோறும் சென்று வணங்கித் தன் சந்தத் தமிழால் பாடிப்பணிவார்.

கொடிமுடிக் குமரனை அணுகி 'இருவினைப் பிறவிக் கடலில் மூழ்கடித்துத் துன்புறுத்தாமல் திருவருட் கருணை பொழிய' வேண்டுகிறார். பின்னர் வயலூர் சென்று முக்தியடைகிறார். வயலூர் திருச்சிக் கருகில் உள்ள தலம். வயலூர் சென்ற பின்னும் மீண்டும் கொடுமுடிக் குமரனை நினைத்து புகழ்ந்து ஏத்துகின்றார்.

சர் பிரான்சிஸ் புக்கானன்

கி. பி. 1800 இல், ஆங்கில ஆட்சியின் இந்தியா ஆளுநர் மாண்பமை மார்க்கஸ் வெல்லெஸ்லி அவர்கள் இந்தியா நாட்டின்

கலை, பண்பாடு, வரலாறு பற்றி அறிந்து கொள்ள விரும்பினார். சர் பிரான்சிஸ் புக்கானன் என்ற அறிஞரை அழைத்து, நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து, வேளாண்மை, கலை, வாணிபம், சமயம், பழக்கவழக்கங்கள் இயற்கை, அரசியல், பழமை வரலாறு பற்றி அறிக்கை தரும்படி கட்டளையிடுகிறார். இருப்புப் பாதைகள் போடுவதற்கு முந்திய காலம் சில உதவியாட்களை அழைத்துக் கொண்டு புறப்படுகிறார். திப்பு சுல்தானிடமிருந்து, கம்பெனி கைப் பற்றிய பகுதிகள், மைசூர் மன்னர் நாடு, கேரளம் முதலிய இடங்களில் பயணம். முதலில் சென்னையிலிருந்து பயணமாகிறார். அருமை மிகுந்த ஆவணம் அது.

1980 ஆம் ஆண்டு நவம்பர் பத்தாம் நாள் பாகூரிலிருந்து கொளாநல்லி வழியாகக் கொடுமுடி வந்து சேர்ந்தார். இந்தியாவில் தான் கண்ட காட்சிகளில் எல்லாவற்றிலும் இது அழகான வழி என்று உளமாரப் புகழுகிறார். இங்கிலாந்தைப் போல மரங்கள் செழித்து வளர்ந்தனவாம். "A great part of the route led me through a country fully cultivated aud inclosed; and although not so well wooded as England, yet I think on the whole, the most beautiful that I have seen in India" என்பதே அவர் குறிப்பு. அப்போது கொடுமுடிக் கோவிலில் 11 பிராமணரும் 21 பேர் இசைஞரும், நடனமாதரும் இருந்தனராம். கோயில் மிகவும் எளிமையாக இருந்ததாம்; மக்கள் புதிய வீடு கட்டிக் கொள்ள அரசாங்கம் கடன் கொடுத்து உதவிற்றாம். புகளூர் வாய்க்காலைப் பற்றியும், பிராமணருக்களிக்கப்பட்ட இனாம் பூமிகளைப் பற்றியும் கூறுகிறார். புக்கானன் அவர்களின் அறிக்கை 175 ஆண்டுகட்கு முந்திய கொடுமுடியைக் கண்முன் நிறுத்துகின்றது.

திருக்கோயில்

ஊருக்கு அணியாகத் திகழுவது மகுடேசுவரர் கோவில். இங்கு வீரநாராயணப் பெருமாளுக்கும் கோயில் உண்டு. வன்னி மரத்தடியில் பிர்மா எழுந்தருளியுள்ளார் பண்மொழியம்மை, திருமகள் ஆகிய மூர்த்தங்கள் உண்டு. வடமொழியிலும், தமிழிலும் தலபுராணங்கள் உண்டு. வழிபட வந்தோர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

படிமங்கள்

கோயிலின் பல புகழ் பெற்ற செப்புப் படிமங்கள் உள்ளன அவற்றுள் முதன்மையானது திரிபுராந்தகர், நடராசர், விஷ்ணு

ஆகியன. 1961 ஏப்ரலில் வந்த லலித்கலா ஒன்பதாம் இதழில் இவை படங்களுடன் வெளியாகி உலகப் புகழ் பெற்றுள்ளன. தமிழகத் தொல்லியல் துறை இயக்குனர் Dr. நாகசாமி அவர்களே அக் கட்டுரை ஆசிரியராவர்.

காவிரி

வடக்கே இருந்து ஓடிவந்த காவிரி இங்கு கிழக்கு நோக்கித் திரும்புகிறது. வட்டமாசிலை கொண்டு ஈசனது அடி தொழுவதாகப் புலவர்கள் பாடியுள்ளனர். எனினும் காவிரியால் பாசனப் பயன் இங்கில்லை.

பாசனம்

முப்போகம் விளையும் நஞ்சை நிலங்கள் சூழ்ந்ததுகொடுமுடி. பவானி காவிரியில் கலக்கப்படுவதற்கு முன்பு கட்டப்பட்டுள்ளன அணையிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் பிரிந்து வயலை விளைவிக்கின்றது. அதற்கு மேலே கீழ்பவானி அணையில் சிவகிரிக்கிளை வாய்க்கால் பாசனந் தருகிறது. நெல்லும் கரும்பும், வாழையும், மஞ்சளும், கடலையும் இன்னும் எல்லாப் பயிர்களும் வளம் கூட்டுகின்றன.

சேரர் வழிமுறை

பண்டைத் தமிழ் நூல்களில் தொடர்ச்சியான வரலாற்றுக் குறிப்புகள் கொண்ட நூல்களுல் பதிற்றுப்பத்து தலையாயது. எனினும் அதிலுள்ள குறிப்புகள் வரலாறு எழுதப் போதுமானவை அல்ல. பிற சான்றுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் சேரர் வழி முறையை உறுதி செய்ய வேண்டியுள்ளது, அவ்வாறு சேரர் வழி முறையை ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கம்.

முந்தைக் கருத்துக்கள்

சேரர் வழி முறை பற்றி ஆராய்ந்தவர்களுள் மு. இராக வய்யங்கார் ஒருவர். அவர் கருத்துப்படி சேரன் செங்குட்டுவன் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன்; கொங்கு நாட்டுக் கரூரே சேரர் தலைநகரான வஞ்சி.

நீதிபதி கே. ஜி. சேசையர் அவர்களின் கருத்துப்படி சேரர் வமிசம், கேரளத்துக் கொடுங்கோளூர்-வஞ்சியை தலைநகராகக் கொண்டு ஒரு பிரிவினரும் கொங்குச் கரூரைத் தலைநகராகக் கொண்டு ஒரு பிரிவினரும் ஆக இரண்டு வம்சம் ஆகும்.

நாவலர் சோமசுந்தர பாரதியார், சேரர் வமிசம், மருமக்கட் தாய முறைப்படி பெண் வழி வமிசம் என்றார்.

சேரர் வம்சவாளி பற்றிய ஆராய்ச்சிகளில் மயிலை. சீனி வேங்கடாசாமி அவர்களுடைய கருத்து முக்கியமானதாகும். இக் கட்டுரை ஓரளவு இவருடைய கருத்துக்களை அடியொட்டி, சில புதிய யோசனைகளைக் கூறும்.

கல்வெட்டுச் சான்றுகள்

சேரர் வமிசத்தை ஆராய உதவும் ஒரே தமிழ்க் கல்வெட்டு கொங்கு நாட்டுக் கரூரை அடுத்துள்ள புகளூர், ஆர் நாட்டா மலைக் கல்வெட்டு ஆகும். அதில் மூன்று அரசர்களின் பெயர் வருகிறது.

"கோ ஆதன் சே(ர)லிரும் பொறை மகன்
பெருங்கடுங்கோ மகன் இளங்கடுங்கோ
இளங்கோ ஆக அருத்த கல்"

என்பது அதன் வாசகம். இதில் வரும் சேர அரசர்களை பதிற்றுப் பத்து 7, 8, 9, பத்துக்களில் பாட்டுடைத் தலைவர்களோடு ஒப்பிடுவர் ஆராய்ச்சியாளர்.

கல்வெட்டுப் பெயர்	பாட்டுப் பெயர்
1. கோ ஆதன் சேல்லிரும் பொறை	செல்வக் கடுங்கோ வாழியாதன்
2. பெருங்கடுகோன்	தகடூர் எரிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
3 இளங்கடுங்கோ	குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

இதன் மூலம் இரண்டு செய்திகள் உறுதிப்படுகின்றன. ஒன்று சேரர் வழி மருமக்கட் தாயம் அல்ல; மகன், மகன் வழியே ஆகும். இரண்டு: பதிற்றுப் பத்துப் பதிகங்களில் உள்ள வரலாற்றுச் செய்திகள் உண்மையே.

இதே கல்வெட்டில் "கருஊர் பொன் வாணிகன்......... அத்தி அதிட்டானம்" என்றும் வருகிறது. இதனால் கரூர் அக்காலத்தில் பேரூராக இருந்துள்ளதை அறியலாம்.

மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கருத்து :

உதியஞ்சேரலும், அந்துவனும் தாயாதிகள். உதியஞ்சேரலுக்கு இரண்டு மக்கள். மூத்தவன் நெடுஞ்சேரலாதன். இளையவன் பல் யானைச் செல்கெழுகுட்டுவன் நெடுஞ்சேரலாதன், பதுமன்தேவி நற்சோணை என இரண்டு மனைவியரை மணந்து கொண்டான். பதுமன்தேவி, நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என இரு மக்களை ஈன்றாள். செங்குட்டுவனும், இளங்கோவும் நற்சோணை வயிற்றில் தோன்றினர்.

அந்துவன் வழியில் செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ் சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகியோர் ஒருவர் மகன் ஒருவராகத் தொடர்ந்து தோன்றினர்.

அவர்களுடைய காலம் வருமாறு

1.	(இமயவரம்பன்) நெடுஞ்சேரலாதன்	(58)	கி. பி 72—130
2.	பல்யானைச் செல்கழு குட்டுவன்	(25)	கி. பி 82—107
3.	நார்முடிச் சேரல் (வானவரம்பன்)	(25)	கி பி 120—147
4.	சேரன்செங்குட்டுவன் (இமயவரம்பன்)	(55)	கி. பி 130—175
5.	ஆடுகோட்பாடுச் சேரலாதன் (வானவரம்பன்)	(38)	கி. பி 140—178

இவர்கள் அனைவரும் கேரளத்துக் கொடுங்கோளூர்-வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மூத்த வழியினர். இவர்கள் காலம் ஒருவர் மீது அடுத்வர் படிந்து (over lap) இருப்பதற்கான காரணம், பதிற்றுப் பத்துப் பதிகத்தில் கணக்கிட்ட ஆண்டு முறை அவ்வரசர் இளவரசுப் பட்டம் கட்டியதிலிருந்து கணக்கிட்டதாக இருக்கலாம் என்கிறார்.

இமயவரம்பன், வானவரம்பன் என்ற பட்டங்களை மாறி மாறிச் சூடிக் கொண்டனர்.

1.	செல்வக் கடுங்கோ வாழியாதன்	(25)
2.	தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை	(17)
3.	குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை	(16)

இவர்கள் கொங்குக் கருரைத் தலைநகராகக் கொண்டு, ஆட்சி செய்தவர்கள். இளஞ்சேரல் இரும்பொறை கண்ணகிக்குக் கோயில் எடுக்கும் முன்னரே இறந்து விடுகிறான்.

இவருடைய காலக் கணக்கீட்டையும், வம்சாவளியையும் அப்படியே ஏற்றுக் கொண்டு புதிய யோசனைக்கு வரலாம்.

மூன்று தலைநகர்

இரும்பொறை வம்சம் கருரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்.

வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்களுள் காலக் கணக்கு ஒருவர் மீது ஒருவர் படிவதற்கு ஆன காரணம் இளவரசுப் பட்டம் கட்டிய காலத்திலிருந்து கணக்கிட்ட தென்பதை விடுத்தது வேறு வகையில் சிந்திப்போம்.

இந்த ஐந்து மன்னர்களும் இரு வேறு தலைநகர் இருந்து ஆண்டனர் எனக் கொள்ளலாம்.

முதல் ஊர்

1. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (58) கி. பி. 72—130 வரை
2. ,, சேரன் செங்குட்டுவன் (55) கி.பி. 130—185 வரை

சிலப்பதிகாரத்தில் நெடுஞ்சேரலாதன் மக்களாகச் செங்குட்டுவனும், இளங்கோவுமே குறிப்பிடப்படுகின்றனர். இளங்கோ துறவியானார். நெடுஞ்சேரலாதனுக்குப் பிறகு செங்குட்டுவன் அரியணை ஏறினான்.

இரண்டாவது ஊர்

1.	பல்யானைச் செல்கெழுகுட்டுவன்	(25) கி. பி. 82—107
2.	நார்முடிச் சேரல்	(25) கி. பி. 120—145
3.	ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்	(38) கி. பி. 140—178

இதில் உள்ள ஆண்டுகள் தோராயமானவையே. தொடர்ச்சியாக அமைய சிறு மாறுபாடுகளே தேவை. இவற்றை உறுதியாக வரையறுத்துக் கூற வேறு சான்றுகள் இல்லை. அதனால் இம்மூன்று அரசர்களின் ஆண்டையும் தொடர்சியாக எடுத்துக் கொள்வதால் தவறேதும் இல்லை.

இமயவரம்பன் - வானவரம்பன்

முதல் ஊரில் ஆண்ட மன்னர்கள் இமயவரம்பன் என்ற பெயரையும் இரண்டாவது ஊரில் ஆண்டமன்னர்கள் வானவரம்பன் என்ற பெயரையும் சூடிக் கொண்டார்கள் என்பதே பொருந்தும். ஒரே ஊரில், அடுத்தடுத்து ஆண்டவர்கள், மாறிப் மாறிப் பெயர் சூடிக் கொண்டனர் என்பது பொருத்தமாக இல்லை.

நெடுஞ்சேரலாதன்	—	இமயவரம்பன்
அவன் தம்பிகுட்டுவன்	—	(பட்டம் இல்லை)
நார்முடிச் சேரல்	—	வானவரம்பன
செங்குட்டுவன்	—	இமயவரம்பன்
ஆ. கோ. சேரலாதன்	—	வானவரம்பன்

இந்தப் பட்டியல் பல்யானைச் செல்கெழுகுட்டுவனுக்குக் பொருத்தவில்லை. அதுவே இரண்டாவது ஊர் எனக் கொள்ளும் போது குட்டுவன் முதல் மன்னன் ஆகிறான். அதனால் அவனை விடுத்துப் பின்னர் வந்தோர் 'வானவரம்பன்' என்று பெயர் சூட்டிக் கொண்டனர் என்பது பொருந்தும்.

கொங்கூர் (தாராபுரம்)

நெடுஞ்சேரலாதனும், செங்குட்டுவனும் இருந்த ஊர் வஞ்சி என்பதில் ஐயமில்லை. அந்த இரண்டாவது ஊர் எது?

"கொங்கு தேசராசாக்கள்" என்ற நூலில் கொங்கு நாட்டை ஆண்ட மன்னர்கள் வரலாறு கதை போலக் கூறப்பட்டுள்ளது. அதில் வடமொழிக் கலப்பும் பேச்சு வழக்கும் மிகுந்து விட்டதால் உண்மை தெளிவாக விளங்கவில்லை.

டாக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள் கருத்துப்படி கி. பி 250 முதல் 405 வரை அரசாண்ட இராட்டிரகூட மன்னர்களைப் பற்றியும் 405 முதல் 870 வரை ஆண்ட கங்கர்களைப் பற்றியும் "கொங்கு தேச ராசாக்கள்" உறுதி செய்கிறது.

இதில் இரட்டர்களுக்கும், சில கங்கர்களுக்கும் தலைநகரம் "ஸ்கந்த புரம்" என்று சொல்லப்படுகிறது. ஸ்கந்தன் கந்தனைக் குறிக்கும், கந்தனுக்குக் காங்கேயன் என்றும் பெயருண்டு. அதனால தற்போது 'காங்கயம்' 'காங்கேயம்' என அழைக்கப்படும் ஊரே ஸ்கந்தபுரம் என்றார், ஆரோக்கியசாமி அவர்கள். இது வலிந்து பொருள் கொள்வதாகும்.

தாராபுரத்திற்கு அருகில் "கொங்கூர்" என்ற பெயரில் ஒரு சிற்றூர் உண்டு.

ஸ்கந்தம் — மணம் — கொங்கு

எனவே கொங்கூர் என்பதே ஸ்கந்தபுரம் என்று ஆயிற்று என புலவர் இராசு அவர்கள் கருதுகிறார்கள். தாராபுரம் இராச ராசபுரம் என்பதன் திரிபு ஆகும். தாராபுரத்தில் கோயில் கல்வெட்டு ஒன்று "கொங்கூர் வஞ்சியாகிய இராசராபுரம்" என்று சொல்கிறது. நாட்டுப் பாடல் இதை "வன்பெறு வஞ்சி" எனப்பாடும்.

கொங்கூர் புதுப்பிக்கப்படும் போது "இராசராசபுரம்" எனப் பெயரிடப்பட்டது. பின்னர் தாராபுரம் என மருவி வழங்குகிறது (தஞ்சை மாவட்டதுத் "தாராசுரம்" அதன் இயற்பெயராகிய இராசராசபுரம் என்பதன் திரிபு ஆகும்.)

எனவே ஸ்கந்தபுரம் ஆகிய கொங்கூரே பல்யானைச் செல்கழு குட்டுவன் முதலாக ஆண்ட சேர மன்னன் தலைநகராகும்.

பதிற்றுப்பத்தில் சொல்லப்பட்ட எட்டு மன்னர்களும், வஞ்சி, கொங்கூர், கருர் ஆகிய ஊர்களைத் தலைநகராக வைத்து ஆட்சி செலுத்தினர். இவர்களிடையே நிறைந்த ஒற்றுமை இருந்தது. அனைவரும் சேர மரபினரே என்ற பெருமை இருந்தது. இதில் வஞ்சி யிலிருந்து ஆட்சி செய்தவர்களே பெரும் பேரரசர்களாகக் கருதப் பட்டனர். மற்றவர்கள் அவர்களோடு ஒத்துழைத்து சேர நாட்டை விரிவு படுத்தி நல்லாட்சி நல்கினர்.

கந்தபுரம்

தமிழக வரலாற்றிற்கு ஆதாரங்கள் தரும் மூல நூல்களில் "கொங்கு தேச ராசாக்கள்" குறிப்பிடத்தக்க நூலாகும். மிகவும் பிற்காலத்தில் தமிழில் பிழைபட எழுதப்பட்டிருந்த போதிலும் அதில் வரும் விவரங்கள் பல பிற இலக்கியக் கல்வெட்டுச் சான்று களால் உறுதி செய்யப்பட்டுள்ளதால் அதையும் வரலாற்று விவரம் தரும் மூல நூலாக எடுத்துக்கொள்ள அறிஞருலகம் முன் வந்துள்ளது.

பிற்காலச் சோழர் ஆட்சிக்காலம் வருமுன்னர் கொங்கு நாட்டில் ஆட்சி செய்த ரெட்டி குல மன்னர் எண்மர் கங்கர் இருபதின்மர் பற்றிய செய்திகளைத் தருகிறது அந்நூல். ரெட்டி குலமும் கங்கர் குலமே என்று கோவைக் கிழார் கருதுகிறார்.

கங்கர்களில் பலர் தமிழறிந்தவர்களாகவும், வடமொழிப் புலவர் களாகவும் இருந்திருக்கின்றனர். நன்னூல் எழுதிய பவணந்தி முனிவரை ஆதரித்தவன் சீயகங்கன் என்பான். துருவிநீதன் என்பான் 'கிரார்தாஜுனியம்' என்ற வடமொழிக் காப்பியத்திற்கு உரை எழுதினான். இவர் காலத்தில், 'பிரகத்கதா' என்ற காப்பி யத்தைக் குணாட்டியர் என்பார் பைசாச மொழியில் எழுதினார்; கொங்குவேள் அதைத் தமிழில் பெருங்கதையாக உருவாக்கினார்.

பெருங்கதை ஐம்பெருங் காப்பியங்களுக்கு இணையாகக் கருதப் படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியை இயற்றிய திருத்தக்கதேவரை ஆதரித்தவனும் ஒரு கங்க மன்னனே ஆவான்.

'வன்பெருவஞ்சிப் பொய்யாமொழி புகழ்

திருத்தகு மாமுனி'

என சீவகசிந்தாமணி பற்றிய பாடல் கூறுகிறது. இதில் பொய்யா மொழி என்ற சொல் சத்தியவாக்கிய கொங்கனி வர்மன் என்ற கங்க மன்னனையும் வன்பெறு வஞ்சி என்றது கங்கர் தலைநகர் ஸ்கந்தபுரத்தையும் குறிக்கின்றது.

கங்கர்களின் தலைநகரமான ஸ்கந்தபுரம் எது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கொங்குதேச ராசாக்கள் கதையின்படி ரெட்டி மன்னர்கள் எண்மரும் கங்கர்களில் இருவரும் ஸ்கந்தபுரத்திலிருந்தே ஆண்டிருக்கின்றனர். பதினோராவது மன்னனே தலைக்காட்டிற்கு மாற்றிக் கொண்டான்.

கந்தபுரம் பற்றி மூன்று கொங்கத்து அறிஞர்களின் கருத்துக் களைக் காண்போம். முதல்வர் திரு புலவர் குழந்தை அவர்கள், நீலமலையின் அடிவாரத்தில் பவானி ஆற்றின் கரையில் அமைந் துள்ள டனாய்கன் கோட்டையாக இருக்கலாம் என்கிறார்.[1] இது அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை. 'அக்காலத்தே இங்கு வந்துபோன மேனாட்டு யாத்திரையரும் காந்தபுரம்—ஆற்றங் கரையில் நஞ்செய் நிலத்தின் நடுவில் இருந்ததாகக் குறித்துள்ளனர். என்று புலவர் குழந்தை அவர்கள் குறித்துள்ளார்கள். இது பின்னர் கூறப்போகும் ஊருக்கும் அாணாக அமைவதைப் பின்னர் காண்போம். அந்த யாத்திரையர் யாரென்று தெரியவில்லை.

இரண்டாமவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றிய, காலஞ்சென்ற டாக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள்.[2] இவரது கருத்துபடி காங்கயம் கந்தபுரமாகின்றது. கந்தன் என்பது முருகனின் பெயர், முருகனுக்கு இன்னொரு பெயர் காங்கேயன். எனவே காங்கேயம்-காங்கேயம்-கந்தபுரம் என்கிறார். இது மிகவும் வலிந்து பொருள் கொள்ளலாகத் தெரிகின்றது.

அடுத்தவர் கோவைக்கிழார்.[3] கொங்குநாடு பற்றிய சமுதாய அரசியல் வரலாறு பற்றி நீண்ட ஆராய்ச்சிகளின் பயனாக பல தெளிவான கருத்தக்களை உருவாக்கியவர் எனலாம். அவர் கருத்துப்படி தாராபுரம் கந்தபுரம் ஆகும். இது ஓரளவு பொருந் துமாறு உள்ளது. கொங்கு நாடு அமராவதி ஆற்றின் கரை யில் அமைந்துள்ளது. நஞ்சை சூழ்ந்த பகுதி. தலைநகராகும் தகுதி எல்லாவிதத்திலும் பெற்றுள்ளது. கோவை, மாவட்டத் தலைநகராகும் முன்னர் தாராபுரமே தலை நகராக இருந்ததை புக்கானன் அவர்களின் பயண நூலால் அறியலாம். தாராபுரம்

1. கொங்கு நாட்டு வரலாறு-புலவர் குழந்தை
2. Congu Country - M. Arokyaswamy
3. கொங்கு நாட்டு வரலாறு-கோவைக்கிழார்
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்

என்பது இராஜராஜபுரம் என்பதன் திரிபேஆகும், கந்தனை-முருகன் தாருகனுக்கு அந்தகன். தாருகனுக்கு அந்தகன்புரம்-தாராபுரம் என்று சிலர் கருதுவதாகக் கோவைக் கிழார் அவர்கள் கூறுகிறார்கள். இந்த விளக்கமும் வலிந்து கொள்ளும் பொருளே ஆகும்.

தாராபுரத்திற்கு அண்மையில் கொகூர் என்ற ஊர் உள்ளது. சுமார் பத்து கல்தொலைவில் உள்ளது. இந்தக் கொங்கூரே கந்த புரம் எனப் புலவர் இராசு அவர்களும், புலவர் வே. ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்களும் கருதுகின்றனர்.

கொங்கூர் - கொங்கு . ஊர் என்ற சொற்களின் கூட்டாகும்' கொங்கு என்றால் மணம், அதன் வடசொல் ஸ்கந்தம். எனவே ஸ்காந்தம் + புரம் ஸ்கந்தபுரம் ஆயிற்று. இதுவே நேர் மொழி பெயர்ப்பு.

ஸ்கந்தம் என்பதை மட்டும் எண்ணி, அதன் மூலம் அறிய முனைந்தபோதே காங்கேயன் போன்ற வழுவல்கள் ஏற்பட நேர்ந்தது. இப்போது கூடப் 'பல்லவா போக்கு வரத்துக் கழகம்' என்று எழுதப்படுவதைப் பார்க்கின்றோம். பல்லவப் பேரரசு என்பது போலப் பல்லவப் போக்குவரத்து என்றே எழுதியிருக்க வேண்டும்.[4] அதையே ஆங்கிலத்தில் Pallava Tranport Corporation என்று எழுதிப் பின்னர் தமிழில் மொழிப்பெயர்த்தாலேயே பல்லவா போக்கு வரத்து என இடர்படநேர்ந்தது. டாக்டர்ஆரோக்கியசாமி அவர்கள் மயங்கியது இதைப் போலவே ஆகலாம் கொங்கூர் என்பதன் நேர் மொழிபெயர்ப்பு ஸ்கந்தபுரம் எனக் கொண்டால் பிழை ஏற்பட வழியில்லை.

கொங்கூரில் ஆண்ட கங்கர்கள் காலப்போக்கில் புதிய தலை நகர் அமைக்க விரும்பியபோறு அதன் அண்மையில் இராரஜாஜ புரம் என்னும் புதிய தலைநகரை அமைத்துக் கொண்டனர். அதுவே பின்னர் தாராபுரம் எனப் பெயர் பெற்றது. கங்கவம்சந்து ரெட்டிகுலத்து எட்டாவது மன்னன் 'கொங்கணிவர்ம மகாதிராயன் விஜய ஸ்கந்தபுரந்தில் பட்டம் கட்டிக் கொண்டதாகக் 'கொங்கு தேச ராஜாக்கள்' கூறுகிறது. இதுவே புதிய தலை நகர் அமைந்த காலமாகலாம்.

பிற்காலத்திய கல்வெட்டு ஒன்று 'கொங்கூர் வஞ்சியாகிய இராசராசபுரம்' (ஏ. ஆர். இ. 1920) என்று கூறுகிறது. வன்பெறு

---

4. தற்போது இதனை மாற்றி "பல்லவன் போக்குவரத்துக் கழகம்" என்று மாற்றிவிட்டனர்.

வஞ்சி என்று நாட்டுப்பாடல்கள் பாடுகின்றன, கருரையும் வஞ்சி என்று நாட்டுப் பாடல்கள் கூறுகின்றன, அதனால் பிரித்து அறியும் பொருட்டு இந்த பெருவஞ்சி என்று அழைத்தனர் விஜயஸ்கந்த புரம் என்று தாராபுரம் அழைக்கப்பட்டதற்கு இணையாகக் கொள்ளலாம்.

கங்கர்கள் தமிழர்களா? என்ற ஐயம் எழுவதுண்டு, தமிழ் பேசித் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்துள்ளனர். அத்துடன் வடமொழியிலும் புலமை பெற்றிருந்தனர், காலப் போக்கில் அவர்கள் ஆட்சிப் பரப்பின் ஒரு பகுதியில் மொழி மாறிக் கன்னடமாக உரு மாறவே, மைசூர் மாநிலக் தலைக் காட்டிற்கு மாறிக்கொண்டனர்.

கொங்கூர் ஸ்கந்தபுரம் என்ற கருத்தை அறிஞருலகம் ஏற்கும் வகையில் வலியுறுத்துவதே இதன் நோக்கம்.

21-5-72 அன்று தமிழகத் தொல்லியல்துறை சென்னையில் நடத்திய 'தமிழக வரலாற்றில் குறுநில மன்னர் பங்கு' என்ற கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

சுக்காலியூர்

தமிழ் நாட்டில் சமண சமயம் பெருவாரியாகப் பரவியிருந்த காலங்கள் உண்டு. அப்போது சமண முனிவர்கள் அமணர்களாக இயற்கைக் குகைத் தளங்களில், ஊரை விட்டு ஒதுங்கி வாழ்ந்து வந்திருக்கின்றனர். அத்தகைய குகைத் தளங்களில் ஒன்று சுக்காலி யூர் சமணக்குன்று. இதுவரை தொல்லியல் துறைகளின் பார்வைக் குப் படாமல், விரைவில் அழியத்தக்க நிலையில் உள்ளது. அது பற்றிய விவரம் தருகிறது இக்கட்டுரை.

அமைவிடம் :

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், சுக்காலியூர் என்ற சிற்றூ ருக்குத் தெற்கே அமைந்துள்ளது. கரூர்—திண்டுக்கல் நெடுஞ் சாலையில் (NH—7), 305/8 கி.மி. கல்லருகே சாலைக்கு மேற்கே உள்ளது. ஒரு தொடர்ச்சியான கரடுகளின் கடைசிப் பகுதி இக் குகை அமைந்துள்ள குன்றாகும். சுமார் 30 மீ. உயரக்குன்றின் இடையில் சுமார் ஆறு மீட்டர் உயரத்தில் இக்குகை அமைந் துள்ளது.

குகை :

கெட்டியான கீழ்ப்பகுதியின் மேல் அமைந்துள்ள பெரும் பாறையின் இடைவெளியில் இக்குகை அமைந்துள்ளது. குகை வெளி சுமார் 60 செமி. உயரம் உள்ளது. நெடுக வாக்கில் 4 மீட்டர் நீளமும், 2 மீட்டர் அகலமும் உள்ளது.

படுக்கைகள் :

இதில் ஐந்து படுக்கைகள் உள்ளன ஒவ்வொன்றும் 45 செமி. அகலம்உள்ளது. தலையணை வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. மேற் பாறை மூன்று படுக்கைகள் மீது மட்டும் நீட்டிக்கொண்டிருக்கிறது. மீதி இரண்டு படுக்கைகளின் மீது இருக்கவேண்டிய பாறைப் பகுதி உடைந்து குன்றின் அடியில் கிடக்கின்றது. அந்தக்குண்டுக்கல் சுமார் 5 மீட்டர் நீள அகலம் இருக்கும். உள்ளிருக்கும் மூன்று படுக்கைகளும் ஓரளவு வழுவழுப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வெளியே உள்ள இரண்டு படுக்கைகள் வெய்யில், மழையால் பாதிக்கப்பட்டு ,தன் வழுவழுப்பை இழந்துள்ளன.

பாலி :

குன்றின் மீது ஒரு சில பாலிகள் உள்ளன. மழை நீர் அவற்றில் தேங்கியுள்ளன. குன்று தங்குவதற்கு எல்லா வகையிலும் தகுதியுடையதாய் அமைந்துள்ளது.

ஒப்புமை :

இந்தக் குகைப் படுக்கைகள் புகளூர், ஆர்நாட்டாமலையில் உள்ள குகையை எல்லா விதத்திலும் ஒத்திருக்கின்றன. ஆர்நாட்டாமலைக்குகை சற்றே உயரத்தில் உள்ளது. இதுவோ அறச்சலூர்க் குகையைப் போலச் சற்றே தாழ உள்ளது. சுக்காலியூர் கரூரிலிருந்து தென்மேற்கு திசையில் சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆர்நாட்டாமலை வடமேற்குத்திசையில் சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

தொல்லெழுத்துக்கள் :

இக்குகையைச் சுற்றிலுமோ, படுக்கைகளிலே எழுத்துக்கள் ஏதும் என் கண்களுக்குத் தெரியவில்லை. குகையின் மேற்பகுதி, உடைந்து கீழே குப்புற விழுந்து கிடப்பதால் நெற்றிப் பகுதியில் எழுத்துக்கள் ஏதாவது உள்ளனவா எனத் தெரியவில்லை. ஆர்நாட்டாமலையில், புகழ்பெற்ற சேரர் வரலாறு தரும் கல்வெட்டு நெற்றிப் பகுதியில்தான் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. எனவே உடைந்து விழுந்த கல்லைப் புரட்டிப் பார்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

இளமையில் பள்ளி விடுமுறைச்காலங்களில் நான் சுக்காலியூர் செல்வதுண்டு. அக்குன்றின் முன்பக்கம் குகையின் எதிர்வாடையில் சிறுவர் சறுக்கி விளையாடுவர். கொளுஞ்சிக் செடிகள் பல பிடுங்கி பாறையின் மீது வைத்து அதன் மீது உட்கார்ந்து கொண்டு சறுக்கி விளையாடுவோம். அப்போது ஒரு நாள் உளியும், சுத்தியும் எடுத்துச் சென்று எனது பெயரை இக்கால எழுத்துக்களில் சண்முகன் என்று அடித்து வைத்தேன். அது மட்டும் இன்றும் உள்ளது. சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி. (1953)

இன்றைய நிலை :

அப்படுக்கைகள் "பாண்டவர் படுக்கை" என்று அவ்வூர் மக்களால் அழைக்கப்படுகிறது. பாண்டவர்களுக்கும் படுக்கைகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை. ஐந்து என்ற எண்ணிக்கையால் வந்த உறவு அது.

அக்குன்று ஒரு தொடர்சியான குன்றுகளின் கடைசிப் பகுதி என்றோம். அக்குன்றின் முன்னாலிருந்த கரடுகள், கட்டிடக்கற்களாக உடைக்கப்படுகின்றன 20 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த மலைகள் இப்போது கொஞ்சமும் இல்லை. கல்தீரத்தீர இக்குன்றை நெருங்கி வருகின்றனர்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னரே இக்குன்றிலும் இரண்டு ஒட்டர்கள் கைவைத்தனர். அதில் காளிநாய்க்கர் என்பவருக்குக் கண்கள் கெட்டுப் போய் விட்டன. இன்னொருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. இவ்விரண்டும் தற்செயலாக நடைபெற்றன. அது ஒரு வகையில் நல்லதாக அமைந்துள்ளது. இக்குன்றில் கை வைத்தால், கெடுதல் என்ற மூடப்பழக்கம் வந்ததால், இதுவரையிலுமாவது பிழைத்தது ஆனால் என்றுமே இது பாதுகாப்பாக இருக்க முடியாது. குன்றின் பின்பக்கம் ஒரு பகுதி உடைக்கப்பட்டுள்ளதை இப்போதும் காணலாம். கல்லுடைப்பு தீவிரமாகத் தொடங்கினால் விரைவில் அழிந்துவிடும்.

உடனடியாகச் செய்ய வேண்டியவை :

இக்குன்றை உடனடியாகப் பாதுகாக்க வேண்டியது தமிழக அரசுத் தொல்லியல் துறையின் கடமையாகும். அக்குன்றிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் கல்லுடைப்பைத் தடை செய்ய வேண்டியது திருச்சி மாவட்ட ஆட்சியாளரின் கடமையாகும். சுற்றுவட்டாரத்தில் உள்ள, பள்ளி கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களை அழைத்துச் சென்று காட்டி, வரலாற்று உணர்வை ஊட்டி வளர்க்கவேண்டும்.

என் கருதுகை :

ஆர்நாட்டாமலைக் கல்வெட்டிலிருந்து, சேரர்களின் ஒரு தலைநகரம் கரூர் என்பதில் ஐயமில்லை. சேரர்களைப் பற்றி விளக்கமான குறிப்புகளைத் தரும் நூல் பதிற்றுப் பத்து. அதில் வேள்விகள்

பற்றிய செய்திகள் நிறைய வருகின்றன. சேரவேந்தர்கள் அந்தணர்கள் பலரை ஆதரித்து, வேள்விகள் பல செய்துள்ளனர்.

கரூரை அடுத்துக் கிழக்கே மணவாசியில் உள்ள சங்கரமலையில் இது போன்ற இயற்கைக் குகைத்தளம் ஒன்று உள்ளதாகக் கல்லுடைப்போர் கூறினர். எனவே கரூரை மையமாக வைத்து ஏராளமான சமணர்கள் அக்காலத்தில் வாழ்ந்து வந்துள்ளது புலனாகும்.

சமணமும், வேள்விச் சமயமும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவை மட்டுமல்ல, பொறுத்துக்கொள்ள முடியாதவை. இலக்கியம் மூலமாகவும், தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் இவை ஒரே காலத்தில் இருந்ததை அறிகிறோம். என்வே இச்சமணக் குகைகளை காப்பதோடு, இன்னும் பல சான்றுகள் தேடி ஆராய்ந்தால், சங்க காலச் சமயநிலை தெளிவாகும்.

கரூர் கோட்டை

1783 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திப்புசுல்தான் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கரூர்க் கோட்டையை ஆங்கிலேயர் படை தாக்கி வெற்றிகொண்டது. அந்த வெற்றியின் நினைவாகவும், அப்போரில் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தவும் ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்தியுள்ளனர். அதுபற்றிய விவரம் தருகிறது இக்கட்டுரை.

அமைவிடம்

கரூரை அடுத்து அமராவதி ஆற்றுக்கும், அக்கரையில் தாந்தோனி மலை உள்ளது. இது முழுவதும் பாறையாலான குன்று. அதில் ஒரு குடைவரைக் கோயில் உள்ளது. திருமால் கோயில் கொண்டுள்ள அக்குன்று ஒரு முதன்மையான வைணவத் தலம். அதன் அருகில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் கரூர்-ஈசநந்தம் சாலையில் அமைந்துள்ளது இப்போர் நினைவுச் சின்னம். திருமாநிலையூரிலிருந்து மூன்று கி. மீ. தொலைவில் உள்ளது.

அமைப்பு

பத்தடி நீளம், ஆறரை அடி அகலம், இரண்டேகால் அடி உயரம் உள்ள மேடையில் நடுவில் அமைந்துள்ளது. அதன் பீடம் 6'-6''சதுரம், மேல் முனை 2'-0'' சதுரம், 11'-0'' உயரம் கொண்ட நான்கு முனைகளும் வளைவாக அமைந்த செங்கல் கட்டிடம். சுண்ணாம்புக் கலவையால் பூசப்பட்டுள்ளது. இந்தக் கட்டிட அமைப்பைச் சுற்றிலும் நான்கடி உயரச் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இந்தவகை வடிவம் Obelisk என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.

கட்டிடத்தில் ஒரு கருங்கல் பதிக்கப்பெற்றுக் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் நல்லமுறையில் பிழையின்றி ஒழுங்காக செதுக்கப்பட்டுள்ளன. நன்றாக வழவழப்பாக்கிய, 2'-0'' × 3'-0'' அளவுள்ள சற்றே செம்மை நிறம் வாய்ந்த கருங்கல்லில் சிற்றுளியால் செதுக்கப்பட்டுள்ளன. மொத்த நினைவுச் சின்னமும் சாலையை நோக்கி அமைந்துள்ளது. பின்னணியில் தாந்தோனி மலை மிக அண்மையில் தெரிகிறது. நெடுந்தொலைவில் அமராவதி ஆறும், கரூர் நகரமும் தெரிகின்றது.

இந்நினைவுச் சின்னம் பேணுவாறின்றிப் பாழ்பட்ட நிலையில் உள்ளது. சுற்றுச் சுவரின் உள்பகுதியில் கொளுஞ்சிச் செடிகள் நிறைந்துள்ளன. கால்நடைகளின் எச்சம் மலிந்துள்ளன. ஆடு, மாடு மேய்க்கும் சிறார்களின் விளையாடல் களமாக இருந்து வந்திருக்கின்றது. கற்கள் எறிந்து, சுண்ணாம்புக் காரை எல்லா இடங்களிலும் காயம்பட்டுள்ளது. சுற்றுச் சுவர் உறுதியாக இருந்தபோதும், மேற்பூச்சு முற்றும் சேதமடைந்துள்ளது. உள்ளூர் மக்கள் இதைக் 'கோரி' என்கின்றனர்.

ஐயம்

நினைவுச் சின்னம் உள்ள இடம் போர் நடந்த இடமாக இருக்கலாம் என்று நம்பலாம். ஆனால் கோட்டைக்கும், இந்த இடத்திற்கும் சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவு உள்ளது. இடையே அமராவதி ஆறு குறுக்கிடுகிறது. ஏப்ரல் மாதம் கோடையின் தொடக்கமாகும். அதனால் அமராவதி ஆற்றில் நீரில்லாமல்தான் இருந்திருக்கும். போர் நடந்த இடம் பொட்டலாக இருந்திருக்கும். இப்போதும் வானம் பார்த்த பூமிதான்.

இந்தச் சண்டை 1780 முதல் 84 வரை நடந்த இரண்டாம் ஆங்கில மைசூர்ப் போரின் பகுதியாகும். 1782 இல் ஐதர் இறந்த பின்னும் திப்பு போரை விரிவாக்கினார். ஆங்கிலத் தரப்பில் முதல் பேராளுநராக (Governer General) இருந்தவர் வாரன் கேஸ்டிங்சு ஆவார்.

திப்பு மங்களூரைச் முற்றுகையிட்டுப் கொண்டிருந்த போது, கரூர், திண்டுக்கல், தாராபுரம், பாலக்காடு, கோவைக் கோட்டைகள் எளிதில் பிடிபட்டன. 1784 மங்களூர் திப்புவின் வசம் வந்தது. அதனால் ஏற்பட்ட உடன் படிக்கையில் அவரவர் பிடித்த இடத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்று.

புக்கானன்

இந்தப் போர் நடந்த இருபத்தேழு ஆண்டுகளுக்குப்பின் 1800 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திரு. புக்கானன் அவர்கள் கரூர் வருகிறார். ஆனால் அந்தப் போரைப் பற்றிக் குறிப்பாகக் கூட எதுவும் சொல்லவில்லை. இந்த நினைவுச் சின்னத்தையும் சென்று பார்க்கவில்லை. அதனால் இது அவ்வளவு குறுகிய காலத்திற்குள் ஆட்சியாளர் கவனத்திலிருந்து நீங்கிவிட்டதென்று தோன்றுகிறது.

புக்கானன் வந்தபோது திப்பு சுல்தான் போரில் வீர மரணம் எய்துவிட்டார். அவர் ஆட்சியில் இருந்த கொங்குநாடு வெள்ளையர் ஆட்சிக்கு முற்றுமாகக் கைமாறி விட்டது. பவானியும், தாராபுரமும் மாவட்டத் தலைநகரங்களாக இருந்தன. தாராபுரத்தில் ஆட்சி செய்த (கலெக்டர்) ஆட்சியாளர் மேஜர் மேக்லியட் அவர்களின் ஆட்சியில் கரூர் இருந்தது. ஒரு குதிரைப் படை,கரூர்க் கோட்டையைக் காத்துவந்தது.

தான் சென்ற பிற ஊர்களிலெல்லாம் போரினால் நேர்ந்த அழிவுகளையும், இழப்புகளையும் கூறிவந்த புக்கானன் அவர்கள் கரூரில் சேதம் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதனால் ஏற்படும் யூகம் யாதெனில், போரிட வந்த வெள்ளையர் படையை, உள்ளூர்ப் படை எதிர்கொண்டு தாந்தோனியிலேயே சந்தித்துக் கொண்டது. அங்கே நிகழ்ந்த போரில் வென்ற வெள்ளையர், கோட்டையை எளிதில் அடைந்தனர் என்பதாகும்.

கரூர் கோட்டை மிகவும் பெரியதாகவும், பசுபதீசுவரர் ஆலயத்தைக் உள்ளடக்கியும் இருந்ததாக அறிகிறோம். காலப்போக்கில் கோட்டை அழிந்துவிட்டது. கரூரில் புதை சாய்க்கடைத் திட்டங்களுக்கு அகழ்ந்த போது கோட்டையின் அடித்தளப் பகுதிகள் கிடைத்ததாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். இன்னொரு கருத்தும் உள்ளது. அகழ்வில் கிடைத்ததை பிற்காலக் கோட்டையின் பகுதி அல்லவென்றும், காலத்தால் மிகவும் முற்பட்ட அமைப்புக்களாக (சுமார் ஈராயிரம் ஆண்டுகள்) இருக்கலாம் என்றும் கருதப்படுவதாக கொக்கம்பட்டி ஊ.ஒ. துவக்கப்பள்ளி ஆசிரியரும், வரலாற்று மாணவருமான திரு. மாணிக்கம் அவர்கள் கூறினார். அகழ்வுப்பொருட்கள் மீண்டும் ஆராயப்படுவது மிகவும் இன்றியமையாததாகும்.

உடனே செய்ய வேண்டியவை

இந்தப் போர்ச்சின்னம் உடனடியாகப் பாதுகாப்பில் வர வேண்டியது மிகவும் இன்றியமையாதது. விடுதலை நாள் வெள்ளி விழா ஆண்டில் பழைய வரலாற்றுச் சின்னங்களை, வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும். பழுதுபட்ட சுற்றுச் சுவரைப் புதுக்கி, உள்ளிடத்தைத் துப்புறவாக்கி, உள்ளூர் சுற்றுலாப் பகுதியாக மாற்றலாம். மாணவர்களுக்கு வரலாறு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், அவர்களை அழைத்துச் சென்று காட்ட வேண்டும். போரில் யார் வென்றாலும், தோற்றாலும், அது வீரம் செறிந்த மண் ஆகிறது. இளைஞர்கள் எழுச்சிகொள்ள அது மிகச் சிறந்த இடம். தற்போது அங்கு வாழும் கற்றறிந்த மக்கள்கூட இந்நினைவுச் சின்னம் பற்றி அறியாமலிருப்பது வருத்தத்திற்குரியது.

எனது முடிவு

வீரம் காட்டும் எந்த ஒரு சிறு நிகழ்ச்சிக்கும், 'சிந்து', 'கும்மி' பாடல்கள் தோன்றி வழங்குவது அப்பகுதியின் சிறப்பாகும். சிறு, சிறு கொலைச் செய்திகள் கூட நாட்டுப் பாடலாகி மக்களிடம் உலவும். ஆனால் இப்போர் பற்றிய செய்திகளோ, குறிப்போ எந்த உருவத்திலும் மக்களிடம் காணவில்லை. போர் நடந்தது, அப்போது ஆளும் உரிமை எடுத்துக்கொண்ட திப்பு சுல்தானுக்கும் பின்னர் வென்ற வெள்ளையருக்கும் ஆகும். இருபக்கத்திலும் அப்பகுதித் தமிழ் வீரர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் படைகளில் பணி யாற்றுவதை ஒரு தொழிலாகவே கருதி வந்துள்ளதை, திரு. புக்கானன் அவர்கள் ஈரோட்டில் இருந்தபோது குறித்து வைத்துள்ளார்.

இருந்தபோதிலும் இவ்விரு ஆட்சிகளையும் பொதுமக்கள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இப்போர் பற்றிய செய்திகள், முற்றும் விவசாயிகளான மக்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பதோடு கவுரவம் இல்லை என்றே தெரிகின்றது.

எழுமாத்தூர்

வீரங்காட்டி வீழ்ந்த பேருக்கு வீர வாழ்த்துப் பாடுவதோடு மட்டும் நின்றுவிடாமல் அவர்களை நம்பி இருந்தவர்களின் வாழ்க்கைப் பொறுப்பினையும் தனதாகத் தமிழ்ச் சமுதாயம் எடுத்துக் கொண்டுள்ளது, ஒரு நடுகல்லால் விளங்குகின்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுடி ஒரு சிற்றூர், அதன் அருகில் கருங்குளம் என்ற பெரிய ஏரி ஒன்று இருந்தது. இன்னும் இருக்கின்றது. பதின் மூன்றாம் நூற்றாண்டில் ஒரு நாள் அந்தக் குளத்தின்கரையில் ஒரு உடைப்பு நேர்ந்து விட்டது அந்தக் குளத்தின் நீராணியாக இருந்த பெருந்தேவப் பள்ளன் தக்க சமயத்தில் அதைக் கண்டு பிடித்து விட்டான்.கடமை பிடர் பிடித்து உந்தவே தனி ஒருவனாக இருந்து அந்த உடைப்பை அடைப்பதில் வெற்றி கண்டான். ஆனால் அந்த பெரு முயற்சியில் அவன் உயிரிழந்தான். அவனுக்கு ஒரு இளம் பெண் இருந்தாள். அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பினை அந்த ஊர் மக்கள் ஏற்றுக் கொண்டனர். தக்க வேளையில் ஏரிக் கரையைச் செப்பனிட்டு அந்த ஆண்டு விளைச்சல் பாதிக்காமல், ஊராருக்கு உணவளிக்கும் வகையில் ஏரியைக் காத்த அவன் வீரத்தைப் பாராட்டி, அவன் மகளின் வாழ்க்கைச் செலவுக்காக அவ்வூரில் அரை மா நிலம் ஒதுக்கிவைத்ததோடன்றி அவன் நினைவாக ஒரு கல் நட்டு அதில் இந்த விவரத்தையும் பொறித்து வைத்துள்ளனர் அவ்வூரார். ஊருக்கு உழைக்கும் பணியில் உயிரிழக்கும் தொண்டர்களின் கடமையை ஊராரே ஏற்றுநடத்தும் சமுதாய அமைப்பு இருந்ததை இந்நினைவுக் கல்லால் அறிகின்றோம்.

குலைசேகர தேவ
ர்க்கு யாண்டு 34வ
துக் கருங்குளத்திர்க்
கு ஒரு பழி உண்
டான படியாலே
இப்பழிக்கு இவ்வூர்
குரும்பரில் பெரிய
தேவப் பள்ளன் அணை
வெட்டிப் போகையா
லே இவன் மகளுக்கு
ஊரார்களிட்ட உதி
ரப்பட்டி குடுத்தபடி தபான
வ நிலம் அரைமா அணை
நிலம் சக்திராத்தவன்
மானி போவிப்பார்
கா.......................

(புலவர் செ. இராசு படித்து வந்தார்)

செங்கம் நடுகல் வீரர்களில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவன் சாகாடைச் சிற்றன். சிற்றன் என்பது அவன் இயற் பெயர். சாகாடை என்பது அவன் சார்ந்த கொங்குச் சமுதாயத்தின் குடிப் பெயர். கொங்கு இருபத்து நாலு நாடுகளில் ஒன்றான பூந்துறை நாட்டின் நான்காவது பேருரான எழுமாத்தூரைச் சேர்ந்தவன், இன்றும் அவ்வூரில் சாகாடை, பனங்காடைக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் வாழ்கின்றனர். கொங்கு வேளாளரில் ஒரு வகையினர்,

மீகொன்றை நாட்டுப் புளியூர் எருமை மந்தையைப் பகைவர் அல்லது கள்ளர் ஓட்டிச் சென்றுவிட்டனர். அவ்வமயம் அங்கிருந்த சாகாடைச் சிற்றன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அவ் வெருமைத் தொறுவை மீட்கும் பணியில் ஈடுபட்டான். அப்பணியில் ஏற்பட்ட பூசலில் மணிக்கலவடவூரில் உயிர் நீத்தான். அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் என்ன சிறப்பு ? நடுகல் வாசகம் இதை நன்கு உணர்த்துகின்றது. பெயரும் பீடும் என்ற சொல்லிற்கேற்ப முதல் வாக்கியத்தில் அவன் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் வாக்கியத்தில் அவன் பூசல் ஓடிய பெருமை கூறிப்பட்டுள்ளது. முதல் வாக்கியத்தில் "கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடச் சிற்றன்" என்றுள்ளது நோக்கத் தக்கது. அவன் வாழ்கின்ற இடம் கொங்கத்து எழுமாத்தூர்தான். புளியூரோ, மணிக்கலவடவூரோ அல்ல. சிற்றன் விருந்துக்கோ அல்வது வேறு காரணம் பற்றியோ புளியூர் சென்றுள்ளான். அந்த சமயந்தில் பூசல் நேர்ந்துவிட்டது தன் ஊர் தனது நாடு எனப் பாராமல் தவறு நிகழ்ந்த இடத்திலே வீரம் தேவைப்பட்ட இடத்திலே அதைக் காட்டியுள்ளான் அம் மறவன். உறம்பறை (உறவின் முறை) யாகச் சென்ற இடத்தில் வீரங் காட்டி வீழ்ந்து பட்டவனுக்கு எடுத்த நடுகல்லில் அவ்வூர் மக்கள் அவன் ஊரையும் நாட்டையும் குறித்து தெளிவாக எழுதி வைத்துள்ளனர்.

வீரர்கள் எந்த ஊராயியினும் போரிடத் தயங்கியதில்லை என்பதும், அந்த வீரர்களையும் ஊரார் மறக்கவில்லை என்பதையும் இதன் மூலம் அறிகின்றோம். (தொ, பொ. ஆய்வுத்துறை தொடர் எண் 1971/5]).

கொங்கு—மார்ச்சு 1973.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட எழுத்துரை.

விசயமங்கலம்

சொர்க்கலோகம்

சொர்க்கலோகம் எப்படியிருந்ததென்று சென்று பார்த்து வந்தவர்கள் இல்லை. எல்லோரும் எப்போதும் மகிழ்ச்சியாக உள்ள இடத்தை சொர்க்கத்தோடு ஒப்பிடுவது மரபு. "சதா ஸ்வர்க்க லோகம் ஆன கோட்டை சூழ்ந்த" நகரம் என்று கல்வெட்டுகளால் புகழப்படுவது விசயமங்கலம்.

அமைவிடம்

கோவை மாநகரிலிருந்து பவானி செல்லும் தேசீய நெடுஞ் சாலையில் 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. விசயமங்மலம் ஒரு காலத்தில் கோட்டை கொத்தளங்களுடன், கொங்கு நாட்டுக் கோநகர்களில் ஒன்றாகக் திகழ்ந்தது கங்க மன்னர்களின் இரண் டாவது தலைநகரமாகத் விளங்கியிருந்தது. தமிழ்ச் சங்கம் ஒன்று சிறப்புடன் நடந்தது. பல அரிய தமிழ் இலக்கண, இலக்கிய நூற்கள் அரங்கேறியுள்ளன.

கொங்கு 24 நாடுகளில் ஒன்றான குறுப்பு நாட்டிற்கு முதன்மை நகரம் விசயமங்கலம் "குறுப்பு நாட்டு விசையமங்கலம்" என்றே பல கல்வெட்டுத் தொடர்கள் இதனைக் குறிப்பிடும். தமிழ் மங்கை என்றும், செந்தமிழ் மங்கை என்றும் விசயாபுரி என்றும் வழங்கி வந்துள்ளது.

தமிழ்ச்சங்கம் :

பூஜ்யபாதரின் சீடராகிய வச்சிரநந்தி கி.பி 470ல் மதுரையில் தமிழ்ச் சங்கத்தை புதுப்பித்தார். மதுரையில் சமணர்களுக்குச் சற்றுத் தளர்வு நேர்ந்த போது, அவர்கள் கொங்கு நாடு வந்தடைந் தனர். அப்போது தலைக்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட கங்க மன்னர்கள் கொங்கு நாட்டு விசயமங்கலத்தைத் தமது கலைமலர் நகரமாகக் கொண்டிருந்தனர். தமிழ்ப்பகுதியின் சீர்மிகு நகரமாக விளங்கியது. தமிழ்க்கலையும் பண்பாடும் வளர்க் கப்பட்டது. புலவர்கள் கூடி தமிழாய்ந்தனர்.

இடைக்காலத்தில் சமண முனிவர்கள் இயற்றிய பல நூற்கள் இங்கு அரங்கேறின. அவற்றில் தலையாயது பெருங்கதை.

பெருங்கதை

பெருங்கதையை இயற்றியவர் "கொங்குவேள்" என்பார். கொங்குவேள் மாக்கதை" என்று புலவர் வழங்குவர். சொற்சுவை, பொருட்சுவையில் சிலப்பதிகாரத்துக்கு இணையாக மதிக்கப்படுவது பெருங்கதை. குணாட்டியர் பைசாச மொழியில் இயற்றியதையும், துர்விநீதன் என்ற கங்கமன்னன் வடமொழியில் எழுதிய "பிரகத்கதா" என்ற காவியத்தை அழகிய தமிழில் வடித்தவர் கொங்குவேள். மாமன்னன் உதயணன் வரலாற்றை கூறுவது பெருங் கதை நாடு, நகர வருணனைகளில் தமிழ்நாட்டின் ஈடில்லாச் சிறப்பினை ஏற்றிச் சொல்வது அறிந்து அனுபவிக்கத்தக்கன.

கொங்குவேள்

பெருங்கதை அரங்கேறியது விசயமங்கலச் சங்கத்திலாகும். புலவர்களின் உரையாடல் தமிழ் விருந்தாகும். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது பழமொழி. அதைப்போலவே கொங்குவேள் அவர்களின் பணிப்பெண் புலமை மிக்கவளாகத் திகழ்ந்துள்ளாள். தறுக்கித்திரியும் புலவர்களுக்குத் தன் பணிப் பெண்ணை விட்டே பதிலிறுக்கச் சொல்வாராம்.

> நீதப் புகழத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
> கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
> மேதக்க சொற்சங்கத் தார்வெல்க கொங்குவே ளடிமை
> மாதைக் கொண்டுதரஞ் சொன்னது வுங்கொங்கு மண்டலமே.

என்ற கொங்கு மண்டல சதகம் பாடும்.

விஜயமங்கலத்தில் உள்ள சந்திரப் பிரபா தீர்த்தங்கரா ஆலயத் தில் நான்கு புலவர்களும், அடிமை மாதும், கொங்குவேளும் கற்சிலை களில் வடித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கோயிலின் இடிபாடுகளில் உள்ள அழகான வேலைப்பாடு கள் கொண்ட ஒரு கல்லில் தேவநாகரி வடிவில் கல்வெட்டு ஒன்று உள்ளது.

ஸ்ரீபிரகத் கதா லாவண்ய ரத் ப்ரதாபஹ என்பது அதன் வாசகம். பெருங்கதையின் புகழிலும் அழகிலும், பெருமையுறுகிறது என்று பொருள்படும். பெருங்கதை அரங்கேறியது மட்டுமின்றி அவ்வப்போது இங்கு வைத்து ஓதப்பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது.

நன்னூல்

விசயமங்கலம் தமிழ் சங்கத்தில் அரங்கேறிய இலக்கண நூற் களில் தலைசிறந்தது நன்னூல் என்ற இலக்கண நூலாகும். தொல் காப்பியம் தோன்றிக் காலம்பல கடந்துவிட்டதால், அதனைச் சுருக்கி இயற்றியது நன்னூல் ஆகும். விசயமங்கலத்தை அடுத்துள்ள சீனாபுரத்தில் தோன்றியவர் பவனந்தி அடிகள். அவருக்கு ஆதரவு தந்தவன் சியகங்கன் என்ற கங்க மன்னன் ஆவன்.

அருங்கலை விநோதன் அமராபரணன்
திருந்திய செங்கோல் சீயகங்கன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன் மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி

என்று நன்னூற் பாயிரம் கூறும்.

கங்கக் குருசில் உவக்க நன்னூலைக் கவிந்து புகல்
தங்கப் புலமைப் பவணந்தி மாமுனி

என்று கொங்கு மண்டல சதகம் கூறும். சீயகங்களின் அலங்காரத் தோற்றம், விசயமங்கலம் சமணக் கோயிலில் இன்றும் கல்லில் வடித்து வைக்கப்பட்டுள்ளன.

திருத்தக்க தேவர் அருளிய சீவகசிந்தாமணியும் அரங்கேறியது விசயமங்கலம் தமிழ்ச் சங்கத்திலேயேயென அறிஞர் கூறுவர்.

சமணக்கோயில்

சங்ககாலத்தில் கொங்கு நாடு சேரர் வசம் இருந்தது. அதற் கடுத்த நெடுங்காலம் கங்க மன்னர்கள் ஆட்சியில் இருந்தது. அப்போது சமண சமயம் சிறந்து விளங்கியது. சமணர்களின்

இருபத்தி நான்கு தீர்த்தங்கர்களில் எட்டாவது முனிவர் சந்திரப் பிரபா தீர்த்தங்கர் ஆவர். அவருக்கு ஒரு கோயில் அமைக்கப் பட்டுள்ளது. கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னரே தோன்றிய தாயினும் அவ்வப்போது பல முறை திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

நெட்டைக் கோபுரம்

தற்போது 'நெட்டைக் கோபுரம்' என்று வழங்கப்படுகிறது. சுமார் 228 அடி நீளமும் 159 அகலமும் கொண்டது. வாத்திய மண்டபம், மகாமண்டபம், நிருத்திய மண்டபம், கருவறைகள் உள்ளன. கோயிலுக்கு வெளியே மான ஸ்தம்பம் உள்ளது; மகா மண்டபத்தில், மேல் உத்தரத்தில் ஆதிநாதர் வரலாறு நான்கு பகுதி களாகச் செதுக்கப்பட்டுள்ளது. பிறப்பு, நீராடல், தீட்சை பெறுதல், தவக்கோலம் முதலியன அவை.

கருவறையில் சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் பீடம் உள்ளது. கருவறைச் சுவரில் பண்டைய வண்ண ஓவியங்கள் உள்ளன. புகை படிந்து சற்றே மங்கியுள்ளன. சுமார் ஆயிரம் ஆண்டுப் பழமை யுடையனவாக இருக்கலாம்.

முன்மண்டபத்தில் மகாவீரர் பீடம் உள்ளது. மகாமண்டபத் தில் பல கற்சிலைகள் உள்ளன. மிகவும் நேர்த்தி வாய்ந்த ஆதிநாதர் வடிவம் உள்ளது. சீயகங்கள், பவணந்தி, கொங்குவேள், அடிமைமாது, புலவர்களின் சிற்பங்கள் உள்ளன. உத்தரத்தில் 24 தீர்த்தங்கரர்களையும் செதுக்கி வைத்துள்ளனர்.

பத்தினிக் கல்

"கீர்த்தி பெற்ற விளைவயல் சூழ் பத்தினிக் கோட்டம்" எனவும் இக்கோயிலை அழைப்பர். மைசூர் சிரவனபெளகுளாவில் மாபெரும் கோமதேசுவரர் சிலையை நிறுவிய இரண்டாம் நரசிம்மர், இரண்டாம் ராசய்யன் ஆகியோரின் அமைச்சராகிய சாமுண்ட ராயரின் தங்கை புளியம்மை என்பவள் சல்லேகனை விரதம் இருந்து உயிர்நீத்தசெய்தி கல்வெட்டில், உள்ளது. அப்பத்தினி குரத்தியாரின் நினைவாகவே பத்தினிக் கோட்டம் எனவும் வழங்கப்படுகிறது. கருவறை வாயிலின் வலப்பக்கம் உள்ள தூணில் மேல்பகுதியில் வர்த்தமான மகாவீரர் வடிவம், அதன் கீழே புளியம்மை வடிவம் உள்ளன. தூணில் பக்கத்தில் கல்வெட்டு உள்ளது. "ஸ்வஸ்தி ஸ்ரீ சாமுண்டராயன் தங்கை புளியம்மை நிசீதகைக் கல்" என்பது அதன் வாசகம். புளியம்மை என்பதைப் புள்ளப்பை எனப் பிறழ வாசித்து ஆண்பாலர் என மயங்குவாருமுண்டு.

வெள்ளாளன் சொக்கநாதன்

கோயில் கிபி 1221 ஆம் ஆண்டு ஒருதடவை புதுப்பிக்கப்பட்டுள்ளது. அப்போது கிழக்கு வாயில் நிலைக்கல் வழங்கியவன் சொக்கநாதன் என்பான். "குறுப்பு நாட்டு விஜயமங்கலத்தில் வெள்ளாளன் படைத் தலைவர்களில் திருவானைக் காவுடையான் சொக்கநாதன் திருநிலைக்கால் செய்வித்தேன்" என்பது கல்வெட்டு வாசகம்.

பலஞ்சலாகை ஆனை அச்சு

கொங்கு வேளிர், தேவர் ஆச்சாரியார், மற்றும் தோழன்மாருக்கான கற்சிலைகள் உண்டாக்கி அவற்றின் வழிபாட்டுச் செலவுக்காக இரண்டு பலஞ்சலாகை ஆனை அச்சு நாணயங்களை ஒருவன் கொடுத்துள்ளான். சித்திரைப் பிறப்பு, தைப் பிறப்பு, கார்த்திகை தீபம் ஆகிய நாட்களில் வழிபாடு செய்யப்படுகிறது. வழங்கியவன் ஸ்ரீ வத்ச கோத்திரத்து சிலவர்பிள்ளை பெரிய நாட்டிற் பண்டிதப் பெருமாள் கெங்கையாழ்வான் என்பான்.

அணியாத அழகியார்

இங்குள்ள கல்வெட்டுக்கள் தீர்த்தங்கரரை 'அணியாத அழகியார்'' என்று அழைக்கப்படுகிறார். திகம்பர சமணத்தவர் ஆடைகளோ, அணிமணிகளோ பூணாதவர். ஏதும் அணியாமை அழகு தருவதாகும்.

"அணிவன அணியா அழகா செய செய"

"அணியா அழகா போற்றி போற்றி"

என்று 'திருப்பாமாலை' என்ற சைவ இலக்கியம் கூறும். பரிமேல் அழகர், ஆனைமேல் அழகர் என்ற இயற்பெயர் கொண்டவர்களைக் காஞ்சிபுரம் கல்வெட்டுகளில் சந்தித்திருக்கிறோம். இங்கோ அணியாத அழகரைக் காண்கின்றோம்.

சதா சொர்க்க லோகம்

விஜய நகரமன்னர் ஹரிஹர ராயர் காலத்து கல்வெட்டு ஒன்றில் வடபரிசார நாடு நாலூர் பற்று பேரூர் நாடு வீர சோழவளநாடு ஆகிய நாட்டு மக்கள் அணியாத அழகரின் பூசைக்காக செங்கப் பள்ளி கிராமத்தையும் குளத்தையும் அளிக்கின்றனர். இக்கல்வெட்டிலேயே "சதா சொக்கலோகமாக கோட்டை சூழ்ந்த நாடு" என்று விஜயமங்கலம் அழைக்கப்படுகிறது.

நாகேசுவர் ஆலயம்

வீரசோழன் கல்வெட்டில் விஜயமங்கலம் வீரசங்காதப் பெரும் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. ஸ்வஸ்தி ஸ்ரீ விசயமங்கலத்து நாயனார் வீரசங்காதப் பெரும்பள்ளி ஆழ்வார் பள்ளிச் சந்தப் பட்டயம்'' என்று தொடங்குகிறது சமணத் தலங்கள் பள்ளி என்று அழைக்கப்படும். விஜயமங்கலம் தலைமைத் தலம் ஆவதால் பெரும் பள்ளி என்றழைக்கப்பட்டது.

இக்கோயிலேயே சுமார் பத்து கல்வெட்டுகள் உள்ளன. பல காலங்களில் பரவி தொடர்ந்த வரலாறு எழுத உதவுகின்றது.

விஜயமங்கலத்தில் உள்ள சிவன் கோயில் நாகேசுவரர் ஆலயம் ஆகும். கோயிலின் உள்ளே வீர சோழன் கல்வெட்டு ஒன்று தனிக் குத்துக்கல்லில் எழுதப்பட்டுள்ளது. ''ஸ்வஸ்தீ ஸ்ரீ வீரசோழ தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்று திருநல்லியாண்டு அஞ்சாவது, குறுப்பு நாட்டு விசயமங்கலத்து'' எனத் தொடங்கிப் பல செய்திகளைத் தருகின்றது.

கோயிலின் திருக்காம கோட்டத்து பதும வரியில் இரண்டு கல் வெட்டுக்கள் உள்ளன. கோயிலைப் புதுப்பிக்கும் போது பழைய கல்வெட்டுகளை மீண்டும் எழுதுவிக்கும் அரிய பண்பை இங்கு காணலாம்.

குலோத்துங்க சோழன், வீரராசேந்திர சோழன் ஆகியோர் காலத்தில் அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய ஆணைகளை விக்ரம சோழன் காலத்தில் கோயிலைப் புதுப்பித்த போது, மீண்டும் கல்லிலே வெட்டி வைத்துள்ளனர்.

வீரராசேந்திர சோழன், சுந்தரபாண்டியன் காலத்துக் கல் வெட்டுகளும் இக்கோயிலில் உள்ளன.

திருபுவனச் சக்ரவர்த்திகள், சோனேரின்மை கொண்டான் என்று பட்டப் பெயர் பூண்ட வீரபாண்டியன் தனது ஐந்தாம் ஆட்சியாண்டில் ஒரு தடமை விஜயமங்கலம் வருகிறான். குறுப்பு மக்கள் அவனை அணுகி ''வானகப் புத்தூர் வடக்கு வாசலில் வானக் குளம் நெடுநாள் பாழ்பட்டுக் கிடக்கிறதாக'' முறையிடு கின்றனர்.

மன்னன் அந்த ஏரியைப் புதுப்பித்து 'வீரபாண்டியன் பேரேரி' என்று தன் பெயரை இடுகிறான். இவ்வேரிப் பாசன வாரம் அனைத்தும் திருக்காம கோட்டத்தாளுடை நாச்சியார் பூசைக் காக அர்ப்பணிக்கிறான்.

கரியமாணிக்காழ்வார் கோயில்

ஜைனம், சைவம் இவற்றுடன் வைணவச் சிறப்பும் கொண்டது விஜயமங்கலம், இங்குள்ள பெருமாள் கோயில் கரியமாணிக்காழ் வார் கோயில் என்றழைப்படும். மிகுந்த வேலைப்பாடுடன் கூடிய அழகிய பெருங்கோயில். இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடத்தக்க சிறப்புடையது. சகரயாண்டு 1202 நேரான கி. பி. 1280 ஆம் ஆண்டு எழுப்பப்பட்டது, இராசகேசரி, திருபுவனவர்மரான வீரபாண்டியனின் பதினைந்தாம் ஆண்டில் எழுதியது, இறைவனைக் சித்திரமேழிவிண்ணகர நாயனார் கருமாணிக்காழ்வார் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. சித்திரமேழி என்பது வேளாளர் குடியின் குழுப் பெயராகும். விஜயமங்கலத்திற்கு அருகில் உள்ள காத்தான் கண்ணி என்ற கிராமமே தானமாக வழங்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீபண்டாரத்தில் சேர்க்கப் படுகிறது. இதில் நயமான குறிப்பு கோயில் நம்பிமார் விளக்கு எரிக்க காற்றாங் கண்ணி கிராமம் சென்றால், எண்ணெயும் கொடுத்து, நம்பிமார் பசியாற உணவும் இடுவதாக இவ்வூரார் வாக்களிக்கின்றனர். எண்ணெய் அளக்கும் நாழி. குறுப்பு நாழி என்று அழைக்கப்படுகிறது, குறுப்பு நாட்டு நாழி தனிப்பெயர் பெற்றுள்ளது. குறிப்பிடத்தக்கது.

இறுதியில்

இவ்வாறு தொன்று தொட்டு மங்காசிறப்புடன் விளங்கிய விஜயமங்கலம் இன்று சிற்றூராகக் காட்சியளிக்கின்றது. புதை பொருளாய்வு திகழத்தக்க இடிபாடு மேடுகள் நிறைந்துள்ளன. அம்மேடுகளில் அவ்வப்போது பல நாயணங்கள் கிடைத்து வருகின்றன.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன. துர்விநீகள், சியமங்கன் முதலான கங்க மன்னர்களும், வீரராசேந்திரன், குலோத்துங்கன் முதலான சோழ மன்னர்கள். வீரபாண்டியன் சுந்தரபாண்டியன் போன்ற பாண்டிய மன்னர்களும் வீரசோழனைவென்ற கொங்குச் சோழனும், ஹரிஹரராயர் முதலான விஜயநகரப் பேரரசர்களும் தத்தம் கொடைகளால் இங்கு நிலைபெற்று வாழ்கின்றனர்.

கொங்குவேள் மாக்கதை, பவணந்தியின் நன்னூல், கொங்கு மண்டல சதகம் இயற்றிய கார்மேகக் கோன் போன்ற ஏராளமான புலமை செம்மல்களால் புகழ் விளங்கிய கலைமலி நகரம் விஜய மங்கலம் ஆகும். ○

நன்றி : கோவை - வானொலி

தொன்று தொட்டு வரும் தொழில்கள்

கோவை, பெரியார் மாவட்டங்கள்

சுதந்திர பாரதத்தின் தொழில் நகரங்களில் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பெறும் தகுதி பெற்றது கோவை மாநகரம். தென்னகத்தின் மான்செஸ்டர் என்று நூல் உற்பத்தியால் பெயர்பெற்றது. கோவை மாவட்டத்தின் பிற நகரங்களும் அதற்குக் துணையாக நிற்கின்றன. பனியன் நெய்தலுக்குத் திருப்பூர், கைத்தறிப் போர்வைகளுக்குச் சென்னிமலை, கைத்தறி ஆடைகளுக்கு ஈரோடு, தரை விரிப்புகளுக்கு பவானி என்றவாறு.

இச்சிறப்புகளெல்லாம், இன்று நேற்று வந்தவையல்ல. பருத்தி விளைவிப்பும் நூல் நூற்றலும், நெசவும் பண்டு தொடங்கி இன்று வரை வளர்ந்து வருபவையாகும். நெசவுத் தொழிலைப் போன்றே சிறந்து விளங்கிய பல தொழில்களின் சிறப்பைச் சொல்லுவதே இக் கட்டுரையின் நோக்கம். கோவை மாவட்டத்தின் மிகச் சிறந்த தொழில்களை எண்ணின் முன்னிற்பன மூன்று: நூற்றல், மாடு வளர்த்தல், பொறியியல் ஆகியன.

பருத்தி

கோவை மாவட்டம் கரிசல் மண் மிகுந்தது. மழை குறைவாகப் பெய்யும் சீமை. இவ்விரண்டும் பருத்தி விளைவை ஊக்குவிக்கின்றன. அதன் விளைவாக நூற்றலும் நெசவும் பெருகியுள்ளன. பெரும்பாலும் பெண்களே நூற்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் அதிலும் குறிப்பாகக் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு இத் தொழில் பாதுகாப்பளிக்கின்றது. கொங்கு நாட்டில் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு 'பஞ்சு கொடுத்தல்' என்ற சடங்கு நடத்தப்படுகின்றது. "ஆளில் பெண்டிர் தாளில் செய்த நுணங்கு நுண் பனுவல் போல"[1] என்ற சங்கப் பாடலும் இதனை உணர்த்தும்.

கொங்குச் சினாபுரத்துப் பவணந்தி தான் காணும் நூற்புப் பணியை புலவர்களின் தொண்டோடு ஒப்பிட்டுக் கூறுதல் உவகை யளிக்கும்.

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செருசொற் புலவனே சேயிழையா
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாறு

பனுவல் என்ற சொல் பஞ்சு கொண்டு நூற்கும் நூலுக்கும் பாடல் கொண்டு யாக்கும் நூலுக்கும் பொதுவானதே. பனுவல் என்ற பொருளிலும் 'பருத்திப் பெண்டிர் பனுவல்'[2] என வழங்குகிறது.

தறி

தறியால் நெசவு நெய்யும் பழக்கம் இருந்ததைப் பெருங்கதை யால் அறியலாம். விசயமங்கலத்துப் பெரும்புலவர் கொங்குவேள் தழுவல் நூலாகத் தமது பெருங்கதையை யாத்தார். கொங்கு நாட்டில் தாம் கண்டு கேட்டவற்றையெல்லாம் பொது வழக்காக அவர் நூலில் பிறர் மீது ஏற்றி பாடியுள்ளார். பெருங்கதைச் சான்றுகளைக் கொங்கில் நிகழ்ந்தவைகளாகக் கொள்ளல் சாலும்.

உருமண்ணு வாவும் யூகியுந் தறியா
கரும மேற்கோ டெரி நூல் ஆக
பாவிடு குழலின் ஆயிடைத் திரிதர

ஆடை வகைகள்

ஏராளமான ஆடை வகைகளைப் பற்றியும் கொங்குவேள் குறித்துச் செல்கின்றார்.

புது நூல் பூந்துகில் அருமடி யுரீஇ[4]
பைங்கண் பாதிரி போது பிரித்தன்ன
அங் கோசிகமும் வங்க சதமும்
கொங்கோர் கொங்கின் கொய்ம் மலரன்ன
பைங்கேழ் கலிங்கமும் பட்டும் தூது
நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்
கோலமோடு புணர்ந்த வேறுவேறு இயற்கை
நூலிலும் உலண்டிலும் நாரினும் இயன்றன்ன[5]

பல்வேறு வண்ணங்களில் தோய்ந்த ஆடைகள் அழகு சேர்க் கின்றன.

கல்வெட்டு

மென்புடவை, பரும்புடவை, நூல் இவைகளை வண்டியிலும் எருத்தின் மேலும், தலைச் சுமையாலும் நகரத்துச சந்தைக்குச் கொண்டு சென்று, கிராமத்துக்குத் தேவையான பலசரக்குகளை வாங்கி வந்ததாகச் சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேஸ்வரர் கோயில்கல்வெட்டு கூறுகிறது.

தொழிலாளர்

நெசவுத் தொழிலில் ஈடுபடுவோர் செங்குந்தர் என்றும் கைக்கோளர் என்றும் வழங்கப்படுவர். கொங்கு நாட்டில் கோயில்கள் பல வற்றிற்கு நந்தா விளக்கு எரிக்க பொன் மூலதனமாக வைத்துள்ள செய்தி கல்வெட்டுக்களால் புலப்படும்.

இவர்கள் அரச குலத்தின் அணுக்கத் தொண்டர்களாகவும் அதிகாரிகளாகவும் இருந்துள்ளனர். சோழன் பூர்வ பட்டயத்தில் கூறப்பட்ட புதிய குடியேற்றத்தை செப்பமாக நிறைவேற்றிய பணியில் முன்னின்றனர். தேவையான போது தம் மக்களையே (சென்னிமலையில்) நரபலியாக ஈந்து, மக்களைக் கவர்ந்து வெற்றி கரமாகப் பணியினை முடிக்கின்றனர்.

பொதுவாக

நூற்புத் தொழிலில் கோவை மாவட்டம் தொன்று தொட்டு முன்னணியில் நின்றுள்ளது. கதர் வாரியம் தமது நூற்புப் பணிகளுக்குத் திருப்பூரைத் தேர்ந்தெடுத்தது சாலச் சிறந்ததாகும். கொல்லே காலம் பட்டுக் கொண்டு கதர் பட்டுப் புடவைகளும் இங்கு நெய்யப் படுகின்றன. பாரதத்தின் இன்றைய தலைமை அமைச்சர் ஆண்டு தோறும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கதர் பட்டுப் புடவைகளை திருப்பூரிலிருந்து விலைக்கு வாங்கி தமக்கும், தம் குடும்பத்திற்கும் பயன்படுத்துவது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தியாகும்.

இன்றைக்கு கோவையில் ஒரு நூற்பு ஆராய்ச்சி நிறுவனமும், ஏராளமான நூற்பாலைகளும் சிறந்து விளங்குவது பண்டை சிறப்பின் தொடர்ச்சியே எனில் மிகையாகாது.

மாடு வளர்த்தல்

கொங்கு நாட்டின் மிகப்பெரிய தொழில் மாடு வளர்த்தல் ஆகும். காங்கயம் காளைகள் உழவுக்கும், உழைப்பிற்கும் பேர்

பெற்றவை. இந்நாட்டு ஊர்ப்பெயர்கள் பட்டி எனவும் தொட்டி எனவும் முடிபவை கால்நடைகளின் மிகுதியாலேயே ஆகும். அக் காலத்தில் பல ஊர்களில் பெருத்த அளவில் ஒரே கூட்டமாக பண்ணையில் வளர்க்கப்பட்டன. மாடு கட்டும் இடம் தொழுவம் எனப்படும். அதன் அடியாக முருங்கத் தொழுவு, பெருந்தொழுவு, காரத்தொழுவு போன்ற பல ஊர்கள் கோவை மாவட்டத்தில் உள்ளன.

பழையகோட்டை ஆனூர் நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் மாட்டுப் பண்ணை உலகப் புகழ் பெற்றது. மாலை வேளையில் பண்ணை மாடுகள் பெருந்திரளாக மேவிடத்திலிருந்து தொழுவத்திற்கு வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும். பழைய கோட்டையின் பழம்பெயர் ஆனூர் ஆகும். ஆமூர் எனவும் பலவாறாக வழங்கி வந்துள்ளது. அவ்வூரில் கோயில் கட்டிய சிற்பி சோமசுந்தரன் தனக்குக் கிடைத்த தயிரில் மயங்கி பாட்டாக வடித்துக் கல்லில் வெட்டிவைத்தான்.

பணியாளர்க்கு

வயிறு நிறையச் சோறும்
வாய்க்கு வெற்றிலை பாக்கும் வாங்கித் தந்து
தயிரோடு மூவேளை யிட்ட தர்மமிது
அழகன் சர்க்கரையதாமே[6]

கொங்கு நாட்டை நினைக்கும்போதே எல்லாப் புலவர்களுக்கும் பசுக்கள்தான் நினைவுக்கு வருகின்றன. 'ஆ கெழு கொங்கர்'[7] என்றும், கொங்கர் ஆ பரந்தன்ன செலவின்'[8] என்றும், 'தம் நாட்டு ஆடு பரந்தன்னமாவின், ஆ பரந்தன்ன[9]' என்றும் பதிற்றுப் பத்து பலவாறாகக் கூறும்.

'பாறைகளை இரும்புளி கொண்டு வெட்டிய ஆழ்கிணற்றில் நீளக் கயிறு கொண்டு சிறிய முகவையில் இறைத்தூற்றும் நீரில் மொய்கின்ற மாடுகள்[10]' என்ற வருணனை எக்காலத்துக்கும் பொருந்துமன்றோ?

தமிழ் நாட்டின் பிறபகுதிகளில் மாடு வளர்ப்போர் இடையர் எனப்படுவர். அங்கு பாலுக்காக மட்டுமே அவை பயன்படுகின்றன. ஆனால் கொங்கு நாட்டில் வேளாளர்கள் தம் பண்ணைப் பணிகளின் ஒரு கூறாகவே மாடுகளை வளர்த்து வருகின்றனர். உழவுத் தொழிலின் எல்லாக் கட்டங்களிலும் உதவுகின்றன. குடியானவர்களின் பெருஞ்செல்வமாக (மாடாக) அவை விளங்குகின்றன,

பொறியியல்

ஒரு நாட்டின் அறிவுத் திறத்தின் அளவு கோள் அந்நாட்டின் பொறியியல் பணிகளே ஆகும். அவைகளைக் கட்டுமானப் பகுதிகளாகவும், எந்திரப்பகுதிகளாகவும் பிரிக்கலாம்.

கட்டுமானப் பணிகளில் தலையாயவை வேளாண்மைக்கு உதவுபவையே. கோவை மாவட்டத்தில் நொய்யலாறும், வாணியாறும் பாய்ந்து வளம் கூட்டுகின்றன. காஞ்சியாறு எனப்படும் நொய்யலாற்றில் பண்டைக் காலத்தில் 96 அணைகள் இருந்தனவாம். அவற்றில் பெரும்பாலான அணைகள் இன்றும் நல்ல நிலைமையில் உள்ளன. இவை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும். அதன் தொடர்ச்சியாக ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கும். வெள்ளப் பெருக்கின்போது வாய்க்கால் வழியே நீர் ஓடி ஏரி குளங்களை நிரப்பும். உபரிநீர் ஆற்றுப் போக்கிலேயே அணையில், வழிந்தோடி அடுத்த கால்வாய்களை அடையும். பெய்யும் மழையில் பெரும்பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க சிறந்த ஏற்பாடு. இந்த வறண்ட பகுதிக்குப் பேருதவியாக இருந்தது. இவ்வணைகள் கற்சிறை எனப்பட்டன,

வாய்க்கால் வழியே நீர் ஓடி ஏரிகளையும், குளங்களையும் குட்டைகளையும் நிறைத்தன. அவற்றில் தேங்கிய நீர் கொண்டு நஞ்சை விவசாயம் சிறந்து விளங்கின. கோவை மாவட்டத்தில் பல ஊர்கள் ஏரி, குளம், குட்டை ஆகிய ஈறுகளை உடையனவாக உள்ளன. கோவை மாவட்டக் கல்வெட்டுக்கள் ஏராளமான பழைய ஏரிகள், குளங்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றன. உடைந்து போன குளங்களைப் புதுக்கியுள்ளனர்.[11] குளங்களைப் பேணவும், பாதுகாக்கவும் மானியங்கள் விடப்பட்டன. பார்வையிடும் பொறுப்பை எப்போதும் மீன் பிடிப்பதற்காக குளக்கரையிலேயே இருக்கும் செம்படவன் வசம் ஒப்புவிக்கப்படுகிறது.

ஆபத்து நேருங்காலத்தில் ஊராருக்கும், தலையாரிக்கும் தெரிவிக்கவேண்டியது அவன் பொறுப்பாகும். அதற்காக மீன் பிடிக்கும் உரிமையும், மானியமும் வழங்கப்பட்டன[12].

அணைகளின் கட்டுமானப் பணிகள் வியக்கத்தக்க அளவுக்குச் செம்மையாக இருந்தன. பாறைக்கால் பார்த்து அமைவிடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. பெரும்பெரும் கற்களை உடைக்காமல் உருட்டிக் கொண்டு வந்து கட்டப்பட்டது.கற்கள் ஒன்றையொன்று கோர்த்துக் கொண்டு, தத்தம் சொந்த எடையாலேயே, தண்ணீரின் உந்தலைத் தாங்கும் வண்ணம் கட்டப்பட்டதாலேயே எக்காலத்திற்கும்

நிலைத்து நிற்கும் வண்ணம் உள்ளன. தற்காலத்தில் பெருங்கற்களை உருட்டிக் கொண்டு வரும் நுட்பத்தை தொழிலாளிகள் மறந்துவிட்டனர். கிரேன் போன்ற பொறிகள் தேவையாகின்றன. நமது முந்தையோர் திறனை இழந்து, தவிக்கின்றோம். ஓர் அறிவின் தொடர்ச்சி அற்றுப் போய்விட்டது.

பெருங்கற்களின் இடையே செங்கல் சல்லியுடன் சுண்ணாம்பு மற்றும், கடுக்காய் கருப்பட்டிநீர் முதலானவற்றை கலந்து நிரப்பியிருப்பார்கள். தற்போது சுர்க்கி காங்கிரீட்டு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. காலங்காலமாக நீரோட்டத்தின் அரிப்பைத் தாங்கி நின்றுள்ளன.

அரண்மனைகளில் உல்லாச நீச்சல் குளங்கள் இருந்தன. அவை வேண்டும்போது நிறைத்துக்கொள்ளவும், வேண்டாதபோது வடித்துக் கொள்ளவும் வாய்ப்பாக பொறியமைப்பு உடையனவாகத் திகழ்ந்தன என்று பெருங்கதையால் அறிகின்றோம்.

> நிறைக்குறின் நிறைத்துப் போக்குறின் போக்கும்
> பொறிப்படை அமைந்த பொங்கு இலவந்திகை[13]

இவற்றை எந்திர வாவிகள் என்று மணிமேகலை கூறும்.

மற்றும் மாளிகைகள், எழுநிலைமாடங்கள், நிலா முற்றங்கள் அரண்மனை, பூங்காக்கள், திருமணி அம்பலம், பொற்கோட்டம்பலம் அத்தாணிமண்டபம், மந்திரமாடம், பொறியமை மாடம், பொதியறை இசை மண்டபம், ஆடம்பலம், கூத்தப்பள்ளி, உலாவு மண்டபம், விருந்துகோயில், மற்றும் வழிபாட்டிடங்கள் போன்ற எண்ணிறந்த கட்டிட அமைப்புகளை பெருங்கதையால் அறியலாம்,

திருப்பாண்டிக் கொடுமுடிக் கோயில் ஏழாம் நூற்றாண்டிலேயே உயர்ந்த மதில்களைக்கொண்டு சிறந்து விளங்கியமைவேள்விக்குடிச் செப்போட்டால் அறியலாம்[15]. கொங்கு நாட்டில் 36 பெருங் கோயிலும் 360 சார்புக் கோயில்களும், 32 அணைகளும் கட்டியதாக சோழன் பூர்வ பட்டயம் கூறும். சிற்பக் கலையில் ஒப்புமையில்லாதாகக் கூறப்படும் பேரூர் இம்மாவட்டத்தைச் சேர்ந்ததேயாகும். பேரூர் சபாமண்பத்துச் சிற்பங்கள் மிகச்சிறப்பு வாய்ந்தவை.

பொறிகள் ஊர்திகள்

பாண்டில், வையம், தேர் போன்ற பல ஊர்திகளைப் பற்றியப் பெருங்கதையால் அறிகின்றோம். அதில் தானே இயங்கும் பொறி

ஒன்றினையும் கொங்குவேள் காட்டுகின்றார். ஆணி வையம் என்று அதற்குப் பெயர். யூகி பயன்படுத்தும் அவ்வண்டியை யவண வீரன் வடிவமைத்துச் செய்து தந்ததாகச் சொல்லுகின்றார். இரும்பாலான இறகுகள் கொண்டிருந்தது. குதிரை முதலியன பூட்டப் படாமல் இணைததிலேயே இயங்கும் தன்மை கொண்டிருந்தது. தக்க பயிற்சியுடன், வண்டியின் விசையைத் தக்கவாறு இயக்கி வேண்டிய திசையில் செலுத்தலாம். வண்டியை வேண்டும்போது பூட்டிக் கொள்ளவும் வேண்டாதபோது உறுப்புறுப்பாகப் பிரித்துக் கொள்ளவும் முடியும்[16].

இதுபோன்ற முயற்சிகள் இடைக்காலத்தில் கொங்கு நாட்டில் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன. பறந்து காட்டும் ஆர்வம் இருந்ததையும் சில பட்டயங்களால் அறியலாம்[17]. சென்மப்புலவன் என்பவன் இறகுகள் கட்டிக் கொண்டு, ஒரு மலையின் மேலிருந்து அடுத்துள்ள குளத்தின் மீது பறந்து காட்டியுள்ளதாகத் தெரிகின்றது. பறப்பதற்குக் குளத்தைத் தேர்ந்தெடுத்ததிலிருந்து, முயற்சியின் உண்மை புலனாகின்றது. பறப்பதில் தோல்வியுற்றுக் கீழே விழுந்தாலும் அடிபடாதன்றோ?

இதுபோன்ற செய்முறை அறிவியலின் தொடர்ச்சியாகவே, இன்று கோவையில் மூன்று பொறியியல் கல்லூரிகளும், இரண்டு பன்னுட்பியங்களும் தோன்றியுள்ளன என்றால் மிகையாகாது.

உலோக உற்பத்தி

பொறியியல் பணிகளுக்கும் பொருளோங்கு திட்டங்களுக்கும், உலோகங்கள் இன்றியமையாதன. பொன், செப்பு, இரும்பு போன்ற மூல உலோகங்கள் பண்டைக் கோவை மாவட்டத்தில் கிடைத்துள்ளன.

பண்டு தொட்டே வாள், வேல் முதலிய போர்க்கருவி இரும்பால் செய்யப்பட்டன. பாறைகள் உடைப்பதற்கான உளி முதலியனவும் இரும்பால் ஆயின. வண்டி முதலியவற்றின் அச்சுகள், இருசுகள், கதவு முதலியவற்றின் கொண்டிகள் முதலான இரும்பால் செய்யப் பட்டன.

கோவை மாவட்டம் மலை வளம் நிறைந்தது. அவற்றில் இரும்புத் தாது நிறைந்திருக்கும். மலையின் மணலைத் திரட்டிக் கொண்டு வந்து, தொடர்ந்து அடுப்பில் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு ஊதிக் கொண்டே வந்தால், இரும்புத் தாது உருகி ஒன்று

சேர்ந்து இரும்புக் கட்டியாகும். பிற மணல் பகுதி பிரிந்துவிடும். கி. பி. 1800 இல் சென்னிமலையில் இரும்பு உருக்குவதை நேரில் கண்ட சர் பிரான்சிஸ் புக்கானன் என்ற ஆங்கிலேயர் இந்தச் செயல் முறையை விளக்கியுள்ளார். இந்தக் கால கட்டத்திற்கு முன்னரும், கிட்டத்தட்ட இதே முறையை கையாளப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.

இரும்பைப் பதப்படுத்தும் முறையினைத் தமிழர் அறிந்திருந் தனர். தற்காலத்தில் கல்லில் குழி போடுவதற்குப் பயன்படுத்தும் கடப்பாறையில் வைர முனை பொருத்தப் பட்டிருக்கும். ஆனால் பழைய காலத்தில் இரும்பு முனைகளுக்குக் கெட்டிப் படுத்தும் எளிதான முறை ஒன்றிருந்தது அந்த நடைமுறை இன்றும் புழக்கத்தில் உள்ளது. பழுக்கக் காய்ச்சிய கடப்பாறை முனையை, சிறிய அளவு மட்டும் குளிர்ந்த தண்ணீரில் நனைத்தால் முனை கெட்டியாகிவிடும். இரும்புத் தொழிலின் எல்லா நுணுக்கங்களும் அறிந்து வைத்திருந்தனர் நம் முன்னோர்.

வானியாற்றின் மணலில் தாமிரம் கலந்திருந்ததாகவும், அதனை உருக்குவதன் மூலம் கிடைத்த தாமிரத்தை மேலச் சிதம்பரத்தில் செப்புச் சிலைகள் செய்வதற்கு அனுப்பியதாகச் சோழன் பூர்வ பட்டயம் கூறும்.

உலோகக் கனி வளம் மிகுந்தது இந்நாடு. இவ்வுலோகத்தி லிருந்து தொழில் செய்வோர் கம்மாளர் எனப்பட்டனர். பொன், வெள்ளி வேலை இரும்பு வேலை: தச்சுவேலை செய்வோர் அனை வரும் பொதுவாக இப்பெயரில் குறிப்பிடப்பட்டாலும் சிறப்பாக இரும்பு வேலை செய்வாரைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

இடைக்காலத்தில் இவர்களுக்குச் சமூகத்தில் சில உரிமைகள் மறுக்கப்பட்டதாகத் தெரிகிறது. மறுக்கப்பட்ட காரணம் விளங்க வில்லை. அவ்வுரிமைகளாவன: மேலாடை தரித்தல், செருப்பு அணிதல் வீட்டு விசேச காரியங்களுக்கு கொம்பு முதலான வாத்தியங்கள் முழங்குதல் இன்னும் சில. கொங்குச் சோழனான விக்ரம சோழன் காலத்தில் அதற்கான தடைகள் நீக்கப்பட்டன. பேரூர், திருமுருகன் பூண்டி போன்ற பல ஊர்க் கோயில்களில் இவை கல்லெழுத்துக் களில் பொறிக்கப்பட்டுள்ளன. இடைக்கால கொங்குச் சமுதாயத்தில் சாதிப்பாகுபாட்டின் கொடுமை அந்தந்த ஊர் மக்களின் பிணக்கு களால் பெரிதடைந்துவிடும். பாதிக்கப்பட்டோர் அரசனிடம் முறை யிட்டால் தீர விசாரித்து பாதிக்கப்பட்டோர் சார்பாக நல்ல தீர்ப்பு வழங்கப்படும். வேறு பல சாதியினருக்கும் இது போன்ற பாதகங்கள் ஏற்பட்டுப் பின்னர் தக்கார் தலையிட்டால் நிவர்த்தியாகியுள்ளன.

தோல் வேலை

காலுக்கு பாதுகாப்பு காற்செருப்பு. இப்பகுதி நடுகல் சிற்பங்கள் பலவற்றிலிருந்து செருப்புத் தைக்கும் வேலை எவ்வளவு சிறப்பாக இருந்தது என்றறியலாம். இத்தொழிலில் ஈடுபடுவோர் மாதாரி எனப் படுவர். உழவு வேலைகளில் வேளாளருக்கு உறுதுணையாகஇருப்பர். நீர் இறைக்கும் பறிதைப்பர், பண்ணையில் எல்லா வேலைகளையும், குடும்பத்தினர் அனைவரும் செய்வர். சென்னிமலையில் மலை மணலிலிருந்து இரும்பு தயாரித்தோர் இவ்வினத்தாரே என சர் பிரான்சில் புக்கான் குறித்துச் சென்றுள்ளார்.

இச் சமூகத்தின் ஒரு சில முன்னேறிய பழக்கவழக்கங்கள் உண்டு. திருமண முறிவும், பெண்களின் மறுமணமும் எளிதானது, மணமான பெண் தன் கணவனிடமிருந்து விலக உரிமை உண்டு 'துரும்பறுத்தல்' என்று அதற்குப் பெயர். மணமுறிவுக்குப்பின் அவர் வேறு ஆடவனை மணந்து கொள்ளுதல் பொருந்தும். இந்தப் பழக்கம் வேறு சில சமுதாயத்திலும் உள்ளதாகத் தெரிகிறது. இதன் சமுதாய விளைவுகள் ஆராய்ச்சிக்கு உரியன என்பதாலேயே இங்கு குறிப்பிட்டோம்.

மட்பாண்டங்கள்

தொல்லியலார் காணும் தொழில்களில் தொன்மையானது மட் பாண்டத்தொழில். தோண்டும் இடங்களிலெல்லாம் பல புதிய அரிய செய்தியைத் தருவன அவையே. கோவை மாவட்டம் இன்னும் தொல்லியலார் கடைக்கண் பார்வையில் படவில்லை. அதனால் முறையான அகழ்வாராய்ச்சி இன்னும் ஏதும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

சென்னிமலைக்கு அடுத்துள்ள பிடாரியூரில் அருமை வாய்ந்த கருப்பு-சிவப்புவண்ண ஓடுகள் கிடைக்கின்றன. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தியவை. சர்க்கார் பெரியபாளையத்திலும் பழமை மிகுந்த ஓடுகளும், வண்ண கோலங்கள் எழுதப்பட்டவையாகவும் மிகவும் பழமை வாய்ந்த ஓடுகள் கிடைக்கின்றன.

கிராம தேவதைக் கோயில்களில் பல மண்பொம்மைகள், உருவா ரங்கள் காண்கின்றீர்கள். கால்நடைகளுக்கு சுகக்கேடு வரும் போது, அம்மனுக்கு உருவு செய்வதாக மக்கள் வேண்டிக்கொள்வர். திருவிழாவின்போது அவை செய்து வைக்கப்படும். அவை மண்ணால் செய்யப்படுபவையேயாகும். தேவியின் சுற்றுலாவிற்

காக அரண்மனைக்குதிரை என்ற பெரிய குதிரையும் செய்து அளிக்கப்படும். இது ஊர்ப்பொதுவில் திருவிழாவின் பாகமாக அளிக்கப்படுகிறது.

ஐயனார் கோயிலில் 20 அடி உயரத்திற்கு மேற்பட்ட கம்பீரமான ஐயனார் சிலைகளைப் பார்க்கின்றீர்கள். முடி, முகம், கை, நெஞ்சு இடுப்பு, கால் இவைகளைத் தனித்தனியே செய்து பின்னர் கதையால் இணைத்து வண்ணம் பூசுவர். இவை அனைத்தும் சுட்டமண். பூசையில் வைக்கப்படும் முத்தாழம்மண் போன்ற அம்மன் சிலைகள் சுடாமல் வண்ணம் பூசி வழிபாட்டில் வைக்கப் படும்.

எட்கர் தர்ஸ்ட்டன் என்ற ஆசிரியர் தனது இந்தியச் சாதிகளும், பழங்குடிகளும் என்ற நூலில் இந்தச் சமுதாயத்தின் தொழில் முறை பற்றிச் சில தகவல்கள் கொடுத்துள்ளார். மண் ஏனங்கள் செய்யும் திருவை பற்றி அவர் கூறியுள்ள குறைகள் கோவை மாவட்டத்திற்குப் பொருந்தாது. அவர் கண்ட திருவை, கொங்கு நாடு தவிர பிற பகுதி களில் புழக்கத்தில் உள்ளவை. வனைபவரே குச்சியால் தள்ளி ஓட்டக் கூடியது, ஓடாத போது நிற்க முடியாமல் சாய்ந்து கொள்ளும். இதை குறையுடையது என்று உயர்திரு. தர்ஸ்ட்டன் கண்டித்துள்ளார். இக்குறைகளெல்லாம் கோவை மாவட்டத்துத் திருவையில் கிடையாது, இங்கே திருவையை ஓட்டுவதற்கு தனி ஆள். ஆள் ஒரு பீடத்தில் அமர்ந்து வேலை செய்யலாம். ஓடாத போதும் திருவை சாயாத வகைகளில் அடி அச்சு கருங்கல்லால் ஆனது. வீட்டுபெண்களே திருவையை ஓட்டலாம்.

மட்பாண்டங்கள் வனைவோர் குயவர் எனப்படுவர். கொங்கு நாட்டிலுள்ளோர் கொங்கக் குயவர் என்றழைக்கப்படுவர். இடைக் கால குடியேற்றத்தில் தெளிவான வருகை இச்சமூகத்தின் மூலமே தெரிகின்றது. இன்றும் அமலில் இருக்கும் மதுக்கரைப் பட்டயம் என்ற சுவடி மூலம் தெளிவான கருத்துக்கள் கிடைக்கின்றன,

இக்குடியேற்றம் நடைபெற்றது, ஒப்பந்தம் எழுதியது கி. பி. 1114 ஆம் ஆண்டு. அக்காலக் கொங்கு நாட்டு வேளாளருக்கு நவ பாண்டம் வேண்டும் என்ற ஆர்வம் வந்துவிட்டது. அதனால் சோழ நாடு சென்று பானை வனைவதில் சிறந்த 30 குடும்பங்களை அழைத்து வருகின்றனர். கொங்கு நாட்டு எல்லையில் உள்ள மதுக் கரைச் செல்லாண்டியம்மன் கோவிலில் எல்லோரும் ஒன்று கூடி பட்டயம் எழுதப்படுகிறது. வேட்கோவர் தமது சொந்த பந்தங் களையெல்லாம் விட்டுப் பிரிந்து வருவதால் அவர்கள் வேளாளருக்கு சமமாக வைத்துக்கொள்வதாக வாக்களிக்கின்றனர். "கொள்ளி

கோடி ஒன்று, உண்பதுவும் தின்பதும் ஒன்று, கொல்வினை கொடுப்பினை பிறதியம்". திருமண உறவுதவிர மீதியில் சமஉரிமை வழங்கப்படுகிறது. வேளாளருக்கே உரித்தான திருமணச் சடங்குகளில் பாதியான ஆறு சடங்குகளைச் செய்துக்கொள்ளும் உரிமை வழங்கப்படுகிறது. சூப்பாரி கொட்டி வருதல், காமோதிரம் போடுதல், நாட்டுக்கல்லுக்குப் போய் வருதல், மாப்பிள்ளை குதிரை ஏறி நகர் வலம் வருதல், பெருத்தாலி கட்டுதல், காவிழங்குதல் என்பவையே அவை, ஒப்பந்தம் முடித்ததும், ஒரு நாட்டிற்கு ஒரு குடும்பம் வீதம் 24 குடும்பங்களையும், பெரிய ஊர்கள் எட்டிற்கு எட்டுக்குடும்பங்கள் ஆக 30 குடும்பங்களை அமர்த்துகின்றனர். இன்று இவர்கள் இந் நாட்டுப் பெயர்களையே தமது குடிப்பெயராகக் கொண்டுள்ளனர் இன்று ஒரு குடி சுமார் ஆயிரம் குடியாகப் பெருகியுள்ளது. ஒவ்வொரு நாட்டாரும் தமக்கே ஒரு சாமி வைத்து அதற்கென செப்புச் சிலைகள் வைத்துக்கொண்டுள்ளனர். இதற்குத் தனிக் கோயில் கிடையாது. ஒவ்வொருவரும் தம் குழந்தைகள் வளருமுன், தம் வீட்டிற்கு எடுத்துச்சென்று தெவம் என்று சொல்லப்படும் பூசை செய்து தமது குழந்தைகளுக்கு சாமியின் பெயர் வைப்பர். அது போல சாமி தமது குடிகளின் வீடுகளுக்கு மாறிமாறி சென்று கொண்டே இருக்கும். திருமணத்திற்கு ஆவது போன்ற பெருஞ் செலவு இதற்கும ஆகும். பழங்கலைகளின் பதிவுச் சட்டப்படி கோவைப் பழங்கலைப் பதிவு அலுவலருக்கு வந்துள்ள விண்ணப்பங்களில் திருக்கோயில் தவிர தனியார் விண்ணப்பங்களில் இவர்களின் விண்ணப்பங்களே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்கு நாட்டுக் கோயில்கள் சிலவற்றிற்கு நுந்தாவிளக்கு இவ்வினத்தோர் வைத்துள்ளனர்.[18]

வேட்டையாடுதல்

தொன்று தொட்டு வேட்டையாடுதல் இப்பகுதியில் சிறந்து விளங்கியுள்ள காடும் காடு சார்ந்த முல்லை நிலப்பகுதியாக நெடுங்காலம் இருந்துள்ளது. கொடுவில் ஆடவர் பகழி தீட்டி [19] எனச் சங்கப் பாடல் கூறும். நடுகல் சிற்பங்கள் வில்லும் அம்பும், இடையில் குறுவாளும் கொண்டு இருப்பது வேட்டையின் சிறப்புக்களைக் காட்டும். வேட்டையாடியோர் வேடர் என்றும் பின்னர் வேட்டுவர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் பல இடங்களில் முன்பு ஊராளும் தலைவர்களாக இருந்துள்ளனர். இடைக்காலத்தில் ஏற்பட்ட புதிய குடியேற்றத்தில் நிகழ்ந்த பூசல்களில் இறந்துபட்டு நடுகல் ஆயினர். வடிவுள்ளமங்கலத்தைச் சேர்ந்த அழகன் காளியின் நடுகல் பழமங்கலத்துச் சொக்கநேந்தல் நடுகல், தலையநல்லூர் கிழங்கன் நடுகல் ஆகியன குறுப்பிடத்தக்கன.

பூசை செய்தல்

கொங்கு நாட்டில் ஊர்த்தேவதையின் கோயில்களே மிகுதி. இலக்கியக் கடவுளர்க்கான பெருங்கோயில்களும் பின்னர் நிறைந்துள்ளன.

அம்மன்கோவில்களின் பூசை உரிமை பண்டாரம், ஆண்டி என்பர் வசம் உள்ளது. ஆடு, கோழி எருமைகிடா முதலியன பலியிடும் பழக்கம் இருந்தது. ஐயனார்கோயில் பூசை குயவர்கள் வசம் சில ஊர்களில் உள்ளது. பெருங்கோயிலின் தேர்த் திருவிழா விற்கு முதல்நாள் அமாவசையன்று நடுசாமத்தில் நிகழ்த்தும் கிராம சாந்தி குயவர்களின் உரிமையாக உள்ளது. சங்க காலத்திலிருந்து இந்தப் பழக்கம் நிலவுவதாகத் தெரிகின்றது.[20]

சிவன்கோயில் பெருமாள்கோயில் போன்ற பெருங்கோயில் பூசைகளைச் சிவபிராமணர் கவனித்து வந்துள்ளனர். கோயில் களைத் திருப்பணி செய்தபோதெல்லாம் பூசைக்கென்று பல்வேறு இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட சிவபிராமணர் அமர்த்தப்பட்ட னர், என்ற விவரத்தை சோழன் பூர்வ பட்டயத்தால் அறியலாம். பழனியில் மலைக்கோயில் தாபிதம்செய்து, வழிபாடு ஏற்பாடு செய்த போது பதினெட்டாம் நூற்றாண்டில் கொடுமுடியிலிருந்து குருக்களை ஏற்பாடு செய்ததாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது. கி. பி. 1800 இல் பயணம் செய்த உயர்திரு புக்கானன் அக்காலக் கோயில் நிலவரங்களைத் தெளிவாக குறித்து வைத்துள்ளார்.

திருக்கோயில்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளைப் பெற்று தர்மங்களை நிறைவேற்றும் அதிகாரிகளாக செயல்பட்டமை கோவை மாவட்டக் கல்வெட்டுக்களால் புலப்படும். நுந்தா விளக்கு எரிக்கப் பொருள் வைப்போர் இவர்களிடமே மூலதனமாக வைத்துள்ளனர். தீர்த்தமும் தெர்ப்பையும் கொண்டு கருவறைக்குள் நிழைத்து பூசை செய்வார்களானதால் குடம்கொண்டு, குச்சிகொண்டு கோயில் புகு வார் என்று கல்வெட்டுக்கள் இவர்களைக் குறிப்பிடும். ஊரின் முதன்மைக் குடிகளாக மன்னரும் வணங்க வாழ்ந்துள்ள பெருமை மிக்கார்[21].

அடிக் குறிப்புகள்:

1. நற்றிணை 353
2. புறம் 125
3. பெருங்கதை வத்தவகாண்டம், நான்காம்படலம்.
4. பெருங்கதை 1-54-164
5. பெருங்கதை 1-42-204 &
   தாண்டெக்ஸ் வெள்ளிவிழா சிறப்பு மலர் 1947–72
6. கொங்கு 3/75 மூன்றாம் தொகுதி
7. பதிற்றுப் பத்து 22
8. பதிற்றுப் பத்து 77
9. பதிற்றுப் பத்து 78
10. பதிற்றுப் பத்து 22
11. கொடுமுடிக் கல்வெட்டு : வெதிரி மந்தை வெள்ளைக்குளம்
12. தேனோலை-அக்டோபர் 1976
13. பெருங்கதை
14. பெருங்கதை ஆராய்ச்சி-சிலம்பொலி செல்லப்பன்: பக்கம் 363-83
15. தேனோலை சூலை 1976
16. பெருங்கதை ஆராய்ச்சி: பக்கம் 390
17. தேனோலை (5)சூலை 1975-சென்மப்புலவன் பட்டயம்
18. தேனோலை அக்டோபர் 1976
19. அகம் 159
20. நற்றிணை
21. பதிற்றுப் பத்து 53

தமிழ்நாட்டு அரசு தொல்லியல் துறையின் கோவை மாவட்டக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட தொகுப்புரை.

குமரிக் கண்டம் -

சில புவியியல் உண்மைகள்

வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள

என்ற இளங்கோவடிகள் கூற்றும், பின்னர் வந்த உரையாசிரியர் களின் விளக்கங்களும், தமிழ் நாட்டின் தென்பகுதியில் பெருநிலப் பரப்பு இருந்ததையும், அது கடலுள் மூழ்கியது என்றும் நிலப்பரப்பு எவ்வளவு? போன்ற கேள்விகளுக்கு புவியியல் கூறும் பதில் என்ன வென்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

குமரிக்கண்டம் பற்றிய செய்திகளை நமக்கு அறிவிப்பவைகள் நமது சங்க இலக்கியங்கள். அவைகளுக்கு எழுந்த உரைகள் போன்றன. சங்க இலக்கியங்கள் 1800 ஆண்டுகளுக்கு முந்திய பன்னெடுங்காலத்தில் பரவலாக இருந்தவை. பொருள் கொள்வதில் பிழை இல்லையெனின், உண்மைச் செய்திகள் பல தரவல்லவை. உரையாசிரியர்கள் காலமோ ஏழெட்டு நூற்றாண்டுகளுக்குப் பின்ன ராகும். செவிவழிச் செய்திகள் பலவற்றை திரப்பி, உண்மை தெளி வாகப் புலராவண்ணம் செய்துவிடுகின்றன.

இலக்கியங்கள் கூறும் செய்திகளை உறுதிப்படுத்தும் சான்று களாக இதுவரை நம்பப்பட்டு வந்ததை இரண்டு ஆங்கில நூல்கள். அவை,

1. The story of Atlantis and the lost to Lemuria — W. Scott Elliot.

2. Lemuria - The lost continent of Pucific — W. S. Carve

இவற்றின் உள்ளடக்கிய தமிழ் நூல் பன்மொழிப் புலவர் கா. அப்பாத் துரையார் அவர்களின் 'குமரிக் கண்டம் - அல்லது கடல் கொண்ட தென்னாடு' ஆகும்.

முதலில் கூறிய இரண்டு நூல்களிலும் 50,000 ஆண்டுகளுக்கு முன்னும், 2,00,000 ஆண்டுகளுக்கு முன்னும் உலகத்தரை அமைப்பு எப்படி இருந்தது என்று தோராயமாகக் காட்டியுள்ளார்கள். அவை,புவியியல் அறிவின்படி உலக வரலாற்றுடன் ஒத்து வரவில்லை. ஸ்காட் எலியட் அவர்களும் கார்வே அவர்களும் புவி யியலாளர்கள் அல்ல. மேலும் அவர்கள் காலத்தில், அதாவது, சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் கிடைத்த ஆதாரங் களைக் கொண்டு பின்னப்பட்ட ஆராய்ச்சியாகும்.

நில அமைப்புகள் பொருந்தாததோடு, அவர்கள் மனிதத் தோற்றம் பற்றிய கருத்துக்களும் சமய அடிப்படையில் தோன்றி யவை. குமரிக் கண்டம் மக்கள் கூர்தலற வளர்ச்சியில் ஆறு படிகள் உள்ளன என்றும்,

இந்தப் பெருநிலத்தில் தமிழகத்தைக் சுற்றிலும் ஆசித்திரேலியா ஆப்பிரிக்கா, சைனா போன்ற எல்லா நாடுகளும் ஒட்டிக்கொண்டு இருந்தன. நிலவாழ் விலங்கினங்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு எளிதில் நடந்து செல்லக் கூடியனவாக இருந்தன. தமது இலக்கியங்கள் கூறும் குமரிக் கண்டத்திற்கு இணையாக எதை யாவது கூறவேண்டுமானால் இந்தகோண்டுவானாபெருநிலத்திற்கே அது பொருந்தும்- இதுவோ 600 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இரண்டாம் காலத்தின் இறுதியில் இப்பெருநிலம், விட்டு விலகத் தொடங்கியது. விலகிய பகுதியில் பசிபிக்மாக் கடலும் இந்துமாக் கடலும் தோன்றி வளர்ந்து இன்றைய நிலைமைக்கு வளர்ந்து விட்டன.

இவ்வாறு கண்டங்கள் ஒன்றையொன்று விட்டுவிட்டு விலகின என்ற கண்டம் பெயர்ச்சிக் கொள்கையை முதன்முதலில் கற்பனை செய்தவர் அந்தோணியோ ஸ்னைடர் என்பவர். பாரிசில் 1858 ஆம் ஆண்டு வெளியிட்டார். அடுத்து எப். பி. டெய்லர் (1908) என்ற அமெரிக்கரும் ஆல்பிரட் வெக்னர் (1910) என்ற செர்மானி யரும் அறிவித்தனர். அவர்களில் விளக்கம் அக்காலத்தில் புதிராகத் தோன்றினாலும், சிற்சில மாற்றங்களோடு தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது. கண்டங்கள் விலகுவதற்காக விசை பற்றிய ஆய்வுக் கருத்துகள் பல அவ்வப்போது வெளிவந்து கொண்டேயுள்ளது.

புவியியல் கால அட்டவணை

பெரும் பிரிவு	உட்பிரிவு	இலட்சம் ஆண்டு தனிக் காலம்	இலட்சம் ஆண்டு கூட்டுக் காலம்	தொல்லுயிரெச்சங்கள்	குறிப்பு
தொன்மைக் காலம்	தொன்மை		40000	உயிர் தோன்றவில்லை	
முற்கேம்பிரியன்	முற்கேம்பிரியன்		15000	தாவரங்களும், மெல்லுடல்விலங்கினமும்	
முதற்காலம்	கேம்பிரியன்	1000	5200	எலும்பில்லா விலங்கினம்	
3300லட்சம்ஆண்டுகள்	ஆர்டோவிசியன்	600	4200	,,	
	சைலூரியன்	350	3600	முதல் மீன், முதல் நிலத்தாவரம்.	
	தேவோனியன்	500	3250	முத்துக்கள், நிலநீர் வாழ்வன நுரையீரல் மீன்கள்	
	கார்ப்பானிபெரசு	600	2750	பூக்காத தாவரம், முதல் ஊர்வன தோற்றம்	
	பர்மியன்	350	2150	எலும்பில்லா விலங்கினம் அழிந்தன	
இரண்டாம் காலம்	டிரையாசிக்	300	1800	ஊர்வன, நிலநீர்வாழ் இன மிகுதி	
1200 லட்சம் ஆண்டுகள்	ஜுராசிக்	400	1500	பறவைகள், பூக்கும் தாவரம், கடல் பூச்சி	
	கிரிட்டேசியஸ்	500	1100	பேருருவ ஊர்வன அழிகின்றன. பூக்கும் தாவரம் மிகுகின்றது	கோண்டுவானு பெருநிலம் விலகுகிறது
மூன்றாங் காலம்	ஈயோசின்	200	600	பாலூட்டிகள் நத்தைகள்,	
60 லட்சம் ஆண்டுகள்	ஒலிகோசின்	150	400	பூக்கும் தாவரங்கள்	
	மையோசின்	130	250	பல்கிப் பெருகின்றன	
	பிளையோசின்	110	120		
நான்காம் காலம் 10 லட்சம் ஆண்டுகள்	பிளைஸ்டோசின்	10	10	மாந்தன் தோன்றுகிறான். பனியூழிகளில் பல பாலூட்டிகள் அழிகின்றன	
	தற்காலம்	0.1	—	தற்போது வாழும் விலங்கினம்	

எம். எ. கிருஷ்ணன், ஜியாலஜி ஆப் இந்தியா & பர்மா

அடுத்தது மூன்றாம் காலம், 600 முதல் 10 லட்சம் ஆண்டுகள் வரை உள்ள காலப் பகுதி ஆகும். பாலூட்டிகள் பற்றிப் பேசுகிற காலம் இது.

கடைசி 10 இலட்சம் ஆண்டுகள் நான்காம் காலம் எனப்படும். மனிதரின் மூதாதையர் இப்போதுதான் தோன்று கின்றனர். முதுகு வளைந்த குரங்கிலிருந்து நேராக நடக்கக் கூடிய மனிதன் தோன்றி சுமார் 40,000 ஆண்டுகளே ஆயின.

சுமார் 50, 000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமையை காண்போம். அப்போது இலங்கை தமிழகத்தோடு ஒட்டி யிருந்தது. தமிழகத்தைச் சுற்றியுள்ள கடற்கரை. தற்போதுள்ளதை விட சுமார் ஆறேழு கிலோ மீட்டர் தள்ளியிருந்தது. வட இந்தியா முழுவதும் ஆழமில்லாக் கடலாக இருந்தது. 'டெத்சுக் கடல்' என்பர் புவியியலர். இமயத்தில் ஒரு பகுதி மட்டும் தாழ் நிலமாக இருந்தது. தெக்கனம் கெட்டித்தரை. அதே போல இமயத்தின் வடபகுதியும் கெட்டியான தரை. இவ்விரண்டின் நடுவில் அமைந்துள்ள வட இந்தியத் தரை. காலப்போக்கில் அழுத்தம் தாங்காமல் புடைத்து வளர்ந்தது. இந்த 50,000 ஆண்டுகள் இடை வெளியில் நடந்த நிகழ்ச்சிகள் செவிவழிச் செய்திகளாக வந்து இலக்கியங்களாகவும், புராணங்களாகவும் மலர்ந்துள்ளன.

ஆரியர் இந்தியாவிற்குள் வந்து நுழைந்தது 4000 ஆண்டுகட்கு முன்னர்தான். எனவே அதற்கு முன்னர் வாழ்ந்த இந்தியர் அனை வரும் திராவிடரே என்பது சிந்துவெளி நாகரிகத்தால் புலனாகிறது. முதல் இரண்டு படியினர் உருவம் இல்லாமல் வாழ்ந்தனர் என்பது போன்ற அறிவுக்கொவ்வாத செய்திகள் உண்டு. சமயத்தை அடிப் படையாகக் கொண்டதால் அவ்வாறு இடற நேர்ந்தது. எனவே குமரிக் கண்டத்திற்கு ஆதாரமாக இவ்விரண்டு நூல்களையும் கொள்வது மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்குவதற்கொப்பாகும்.

ஞாலம் தோன்றிய காலத்திலிருந்து கூர்தலற வளர்ச்சியைக் காணலாம். (அட்டவணை-1). சுமார் 45000 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தீப் பிழம்பாகப் பகலவனிலிருந்து தெரிந்த துண்டு குளிர்ந்து நிலமாகிறது. இன்றைக்கு 15000 லட்சம் ஆண்டுகள் வரை உள்ளகாலப் பகுதியை தொன்மைக் காலம் என்பர். அப்போது உயிரினம் தோன்ற வில்லை. 15000 முதல் 5200 இலட்சம் ஆண்டுகள் கொண்ட பகுதியை முற்கேம்பிரியன் என்பர், தாவரங்களும், மெல்லுடல் உயிரினங்களும், இப் பருவத்திலேயே

தோன்றின. அதற்குப் பின்னுள்ள காலகட்டத்தை நான்காக வகுத்துள்ளனர். 5200 முதல் 1800 லட்சம் ஆண்டுகள் வரை முதற்காலம் என்றும் 1800 முதல் 600 லட்சம் ஆண்டுகள் வரை இரண்டாம் காலம் என்றும் 600 முதல் 100 லட்சம் ஆண்டுகள் வரை மூன்றாம் காலம் என்றும் எஞ்சிய 100 லட்சம் ஆண்டுகளை நான்காம் காலம் என்றும் அழைப்பர்:

முதற்காலத்தில் எலும்பில்லாத விலங்கினங்கள், மீன்கள், நில வாழ் தாவரங்கள், நீர்வாழ் பாசிகள், முத்துக்கள், நீர் நிலம் இரண்டிலும் வாழ்பவை, நுரையீரல் கொண்டு மூச்சுவிடும் மீன்கள், பூக்காத நிலத் தாவரம், ஊர்வன முதலியன தோன்றி வளர்ந்தன. முதலில் கூறிய எலும்பில்லா விலங்கினம் முதற் காலத்தின் இறுதியிலேயே அழிந்துவிட்டன.

இரண்டாம் காலத்தில் பெரும் உருவிலான ஊர்வன இனம் பல்கிப் பெருகியது. வெப்பமான வானிலை இருந்தது. பறவை இனம் தோன்றியது. தாவரம் பல்கிப் பெருகியது. இந்த இரண்டாம் காலத்தின் இறுதியிலேயே பேருருவிலான ஊர்வன விலங்குகள் அழிந்து போயின. இது 600 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாகும்.

தொன்மைக்காலம், முற்கேம்பிரியன், முதற்காலம், இரண்டாங் காலம் ஆகியவற்றில் இந்நிலவுலகம், இப்போதுள்ளது போல தனித் தனி கட்டங்களாக இல்லை. அனைத்தும் ஒன்றாக இணைந்து, இடையில் கடலால் பிரிக்கப்படாத ஒரே நிலமாக இருந்தது. இந்த நிலத்திற்கு கோண்டுவானா பெருநிலம் என்று பெயர் சூட்டியுள்ளனர். இந்தியாவில் மத்திய பிரதேசத்தில் கோண்டுபோரசு இருந்ததன் நினைவாக இப்பெயர் வைத்தனர். பேருருவ ஊர்வன இன விலங்கு ஒன்றின் தொல்லுயி ரெச்சம் கிடைத்ததே இதற்குக் கரணியம். இதே போன்று நிலவாழ் விலங்கினங்களின் எச்சங்கள் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் கிடைத்துள்ளன. இந்தக் காலத்தில் மனிதன் தோன்றவில்லை.

நமது சங்க இலக்கியங்கள் கூறும் கடல்கோள்கள் உண்மையா? மூன்றாங் காலத்தின் இறுதியில் (10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு) நிலத்தின் பெரும்பகுதிகளில் பனி நிறைந்திருந்தது. இந்தப் பனி உருகியதாலும், வேறுபல கரணியங்களாலும் அக்காலக்கடல் மட்டத்திற்கு மேல் தற்போதைய கடல் சுமார் 300 அடி அளவிற்குக் கடல் மட்டம் உயர்ந்து விட்டதாகக் கணித்துள்ளனர். (ஆர்தர் ஓம்ஸ்- பிரின்சி பல்ஸ் ஆப் பிசிக்கல் ஜீயாலஜி)) நேரான மனிதன் தோன்றி 40,000 ஆண்டு காலத்திலும் இத்தகை நீரேற்றங்கள் பல தடவைகள்

நடந்திருக்கலாம். இலக்கியங்கள் கூறும் கடல்கோள்கள் அவையே உரையாசிரியர்கள் கூறிய தெங்க நாடு, பனை நாடு போன்றவை, இன்றைய இலங்கையும், தமிழகத்தில் கடலோரத்தில் நீருள் முழுகிய பத்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவுமே ஆகலாம் என்பது என் கருத்து. நாடு என்ற சொல்லை மிகச் சிறிய பகுதிக்கும் வழங்கு வதை அறிவோம்.

கடல் ஏறியது போன்றே சிற்சில சமயங்களில் இறங்கியும் உள்ளதாகத் தெரிகிறது. மத்தியத் தொல்லியல் துறை காவிரிப்பூம் பட்டிணத்தில் சில கப்பல்கட்டும் துறைகளையும், அதற்கான முளை களையும் கண்டுபிடித்துள்ளது. அவை கடற்சராசரி மட்டத்தைவிட 20 அடி உயரத்தில் உள்ளன தமிழகத்துறை தொல்லியல் துறை கொற்கையை ஆராய்ந்துள்ளது, அங்கும் உயரம் 20 மட்டத்தில் இருப்பதைக் கண்டுள்ளனர், இதே போன்று நமது பண்டைத் துறைமுகங்கள் பல இதே மட்டத்தில் உள்ளன. இதிலிருந்து தெரிவது என்னவெனில் உயர்ந்து வந்த கடல் மீண்டும் கடந்த 2000 ஆண்டுகளில் சுமார் 20 அடி தாழ்ந்துள்ளது. எனவே நமது பண்டைத் துறைமுக நகரங்கள் பல மீண்டும் நிலத்திற்கே வந்து விட்டன. காவிரிப்பூம்பட்டினத்தின் பெரும்பகுதி நிலத்தினடி யில் வயலினடியில் வீடுகளினடியில்தான் உள்ளது. (ஆராய்ச்சி மலர்-3 - இதழ் 1)

புகாரும் கொற்கையுந்தான் நிலத்தில் மறைந்துள்ளனவே தவிர கபாடபுரம் நீருக்குள்தான் இன்றும் மூழ்கியுள்ளது. கடலின் நெடுந் தொலைவில் இல்லையாயினும் சுமார் 10 அல்லது 15 கிலோமீட்டர் தொலைவில் இருக்கலாம் என்று கருதுகிறேன். கடல் தொல்லியல் துறை பிரான்சு அமெரிக்கா, ரசியா, போன்ற நாடுகளில் மிகுந்த முன்னேறிய நிலையில் உள்ளது. அவர்களின் உதவியோடு தென்ன கத்தில் கடற்கரையை ஒட்டி ஆராய்வது மிகவும் இன்றியமையாதது.

மாந்த இனம் ஒரே இடத்தில் தோன்றி எல்லா இடத்திற்கும் பரவியது என்ற கொள்கை எனக்கு உடன்பாடல்ல. சூழ்நிலை வளர்ச்சிக் கேற்ப உலகின் எல்லாப் பகுதிகளிலும் மாந்த இனம் தோன்றி வளர்ச்சியடைந்து கொண்டே வந்தன. அதில் நில நடுவரை அண்மையிலுள்ள நாடுகளில் முன்னேற்ற வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகம். தமிழகம் உள்ளிட்ட தென்கிழக்கு ஆசியாவி லேயேதான் பண்பாட்டு வளர்ச்சியின் முதிர்ச்சி அதிகம் என்பதை அறிஞர்கள் கண்டுள்ளனர். (ஆர்தர் எஸ். கிரிகர்- அட்வென்சர் ஆப் மேன்-பக்கம் 125 பட்டியல்) வேட்டையாடும் நிலை யிலிருந்த மனிதன் வேளாண்மை செய்தகாலம் கி. மு. 9000 ஆண்டு

கள் என்று கணக்கிட்டுள்ளனர். எகிப்தில் கி. மு. 6000 திலும், சீனா, ஐரோப்பாக் கண்டங்களில கி.மு. 4000 திலும், அமெரிக்காவில் கி. மு. 2000திலும் வேளாண்மை நாகரீகம் தோன்றியதாகத் தெரிகிறது. எனவே தமிழகத்து மனிதன் வேறு எந்த நாகரீக மனித இனத்திற்கும் பிந்தியவன் அல்லன்.

சங்க இலக்கியங்களில் கூறிய எல்லாக் கடல் கோள்களையும், உண்மையில் கடல் மட்டம் ஏறி நிலத்தை மூழ்கடித்ததாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அண்மையில் வீசிய புயலில் கடல் அலைகள் சுமார் 12 அடி உயரம் எழும்பி விழுந்தன. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னம் வீசிய புயலில் இராமேஸ்வரம் பகுதியில் 20 அடி உயர அடிகள் தோன்றியதை அறிவோம். அப்போது இராமேசுவரம் கடலால் மூழ்கிவிட்டதாகச் செய்திகள் வந்தன. புயல் ஓய்ந்ததும் இராமேசுவரம் தீவில் சேதம் அதிகமா இருந்தது உண்மைதான். ஊரே அழிந்து விட்டது. ஆனால் கடல் மட்டம் உயரவில்லை. கடல் அலைகள் மட்டும் அழிவு வேலையில் ஈடுபட்டுப் பின் ஓய்ந்து போயிற்று. சங்கப் பாடல்கள் பல செய்தித்தாள்கள் போல, அந்தந்த நேரத்ததுமான இடத்தக (லோகல் & டைம்லி) செய்திகான உள்ளதை உணர்ந்துள்ளோம். எனவே சங்க காலக் கடல் கோள்களில் சில அத்தகையதே ஆகலாம்.

குமரிக் கண்டம் பற்றிய ஒரு பதட்டச் சூழ்நிலை தமிழகத்தில் உள்ளது. கண்ணை மூடிக் கொண்டு மறுப்போர் குரல் உலக மேடைக்கு எளிதில் ஏறும் வாய்ப்பு உள்ளதால். உண்மை என்று அதைவிட ஓங்கி ஒலிக்க வேண்டிய சூழல் தமிழகத்தில் தோன்றி விட்டது. அறிவியல் கண்ணோட்டம் இதில் மிகவும் இன்றியமையாதது. இலக்கியங்கள் கூறும் செய்திகளை அறிவியல் சான்றுகளால் உறுதி செய்தாலே வெல்லஞ்சொல் தோன்றும்.

புவியியலார் கொண்டுவாணா பெருநிலம் என்பதை குமரிக் கண்டம் என்று அழைத்துக் கொள்வதில் பிழையில்லை. இலக்கிய காலங்களில் கடல் கோள்கள் பல நிகழ்ந்துள்ளன. தமிழகத்து மாந்தன் பிற எல்லா இனங்களிலும் தொன்மையானவனே. சங்கப் புலவர்கள் கண்டதையே விண்டுரைத்தவர். அதற்குத் தவறான பொருள் கொண்டு தடம்மாறாமல், அறிவியல் வரிகளில் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். உரையாசிரியர்கள் காலத்தில் கேள்வி வழிச் செய்திகளில் சற்றே மிகை உள்ளதை உணர்ந்து கொண்டால் சங்கப் பாடல்கள் பொய்யாமை விளங்கும்.

மேற்கோள் நூல்கள்:-

1. சிலப்பதிகாரம்
2. தொல்காப்பியம் — பேராசிரியம்
3. — தெய்வச்சிலையார் உரை
4. இறையனாரகப் பொருளுரை
5. W. S. Carve — Lemuria - The lost continent of the Pacific (Jan 1935)
6. W. Scott Elliot — The Story of Atlantis and The lost Lemuria
7. கா. அப்பாத்துரை — குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு.
8. M. S. Krishnan — Geology of India & Burma
9. S. Padmabham — The forgotton History of lands end
10. Arthur Holmes — Pranciples of Physical Geology
11. Raman K. V. — Excavations at Pumpuhar &
    புலவர் நா தியாகராசன் — காவிரிப்பூம்பட்டினத்தில் புதை பொருளாராய்ச்சி (ஆராய்ச்சி மலர் 3. இதழ் 1)
12. கூரியர்
13. கூரியர்
14. Arther S. Gregor — The Adventure of Man (1967)
15. James Ritchie, M.A.DSc — Thomson's Outlines of Zoology

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின், சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆராயப்பட்ட எழுத்துரை.

குன்றுடையன் கரடு

அமைவு

கரூரிலிருந்து அரவக்குறிச்சி செல்லும் வழியில் நான்காவது கிலோமீட்டர் கல்லிலிருந்து செட்டிபாளையம் என்ற ஊருக்குத்தனிச் சாலை பிரிகின்றது. அதில் சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவில் செட்டிபாளையம் என்னும் சிற்றூர் அமராவதி ஆற்றின் வலது கரையில் அமைந்துள்ளது. இவ்வூரைத் தாண்டிச் சுமார் 600 மீட்டர் இட்டேரிப் பாதையில் சென்றால் ஒரு சிறு கரடும் அதன்மீது ஒரு கோயிலும் காட்சி தரும். நீதிபதி கைலாசம் அவர்களின் துணைவியார் திருமதி சௌந்தரா கைலாசம் இந்தச் சிற்றூரான செட்டிப்பாளையத்தைச் சேர்ந்தவராவார்.

காட்சி

அரவக் குறிச்சிச் சாலையில் வரும்போதே இக்குன்றும் கோயிலும் காட்சி தருகின்றது. இக்குன்றில் இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று சிவன் கோயில். கருவரையும் ஒரு மண்டபமும் கொண்ட சிறிய கோயில். கோயிலின் முன்னால் நந்தி மண்டபமும் தனியாக நான்கு தூண்களில் அமைந்த தளத்துடன் காணப்படுகிறது. கருவறையின் மீதுள்ள விமானம் சற்றேபெரியதாக உள்ளது. கோபுரப் பொம்மைகள், ஆங்காங்கு பொக்கையாக உள்ளது.

சிவன் கோயிலின் வலதுபக்கம் சற்றே பின் தள்ளி இன்னொரு கோயில் உள்ளது. அது திருகாமகோட்டமாக இருக்கலாம். அம்மனும் இல்லை, பூசையும் இல்லை. அதற்கும் விமானம் உள்ளது.

இடது பக்கம் மிகச்சிறிய கொட்டகை போன்று ஒரு மண்டபம் பழுதுபட்ட நிலையில் உள்ளது. மடப்பள்ளியாகப் பயன்பட்டிருக்கலாம்.

சிவன் கோயிலின் பின்னே ஒரு மரத்தடியில் பெரிய விநாயகர் ஒன்றுள்ளது.

பெயர்

சுற்றுவட்டாரத்து மக்கள் இதைக்''குண்ணுடையாக்கவுண்டன் கரடு'' என்று செல்லுகிறார்கள். குன்றுடையான் என்பதன் மரூஉ வடிவமே குண்ணுடையான். கொங்கு நாட்டின் புகழ்மிக்க நாட்டுப் பாடலான கள்ளழகர் அம்மானையின் கதைத் தலைவர்களான பொன்னர், சங்கர், நல்ல தங்காள் ஆகியோரின் தந்தையார் குன்றுடையாக் கவுண்டர் ஆவர். அவரது மனைவி தாமரை நாச்சியார். இந்தக் கரட்டிற்கும், கோயிலுக்கும் குன்றுடையாக் கவுண்டருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

கோயிலில் பூசை செய்ய வந்த பார்ப்பன இளைஞன் இதைக் ''குண்டலீசுவரர்'' கோயில் என்கிறார். குன்றில் உள்ள ஈஸ்வரர் என்பதன் மருவிய வடிவமே குண்டலீசுவரர் எனக் கொள்ளலாம்.

கல்வெட்டுகள்

1. இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. நந்திமண்டபத்தில் ஒரு சிறு தனிக்கல்லில் ஒரு கல்வெட்டு உள்ளது. இதன் எழுத்துக்கள் சற்றே திருந்திய வடிவில் உள்ளன. சுமார் 14ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம். இது தனிக் கல்லாதலால் இடம் மாறியிருக்கலாம்.

2. (ஆண்டவனுக்கு) வலதுகைப் பக்கத்தில், கருவறையின் வாயில் நிலையில் ஒரு கல்வெட்டு உள்ளது. வீரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு, வீரசோழ மண்டலத்து, வெங்கல நாட்டு என வருகிறது.

3. வலப்பக்கத்து கருவறை வாயிலின் முன் ஒரு சிறு விநாயகர் உள்ளது. விநாயகரின் அடியில் பாவப்பட்ட தளக்கல்லில் ஒரு கல் வெட்டின் பகுதி உள்ளது. விநாயகரை நகர்த்தி வைத்து விட்டுப் படி எடுக்கலாம்.

4. மடப்பள்ளிக்கருகில் சிறு மதில் சுவரின் பகுதி காணப் படுகின்றது. கருங்கல்லும், சல்லி மண்ணும் கொண்டு கட்டப்பட்ட மதில். அதில் உள்ள கல்லில் ஒரு கல்வெட்டின் பகுதி தெரிகின்றது. அது தமிழ் வட்டெழுத்தாக மாறத் தொடங்கிய காலமாகத் தெரி கின்றது. சுமார் கி. பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டாக இருக்கலாம்.

நடுகற்கள்

கரட்டின் வடக்கு அடிவாரத்தில் மூன்று நடுகற் சிலைகள் தரையில் மல்லாந்து கிடக்கின்றன. அதில் இரண்டு சிலைகளின் ஒளிப்படத்தைக் காணலாம். சிலைகள் சுமார் ஐந்தரை அடி உயரம் உள்ளன. இடது கையில் வில்லும், வலது கையில் அம்பும் உள்ளன, இடையில் குத்தீட்டி உள்ளது. தலையில் கொண்டை காணப்படுகின்றது. ஒளிப்படத்தை கண்ணுற்ற தொல்லியல் துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்கள் சிலைகள் மிகவும் தொன்மையானவை என்று கருத்து தெரிவித்தார்கள். இக்கோயிலிலுள்ள எல்லாக் கல்வெட்டுக்களையும் படி எடுக்கவும், நடுகற்களைப் பற்றிய தகவல் திரட்டவும் ஆணையிட்டுள்ளார்கள்.

முடிவு

பண்டைச் சேரர் தலைநகரான கருவூருக்கு மிக அருகில் உள்ளது. அமராவதி ஆற்றின் கரைமேல் உள்ளது. சிவன் கோயிலில் நடுகற் சிற்பங்கள் உள்ளன. தமிழுக்குப் பிந்திய கல்வெட்டு எழுத்துக்கள் காணப்படுகின்றன. எழுத்துள்ள கற்கள் தாறுமாறாக உள்ளன. பண்டு பீடும் பெருமையும் நிறைந்திருந்த கோயில் பனிரண்டாம் நூற்றாண்டில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதென்று கொள்ளலாம்.

கொங்கு 3/75

கருங்கல் பணிகள்

தமிழகத்துக் கோயில் வரலாற்றில் பல்லவ பெருமன்னர்களுக்குத் தனி இடம் உண்டு. தற்போது நின்று புகழ் பரப்பும் தொன்மை யான கோயில்கள் பல்லவர் காலக் கோயில்களே. அதற்கு முன்னால் ஆண்ட மன்னர்களின் கோயில்கள் ஏதும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

பல்லவப் பெருமன்னர்களில் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதி யிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த மகேந்திர வர்மன் தலையானவன். பல குடைவரைக் கோயில்களையும், கருங் கல் கட்டுக் கோயில்களையும் நாட்டுக்களித்த பெருமை அவரையே சாரும். அத்தகைய கோயில்களில் தொண்டை நாட்டில் உள்ள மண்டகப்பட்டு என்னும் ஊரில் உள்ள கோயில் தனிச் சிறப்பு உடையது. அக்கோயிலில் அவன் பொறித்த கல்வெட்டு ஒன்று உண்டு. தமிழ்நாட்டுக் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்ட வட மொழி கல்வெட்டு அது.

அதன் வாசகம் வருமாறு:

ஏததனிஷ்டகம் அதருமம் அலோகம்
அசுதம் விசித்ரசித்தேன நிருமாபிதம் நிருபேன
பரம்மேசுவர விஷ்ணு லக்ஷ்தா யதனம்

இதன் பொருள்:

விசித்திரசித்தனான நான் இங்கு சிவன், திருமால், பிரும்மா விற்கு மரம், உலோகம், செங்கல் இல்லாமல் கோயில் அமைத் துள்ளேன் என்பதாகும்.

இக்கல்வெட்டு தமிழகத்தின் கட்டடக் கலை வரலாற்றில் மிகவும் முதன்மையானதாக அமைந்துள்ளது. பல கருத்துக்கள் இதனடிப் படையில் உலவுகின்றன.

அவற்றுள் தலைமையானது பயன்படு பொருள்களின் காலம் பற்றியது. உலோகம், மரம், செங்கல் இன்றி கோயில் அமைத்தேன்

என்று கூறுவதால் மகேந்திரவர்மன் காலத்திற்கு முன்னால் தமிழகத்தில் கருங்கல் கோயில்கள் இல்லை என்ற பொருள் கொள்ளப்படுகிறது. அதற்கு ஆதரமாக, இதுவரை அத்தகைய பழங்கோயில்கள் ஏதும் தமிழகத்தில் காணாமை சுட்டிக் காட்டப்படுகிறது. இதுவரை தமிழகத்தில் நடைபெற்றுளள அகழ்வாராய்ச்சிகள் எதிலும் கருங்கல் பணிகள் ஆறாம் நூற்றாண்டிற்கு முந்தியதாகக் கிடைக்கவில்லை.

இக்கூற்றினை ஆராயலாம்.

ஒற்றைக் கற்களில் குகைகள் வெட்டி கோயில் அமைக்கும் பாணி மகேந்திரவர்மன் காலத்தில் பெருவழக்காக காணப்படுகிறது. மகேந்திரவர்மனது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியும், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.[1]

மகேந்திரவர்மனுக்கு முன்னரே குகைத்தளி அமைக்கும் பழக்கம் பாண்டியர்களிடையே இருந்து வந்துள்ளதாகத்தெரிகின்றது. அந்த வகையைச் சேர்ந்தது பிள்ளையார்பட்டி குகை ஆகும். இக்குகையில் உள்ள எழுத்துக்களின் அமைதி கொண்டு இந்தக் குகை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆரும் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுவர்.[2]

தமிழகத்தில் ஏராளமான இயற்கைக் குகைத்தளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சமண முனிவர்கள் ஒதுங்கி வாழ்வதற்கேற்ற இடமாக அவை இருந்துள்ளன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து அத்தகைய குகைகள் புழக்கத்திலிருந்துள்ளன. அங்கு கல்லில் படுக்கைகள் செதுக்கப்பட்டு, நன்றாக தேய்த்து வழவழப்பாக்கப்பட்டிருந்தன. படுக்கையில் தலையணை போன்றும் செதுக்கப்பட்டிருந்தன. அமர்ந்தே வழிபடும் இருக்கைகளும் செதுக்கப்பட்டிருந்தன. சில இடங்களில் மழை நீர் நேராக வழிந்து குகைக்குள் வராமல் தடுக்க தாரை அணிகள் வெட்டப்பட்டிருந்தன தமிழகத்தில் கருங்கல்லில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இருந்தமைக்கு இவை சான்று பகிர்கின்றன. இயற்கைக் குகைத் தளங்களில் குறிப்பிடத்தக்கன கருவூரை அடுத்துள்ள ஆறுநாட்டார் மலைக் குகை, மதுரையை அடுத்துள்ள ஆணைமலைக்குகை, மீனாட்சிபட்டிக்குகை முதலியன.

கருங்கற் பணிகள் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆறுகளின் குறுக்கே அவைகள் கட்டப்பட்

டிருந்தன. அவை கல்லால் ஆனவை. கற்சிறை என்ற பெயரால் அவை குறிப்படப்பட்டன.[3] கலிங்கல் என்றும் அழைத்தனர்.[4] பெருஞ்செல்வர்களின் வீட்டில் வாய்க்கடை கல்லிடித்து இயற்றிய தாம்[4] கல்லிடித்தியற்றிய இட்டுவாய்க் கிடங்கின் நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மில்' என வருதல் காண்க. கல் பொளித்தல் நன்கு தெரிந்த கலையாக இருந்துள்ளது[5] சாளரங்கள் கருங்கல்லால் ஆனவை.[6]

பூம்புகாரி அருகர்ல் வணங்கிய வான்பெருமன்றம், இலங் கொளிச் சிலாதலம் எனப்பட்டது. இது முழுக்கக் கருங்கல்லால் கட்டப்பட்டதென உணரலாம்.[7] கல்மண்டபம் ஒன்றின் குறிப்பும் காணத்தக்கது. நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றம் எனத் தெளி வாகக் குறிப்பிடப்படுகிறது.[8] உயரமான கல் தூண்களில் அமைக்கப் பட்டதால் தூண்களின் நிழல் நன்கு தெரிகிறது. சக்கரவாளக் கோட்டத்தில் 'நிறைக்கல் தெற்று' இருந்ததாகவும் மணிமேகலை கூறுகிறது.

எனவே சங்க காலத்தில் கருங்கல் பணி இல்லையெனக் கூற முடியாது. இதுவரை கிடைத்துள்ள அகழ்வாராய்ச்சிகளில் அத் தகைய பணிகள் ஏதும் கிடைக்க வில்லை என்று கோடலே பொருந்தும். மன்றங்கள், பெருங்குடி மக்கள் வீடுகள், ஆற்றிடையே கலிங்கு முதலானவை கருங்கல் பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

பல்லவர் காலத்தில் அதற்குப் பின்னால் கட்டிய கருங்கல் கோயில் அத்தனையும் இன்று நிலைத்து நிற்கின்றன என்று சொல்ல இயலாது. அழிந்து போனவை ஏராளமாக இருக்கும். அதே போல அதற்கு முன்னாலும் அமைந்த கருங்கல் பணிகளும் அழிந்து பட்டிருக்கலாம். மேலும் அகழ்ந்து காணும் ஆராய்ச்சிகள் தொடரத் தொடர அத்தகைய கருங்கல் கட்டடங்கள் கிடைக்கும் என எதிர் பார்க்கலாம்.

---

1. செங்கம் நடுகற்கள் தமிழகத் தொல்லியல் துறை வெளியீடு
2. கொங்கு 3 ஆம் தொகுதி, பக். 96 இரா. நாகசாமி, பிள்ளையார்பட்டி
3. மதுரை. 725
4. சிலப். 1346 (10:81)
5. மதுரை. 731
6. மதுரை. 482
7. மணிமே. 371 (4:53)
8. சிலப். 1280-90 (10:15-25)

சிற்பக் கலைகள்

பண்டைப் பொறியியல் நூல்கள், சிற்பக் கலையும் உள்ளடக்கியவையாகும். உயிரோட்டமுள்ள சிற்பங்கள் செய்வதில் சங்க காலம் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தது. மண், மரம், சுதை, கல், பளிங்கு இவற்றால் சிற்பங்கள் செய்யப்பட்டன.

அறிவு குறைந்து எழில் நிறைந்த மக்கள் மண்மான் புனையும் பாவையை ஒத்ததென்கிறர் வள்ளுவர்.[1] கோயில்களிலெல்லாம் தெய்வப் படிமங்கள் வைத்து வணங்கப்பட்டன. திருமாலின் நின்ற திருக்கோலம், அரவணைப் பள்ளிக் கோலம் பெருவழக்காக இருந்ததை முன்னரே கண்டோம். விளக்குகள் பல பாவை உருவில் திகழ்ந்ததையும் கண்டோம்.

படிமங்கள் செய்வதில் கைதேர்ந்த கலைஞர்கள் இருந்தனர். ஆடவரின் அழகைக் கூறும்போது, வல்லான் இயற்றிய பாவை போன்றிருந்ததாகக் கூறுவது புலவர் வழக்கம்.[2] புகார் நகரில் ஒரு தெருவில் மண்ணீட்டாளர் வாழ்ந்தனர்.

தேர், சகடம், வண்டி, கட்டில், இருக்கை முதலியன செய்தலும் மனை நூலின் உட்பிரிவாகவே கருதப்பட்டன. அரசரது அமளிகள் பற்றியும், அந்தப்புறக் கட்டில்கள் பற்றியும் அறிவோம்.

தச்சர்கள் இளம் வயதிலிருந்தே தம் மக்களைத் தொழிலில் நன்கு பழக்கி வைத்தனர். ஓடாத பொம்மைத் தேர் செய்து விளையாடியவர்கள் பின்னர் பெருந்தச்சர்களாகின்றனர்.[3] சிவிகை, பாண்டில், அமளி முதலியன பொலிவோடு அமைக்கப்பட்டன.[4] தேரின் உடலில் மணிகளைக் கோர்த்து அணி செய்வது வழக்கம். அவை நாவசைத்து இனிய ஒலிகளை எழுப்பும்.[5] மாட வீதிகளில் தேர் ஓடுவது, முகிலை கிழித்துச் செல்லும் நிலவு போல ஒரு புலவருக்கு காட்சி அளிக்கின்றது.

சகடம் ஒன்றின் விரிவான விளக்கத்தைப் பெரும்பாணாற்றுப் படையால் அறியலாம்.[6] திரண்ட வட்டையில், ஆரக்கால்கள் செறுகி அமைக்கப்பட்ட சக்கரங்கள். முழு மரத்தில் கடைந்தெடுக் கப்பட்ட கும்பங்கள், மத்தளம் போன்றுள்ளன கணைய மரங்களா லான கை என்னும் பார். மேலே ஆரைப் புல்லாலான கூண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குறிப்புகள் தேர், சகடம் முதலியன அமைக்கும் திறப்பாட்டைக் காட்டுகின்றன.

---

1. நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
   மண்மான் புனைபாவை அற்று. (திருக்.)
2. மதுரை. 723 & 4.
3. பெரும்பாண். 248.
4. சிலம்பு. 2238 (14:126)
5. அகம். 4. 'மணிநாவார்க்க மாண்வினைக் தேர்'.
6. பெரும்பாண். 46-50.

நான்காவது உலகத் தமிழ் மாநாடு

இலங்கை

1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் மூன்றாம் தேதி காலை 10 மணி அளவில் மாநாடு தொடங்கப் பெற்றது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் விழா நடைபெற்றது. அரசியல் தலைவர்கள் யாருமின்றி அறிஞர்களே பங்கேற்றனர். வணக்கத்திற்குரிய தனிநாயக அடிகளாரும், பேராசிரியர் சு. வித்யானந்தன் அவர்களும், முன்னிற்று நடத்தி வைத்தனர்.

3, 4, 5, 7, 8 தேதிகளில் காலையில் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுக் கருத்தரங்குகளும், மாலையில் றிம்மர் மண்டபத்தில் (Trimmer Hall) நான்கு பகுதிகளாக ஆய்வுக் கூட்டங்களும் நடைபெற்றன. சமுதாயம், இலக்கியம், மதமும் மெய்ப்பொருளும், மொழியியல், அறிவியலும் நுட்பஇயலும், தொல்லியலும் மாந்தவியலும் ஆகிய தலைப்புகளில் ஆய்வுக் குழுக்கள் நடைபெற்றன. சுமார் 110 கட்டுரைகள் வரப்பெற்றன. எழுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் படித்து ஆராயப்பட்டன.

இலங்கை அறிஞர்கள் பெருத்த அளவு கலந்து கொண்டு அந் நாட்டு கலை, இலக்கிய, மொழி வரலாறு பற்றிய ஆய்வுரைகள் தந்தனர். ஈழத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவிலிருந்து தான் அதிகம் பேர் பங்கு பெற்றனர்.

சென்னை அழகப்பர் நுட்பவியல் கல்லூரி மின்னியல் பேராசிரியர் திரு. இரா. கணேசன் தமிழ்நாடு பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர் கொடுமுடி ச. சண்முகன், 'கொங்கு' இதழின் ஆசிரியர் புலவர் செ. இராசு 'கொங்கு' இதழின் பதிப்பாளர் திருமதி ச. பிரகதம் இலயோலா கல்லூரிப் பேராசிரியர் வணக்கத்திற்குரிய தந்தை இராசமாணிக்கம் மதுரைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் முத்துச் சண்முகனார் ஆகியோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தோர். உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இரா. சனார்த்தனம் பார்வையாளராக அவ்வப்போது கலந்து கொண்டார்.

மேலும் தில்லியிலிருந்து டாக்டர் சாலை இளந்திரையன், திருமதி சாலினி இளந்திரையன், மோசூர் வாசுகி அம்மையார், இரவீந்தர்

குமார் சேத்தி (இந்தி பேசுபவர்), பெங்களூரிலிருந்து தமிழ் சங்கத் தலைவர் திரு. நீலகண்டன், கோவாவிலிருந்து திரு. ரேனதாதேசா அவளுடைய மகள் ஆகியோர் வந்து கலந்து கொண்டனர். ஆக இந்தியப் பிரதிநிதிகள் 13 பேர் வருகை தந்தனர்.

பங்கு பற்றுவோர் ரூ.250 அல்லது 10 பவுன் கட்ட வேண்டும். பார்வையாளர் கட்டணமும் ரூ250 ஆக இருந்ததை ரூ 100 ஆகக் குறைத்துவிட்டனர்.

இதில் ஒரு குழப்பம் நிலவியது. 10 பவுன் இந்திய ரூபாய் 191க்குச் சமம். பின் இந்தியர்களிடம் ஏன் 250 வாங்குகிறார்கள் என்ற ஐயம் நிலவியது. இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுச் செலா வாணியை அதிகம் பெறுவதற்காக வெளிநாட்டு நாணயத்திற்கு 65 சதவிகிதம் கூடுதல் தொகை அளிக்கின்றது. அதனால் இலங்கை யில் 10 பவுன் மதிப்பு சுமார் 252 ரூபாய் ஆகின்றது.

மாநாட்டை கொழும்பில் நடத்தவேண்டும் என்று ஒரு சாரரும் யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்று ஒரு சாரரும் கருதினர். அரசாங்கத்தில் உள்ளோர் எல்லாம் கொழும்பிலேயே நடக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தனர்.

கொழும்பிலே நடத்தினால் தமிழ் மக்களுக்கு இம்மாநாடு பற்றித் தெரியாமலேயே போய் விடலாம். உதவி செய்யப் போது மான தமிழர்கள் கொழும்பில் இல்லை. சிங்கள மக்களின் நடுவில் உயிரற்றதாக மாநாடு அமைந்து விடும் என மாநாட்டு அமைப் பாளர்கள் கருதினர். முழுவதும் தமிழ் மக்கள் நிரம்பி வாழும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதே சிறந்ததென்று முடிவுசெய்து வெற்றி கரமாக நடத்திக்காட்டினர்

இலங்கை அரசில் குமாரசூரியர் என்பவர் தமிழர். அவர், உட்பட அனைவரும் எதிர்ப்புக் காட்டினர். மாநாட்டுப் பிரதிநிதி களின் பெயர்ப் பட்டியலை அமைப்பாளர்களிடம் பெற்று எல்லாத் துறைமுகங்களிலும் விமான நிலையங்களிலும், தந்து அவர்கள் எந்த வழியிலும் உள்ளே நுழையாமல் தடுத்தனர்.

லண்டனில் வாழும் திரு. தில்லைநாயகம் என்ற மின்னியல் பொறியாளர், கொழும்பு பண்டாரநாயகா விமான நிலையம் வந்து சேர்ந்ததும் பலவந்தமாக அதே விமானத்தில் ஏற்றி ரசியாவுக்கு அனுப்பப்பட்டார். வாசிங்டனைச் சேர்ந்த திரு. சிப்மன் இந்தியா வுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். மேலும் மூன்று பேர் இது போலத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதன் பின்னர் அமைப்பாளர்களில் ஒருவரான கோ. மகா தேவா (இவர் ஒரு பொறியாளர்) தலைமை அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின்னர் எல்லா நாட்டிலும் விசா வழங்கினர். அதனால் சுமார் 30 பேராவது வெளி நாட்டினர் கலந்து கொள்ள முடிந்தது.

எந்த அளவுகோலுக்கும் அடங்காதது மக்கள் ஆதரவே ஆகும். மூன்றாம் தேதி நடக்கும் மாநாடு டிச. 31 ஆம் தேதிதான் உறுதிப் பட்டது. அந்த மூன்று நாளில் எல்லா ஏற்பாடுகளும் விரைந்து அமைக்கப்பட்டன. முதல் நாள் திரு. கணேசன் அவர்களும் நானும் சென்றதும் மக்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு தமிழ் நாட்டு மக்களின் நலம் விசாரித்தனர். தாய்த் தமிழ் நாட்டு மக்களிடம் அவ்வளவு பற்று. பெரும்பாலானோர் கேட்ட கேள்வி; 'கருணாநிதி வரவில்லையா? எப்போது வருவார்? இன்று வருவாரா? கண்ண தாசன் வருவாரா?' என்பதாகும்.

மக்கள் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வீடு தோறும் அலங்காரம் செய்யத் தொடங்கினர். இறுதிநாள் வரை செய்து கொண்டே இருந்தனர். எல்லா வாகனங்களிலும் வீடு களிலும் உலகத் தமிழ் மாநாட்டுக் கொடிகள் பறந்தன. மஞ்சள் வண்ணத்தில் கருப்பில் அச்சிட்ட கொடிகள் புதுப்பொலிவைத் தந்தன. தென்னங் குருத்தோலைத் தோரணம் எல்லா வீடுகளிலும் கட்டப்பட்டன.

கடை வீதிகளில் போட்டா போட்டியாக அலங்காரக் கோபுரங் கள் அமைக்கப்பட்டன. முருகன், வினாயகர், சிவன் அட்டைகள் 30 அடி உயரம் வரை நிறுத்தப்பட்டன. மின் விளக்கு வரிசைகள் ஏராளம். எல்லாவற்றுக்கும் மேலாக இதுவரை உலகமே கண்டிராத வகையில் முழுத் தென்னை மரங்கள், பனை மரங்கள், பாக்கு மரங் கள் மூங்கில் மரங்கள் மா மரங்கள், வெட்டிக்கொண்டு வந்து தெரு முழுக்க 20 அடி இடைவெளிகளில் நட்டு வைத்தனர். பனை மரங் களில் முழு வாழைத் தார்களைக் கட்டி வைத்தனர். பலூன்களை ஊதிக் கட்டினர். தெருவெல்லாம் சோலைகளாகக் காட்சி அளித்தன. வீடுகள் தோறும் கோலம் போட்டு வைத்தனர். யாழ்ப் பாண நகரத்தில் மட்டுமல்லாது குடாநாடு முழுவதும் தொலைதூரப் பகுதிகளிலும் அலங்காரம் செய்து வைத்தனர்.

வெறும் தோரணங்களும், வாழை மரங்களும் இரண்டு நாளில் வாடிவிடும் என்பதால், எட்டுநாளும் தாங்கும் வகையில் முழுமரங் களை நட்டு வைத்தனர்.

ஞாயிற்றுக்கிழமை குடாநாட்டு ஊர்கள் அனைத்துக்கும் அழைத்துச் சென்று காட்டினர். எல்லா ஊர்களிலும் எல்லா வீடு களிலும் பூரண கும்ப மரியாதை, நாதசுரம் முழங்க ஊர் விதிகளில் அழைத்துச் சென்றனர்: கொழுகட்டை, சீடை, பிட்டு போன்ற பண்டையத் தமிழ் பலகாரங்களும், இளநீரும் தந்து திணற அடித் தனர்.

ஆறுமுக நாவலர் வாழ்ந்த நல்லூர், சங்கிலி மன்னன் ஆண்ட சங்கிலித்தோப்பு, காங்கேசன் துறை 'சீமேந்து' தொழிற்சாலை முதலியன இடங்களுக்கு சென்று பார்த்தோம்.

மேலை நாட்டு அறிஞர்களை மட்டும் ஓட்டல்களில் தங்க வைத் தனர். இந்திய நாட்டாரை யாழ்ப்பாணத்து நகரப் பெருமக்கள் தத்தம் வீடுகளிலேயே தங்க வைத்துக் கொண்டனர்.

சீமாசில்க் இன்டஸ்ட்ரீஸ் அதிபர் திரு. குணரத்னம் அவர்கள் வீட்டில் தங்கும் பேறு எங்களுக்குக் (சொடுமுடி ச. சண்முகன், ச. பிரகதம்) கிடைத்தது. அவரது துணைவியார் ராணி அம்மை யாரும், செல்வங்கள் ரோசன், நீனா, செல்வி கிரசாந்தி ஆகியோரும் எங்களை அன்பால் திணற அடித்துவிட்டனர்.

புதிதாகக் கட்டப்பட்ட மிகப்பெரிய நவீனமான வீட்டில் தங்களின் அறையை எங்களுக்கு அளித்தனர். நாளும் விதவிதமான புலால் உணவு வகைகளால் எங்களைத் திணற அடித்தனர்.

திரு. கணேசன், புலவர் இராசு இருவரும் வழக்கறிஞர் விசுவ நாதன் அவர்களின் வீட்டில் தங்கினர், அன்பு மழையால் அவர் களும் நனைந்தனர்.

இம்மாநாடு யாழ் நகரில் நடக்கக் கூடாதென்பதில் யாழ் நகர மேயரும் முன்னின்றார். திரு. அல்பிறட் துரையப்பா என்பது அவரது பெயர். அரசாங்கம் விசா வழங்க அனுமதித்ததும், வீரசிங்கம் மண்டபத்தில் மாநாடு நடைபெற அனுமதி அளித்துவிட்டு, இந்தியா வந்து விட்டார். எட்டாம் தேதி திரும்ப வந்து மாநாட்டுப் பிரதிநிதி களுக்கு ஒரு மாநகர வரவேற்பு அளித்தார். உள்ளன்பு இல்லாத விருந்தாகையால் வெளி நாட்டார் யாரும் அதில் கலந்து கொள்ள வில்லை.

இறுதிநாள் ஊர்வலம் மககளே ஏற்பாடு செய்து கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட அலங்கார ஊர்திகள் இடம் பெற்றன. ஈழத்தை ஆண்ட மன்னர்கள், புலவர்கள், வள்ளல்கள், ஊர்திகளில் இடம் பெற்றனர்.

அறிஞர் அண்ணாவின் படம் கொண்ட ஊர்தி ஒன்றும் இடம் பெற்றது. வல்வெட்டுத் துறையிலிருந்து அமெரிக்கா சென்ற பாய்மரக் கப்பலின் மாதிரி ஒன்றும் இடம் பெற்றது.

அன்று இடையிடையே பெருமழை பெய்தது இடையூறாக இருந்தது. அடாது மழை பெய்து ஊர்வலம் இடை யறாது தொடர்ந்து இறுதி நிலையை அடைந்தது. ஈழத்து இளைஞர்களின் உறுதிக்கு இதுவே எடுத்துக்காட்டு.

இந்த ஊர்வலத்தின் போது மின் கம்பி அறுந்து வீழ்ந்து இருவர் இறந்தனர்.

தமிழ் மாநாட்டை அரசியல் உணர்வை வளர்க்கப் பயன் பயன்படுத்தி விடுவார்களோ என்பதே ஈழத்து அரசின் கவலையாக இருந்தது. அவர்களே வியத்தக்க அளவில் அரசியல் கலப்பே ஏதுமின்றி மாநாடு நடைபெற்றது மாபெரும் வெற்றியாகும். தமிழ்த் தலைவர்கள் யாரும் கருத்தரங்கு நடக்கும்போது அரங்கிற்கு வரவே யில்லை. அரசியல் தோற்றும் வாய்ப்புள்ள கட்டுரைகள், படிக்கப்பட வில்லை. அமைப்பாளர்களைப் பொறுத்தவரை இது மாபெரும் வெற்றியாக அமைந்து விட்டது.

அந்தந்த ஊர்மக்கள் தத்தம் ஊர்களில் பொது வரவேற்பு அளித்து, தமிழறிஞர்களை வரவேற்றனர். அங்கேயும் யாரும் அரசியல் பேசவில்லை. தமிழ்நாட்டார் சில பொதுக்கூட்டங்களிலும் கலந்து கொண்டு உரையாற்றிய போதும் விழிப்புடன் நடந்து கொண்டனர்.

மாநாட்டை ஒட்டி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஒரு பொருட்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ஈழத்து சிறப்புகள் அனைத் தையும் ஒன்றாக காட்டியது அக்காட்சி. பனைப் பொருட்காட்சிகள் பட்டுத் தொழில்கள், தொல்லியல் பெருமைகள் ,அறிவியல் காட்சிகள் இடம் பெற்று பெருமை அளித்தன ஒருமைல் நீளத்திற்கு மேல் வரிசையில் நின்று பார்த்தனர் மக்கள் என்றால் அதன் பெருமை சொல்ல யாரே வல்லார்! தொல்லியல் துறையைச் சார்ந்த கலாநிதி பத்மநாபன் மேற்பார்வையில் திறம்பட அமைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு நாளும் வீரசிங்கம் மண்டபம் திறந்த வெளிக் கலை அரங்கு, சுண்டிக்குளி மகளிர்கல்லூரி, ஆகிய மூன்று இடங்களிலும் கலைநிகழ்ச்சிகள் இலவசமாக நடைபெற்றன. பொதுமக்கள் ஒரு இடத்தில் திரளாமல் பரவிப் புழங்க வசதியாக இருந்தது. கரக ஆட்டம், புரவியாட்டம், நாட்டியம், இசையரங்கு நாடகம், வில்லுப் பாட்டு, போன்ற பல்வேறு வகையில் அமைந்திருந்தன.

பள்ளிகளிலேயே இசை முதலியன போதிக்கப்படுவதால் அந் நாடே கலைச்சிறப்பு மிக்கதாக விளங்குகின்றது. கலை நிகழ்ச்சி களைப் பொறுப்போடு ஏற்பாடு செய்தவர் துரைராசா என்ற கட்டிடக் கலைஞராவார்.

ஒன்பதாம் தேதியன்று காலை வீரசிங்கம் மண்டபத்தில் நிறைவுக் கூட்டமும், இரவு பாம்கோட் உணவகத்தில் விருந்துடனும் மாநாடு சிறப்பாக நிறைவுற்றது.

வெளிநாட்டு அறிஞர்களுக்கு குத்துவிளக்கும், தாம்பாளமும் கை விசிறியும் ஓலைப்பெட்டியும் பரிசாக அளித்தனர்.

மாநாட்டு வெற்றிக்கு உழைத்த பெருமக்களுக்கு நன்றி தெரிவிக் கப்பட்டது.

குறிப்பாக திருமதி புனிதம் திருச் செல்வம் திருமதி மகேசுவரி பாலகிருஷ்ணன் திருமதி எம். அருணசலம் திருமதி சபாரத்னம் இன்னும் பல பெருங்குடிப் பெண்டிர் நன்றிக்குரியவராகின்றனர். எந்த நேரத்திலும் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்த பேரின்ப நாயகம் குறிப்பிடத்தக்கவர்.

அடுத்த மாநாட்டை தமிழகத்து மதுரையில் நடத்துவதெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த யாழ்—மாநகர் சோகம் நிரம் பியது இன்றுதான். கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கவும், வெளி நாட்டு அறிஞர்களை யாழ் நகர மக்கள் காணவும் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது.

கூட்டம் வீரசிங்கம் மண்டபத்திற்குள்ளே நடை பெற்றது. கொடுமுடி. ச. சண்முகன், கனடாவைச் சேர்ந்த செல்வி. பிருந்தா பெக், ரோம் நாட்டு அறிஞர் திரு. விக்கி ஆகியோர் சொற்பொழி வாற்றியபின் பாராட்டிதழ்கள் வழங்கப்பட்டன.

மண்டபத்தின் உள்ளே நிரம்பியிருந்ததைவிட வெளியேயும் கூட்டம் மலிந்திருந்ததால், மண்டபத்தின் முன்னால் கூட்டத்தை நடத்த முடிவு செய்து கூட்டம் வெளியே நடத்த ஏற்பாடு செய்யப் பட்டது.

கட்டுப்பாடு நிறைந்த மக்கள் யாழ் — நகர மக்கள் என்பது வெள்ளிடைமலை; எந்த நேரமும் அமைதி காத்தனர். மேடையி லுள்ளோர் சொன்னபடி செய்தனர்.

மண்டபத்தில் வெளியே திறந்த கோட்டை மைதானமாதலால் மக்கள் வசதியாக அமர்ந்து கேட்க வாய்ப்பாக இருந்தது.

வெளிமேடையில் பேசுவதற்காக புலவர் செ. இராசு தில்லியைச் சேர்ந்த இரவீந்தர் குமார்சேத், (தாய் மொழி—இந்தி) திருச்சி ஜமால்மகமது கல்லூரிப் பேராசிரியர் நயினார் முகமது முதலியோர் அமர்ந்திருந்தனர்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் சனார்த்தனமும் மேடையில் இருந்தார். அவர் பேசக்கூடாதென்று போலிசார் கூறுவதாக ஏற்கனவே பேராசிரியர் வித்தியானந்தன் தெரிவித்திருந் தார். அவரும் பார்வையாளராகவே அமர்ந்திருந்தார்.

முதலில் முதல் நாள் ஊர்வலத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த இருவருக்காக இரண்டு நிமிடம் அமைதி காக்கப்பட்டது. அவ்வளவு மக்களும் துளிசப்தம் இல்லாமல் அமைதி காத்தது புல்லரிக்கச் செய்தது.

அடுத்து பேராசிரியர் நயனார்முகமது அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அவரது அழகான பேருரையில் மக்கள் மயங்கி இருந்தனர். அப்போது கிடீரென வேறு ஏதோ ஒலிபெருக்கிக் குரல் தூரத்திலிருந்து வந்து மோதியது. என்ன வென்று விளங்க வில்லை. அணி வகுத்து வந்த காவர்கல் கண்ணீர்ப்புகைக் குண்டு களை வீசினர்.

அளவுக்கதிமாக வீசியதால் நெஞ்சை அடைத்தது. மேடையில் அமர்ந்திருந்தவர்களின் மீதும் வீசினார்கள். தூரத்தில் ஒரு பேருந்தில் உள்ளமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தோர் மீதும். பேருந்திற்குள்ளும் வீசினர்.

பறந்து சென்ற மக்களை பிரம்பால் மிருகத்தனமாக அடித்துத் தாக்கினர். நாலாபக்கமும் சிதறி ஓடினர் மக்கள். பலர் மிதிபட்டுத் துயருற்றனர். தாயைப் பிரிந்த குழந்தைகள். கணவரைப் பிரிந்த மனைவியர் போன்று ஏராளம். அருகிலேசேறு நிறைந்த குளம் ஒன்று இருந்தது, அதில் பலர் விழுந்தனர். செருப்புகளைத் துறந்தனர். பல பெண்கள் புடவைகளை இழந்து ஓட வேண்டியதாயிற்று.

தீரமிக்க யாழ்—நகர் இளைஞர்கள் தமக்கு வந்த இடரையும் கருதாது பலரைக் காத்தளர். குளத்தில் விழுந்தவர்களைத் தூக்கி விட்டனர். தனியாக நின்ற குழந்தைகளைப் பாதுகாப்பான இடத் திற்கு அழைத்துச் சென்றனர்.

கண்ணீர்ப் புகையால் திணறிய இந்திய நாட்டினரை யாழ் நகர் இளைஞர்கள் சூழ்ந்துகொண்டு ஒவ்வொருவரையும் காப்பாற்ற முனைந்தனர்.

புலவர் இராசு அவர்களை வீரசிங்கம் மண்டபத்திற்குப் பின் புறம் இழுத்து சென்று சுற்றுசுவர் மீது ஏற்றிப் பின்பக்கம் குதிக்க வைத்தனர். குதித்த இடம் சாக்கடை. அதிலேயே சற்று தூரம் நடந்து சென்று சாலையேறி, தொடர்ந்து வந்து. எதிரில் வந்த கார் ஒன்றில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்: அவர் களும் பின்னர் வந்து, இவர் வீடு சேர்ந்ததை உறுதி செய்து கொண்டனர்.

அதே போல இரவீந்தர்குமார்சேத், நயினார்முகமது, சனார்த் தனம் ஆகியோர் தத்தம் துணிமணிகளை இழந்து பலதுயருற்று பத்திரமாக வீடுவந்து சேர்ந்தனர்.

தென் ஆப்பிரிக்காத் தமிழர் முதியவர். கையில் அடிப்பட்டு வீடு வந்து சேர்ந்தார்.

மிதிபட்டுக் காயமுற்றோர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டனர். அதில் அன்றே 7 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மாரடைப் பால் இறந்தார். 20 பேருக்கு மேல் படுகாயமுற்றிருந்தனர்.

காவல்துறையினர் திரு. சனார்த்தனம் அவர்கள் பேசக் கூடா தென்று சொல்லியிருந்ததாகவும், பேராசிரியர் நயினாமுகமது அவர் களின் பேச்சை தவறாகப் புரிந்துகொண்டு, இரா. சனார்த்தனம் பேசுவதாகக் கருதி கூட்டம் சட்டவிரோதமானதென்று அறிவித் துக் கலைக்கப்பட்டதாகத் தெரிகிறது, கூட்டத்தில் குழப்பம் என்பது பச்சைப்பொய்.

எனினும் மேடையில் அமர்ந்திருந்த இந்தியர்களையும், பிற வெளி நாட்டாரையும் பாதுகாக்க முயலாமல் மேடை மீதும் கண்ணீர்ப்புகை வீசியதைப் போன்ற கொடுமை வேறு இருக்க முடியாது. மேடையிலிருந்த அறிஞர்கள் தப்பிப் பிழைத்தது தமிழன்னை செய்த தவப்பயனே எனலாம்.

ஒருவாரம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த யாழ் மாநகர் தானாகவே முன்வந்து கடை யடைப்பு செய்தது எல்லா வீடு களிலும் கடைகளிலுப் கருப்புக்கொடி பறந்தது, மூன்று நாள் இலங்கையைச் சுற்றிப் பார்க்கும் திட்டத்தைக் கைவிட்டு, அறிஞர் கள் தத்தம் நாடு திரும்பினர்.

யாழ் மாநகர படுகொலைக்கு இலங்கை அரசு என்ன விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதைக் காலம் தான் நிர்ணயிக்க வேண்டும்! தமிழன்னையின் கண்ணீர்த் துளிகள் வீணாவதில்லை.

....

முரசொலி 18-1.1974.

குயவர் பெருங்குடி

1. முன்னுரை :

தொழில்களில் தொன்மை வாய்ந்தது மண்பாண்டத் தொழிலாகும். மக்களுக்கு ஆறாவதறிவு தோன்றிய தொடக்க காலத் தளவுக்கு முதுமையான கலை, மண் பொம்மைகளும், பானை ஓடுகளும் தொல்லியலார் அகழ்வாய்வில் தவறாது கிடைப்பன. மண் பாண்டத் தொழில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொழிலாகவும் கலையாகவும் வளர்ந்துள்ளது. அதன் தற்கால வல்லுநர்கள் குயவர்களாவர். தமிழ் நாட்டில் குயவர் பெருங்குடி மக்கள் எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் வாழ்ந்து வந்துள்ளனர். தனக்கென தனிச் சிறப்புடைய பழக்க வழக்கங்கள் கொண்டிருந்தனர். தற்போதைய நாகரீகம் அவர்களின் தொன்மைத் தனிச் சிறப்புகளை மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் அவற்றில் எதுவும் நிற்காது; கால வெள்ளத்தில் மறைந்துவிடும். மண் பாண்டங்களின் தேவையும் அதே நிலையில்தான் உள்ளது. அலுமினியம், செம்பு, பித்தளை, வெள்ளி, எவர்சில்வர் போன்ற உலோகப் பாண்டங்களின் படையெடுப்பை மண் ஏனங்களால் எதிர்த்து நிற்க இயலவில்லை. அதனால் விரைவில் தொழில் அருகித் தொழிலாளரை மாற்று வேலைக்குத் துரத்திவிடும். அத்தகைய குயவர் பெருங்குடி மக்களின் பழக்க வழக்கங்களையும் தொழில் முறையையும் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

2. பெயர் :

பண்டைத் தமிழில் குயவர் என்பதைக் குறிக்கும் சொல் '**கோ**' என்பதாகும். [1]'கலம்செய் கோவே! கலம் செய் கோவே!' எனப் புலவர்கள் அழைப்பது அதனால்தான். வேள் என்றால் மண் என்று பொருள். வேட்கோ என்பது மண்ணை வனையும் குயவரைக் குறிக்கும். கோ என்ற சொல் அன் விகுதி பெற்றுத் திரிந்து குயவன் ஆகியிருக்கலாம் [2]'வேட்கோவரில் சிறந்தாருக்கு பண்டை நாளில் வேந்தர் குயம் என்னும் பட்டம் தந்து சிறப்பித்தல் மரபு' என்கிறார் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள். குயவன் என்பதற்குப் பெண்பால் குயத்தி ஆகும். தற்போது குசவன், கொசவன் என்று வழக்கத்தில் வழங்கி வருகிறது. வடமொழியில் குலாலர் என்ற சொல்

குயவர்களைக் குறிக்கும். தற்காலச் சாதிப் பிரிவினையின் வேதனையால் தம்மை மறைத்துக் கொள்ள விரும்பிய தமிழ் நாட்டுக் குயவர்கள் தங்கள் சாதிப் பெயரை குலாலர் என மாற்றி அதற்கான அரசாணையும் பெற்றுள்ளனர். அரசாங்கத்தின் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் அப்பெயர் இடம் பெற்றுள்ளது. தெலுங்கில் 'கொமரவாடு' என்றும், இந்தியில் 'கும்ஹார்' என்றும் பெயர் பெறும். இன்றும் தமிழ் நாட்டு வசை மொழியில் 'கும்பாரு' என்ற சொல் அறிவிலியைக் குறிக்க வழங்கி வருகிறது.

குயவர்கள் தம் பெயரின் பிற்சேர்க்கையாக உடையார், வேளார், செட்டி, பிள்ளை என்ற பெயர்களைச் சேர்த்துக் கொள்வர். மண்ணுடையார் என்பதன் சுருக்கமாக உடையார் வருகிறது. வேள் என்றால் மண் ஆகும். அதன்படி வேளார் ஆகிறார். மண்பாண்டங்களை விற்கும் பொறுப்பை அவர்களே ஏற்பதால் வணிகருக்குரிய செட்டி எனும் பெயர் கொள்வர். பிள்ளை என்ற பெயரை சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ளார் பயன்படுத்துவர்.

பண்டையப் புகழ் :

சங்க காலத்தில் சாதிப் பாகுபாடு இல்லை. தொழிலால் மட்டுமே பாகுபாடு இருந்தது. அதனால்தான் குயவர் என்பதை யாரும் மறைக்கவில்லை. மாறாகப் பெருமையோடு இருந்தனர். அவர்களின் தொழிலைக் கண்டு களித்த புலவர்கள் பாடி மகிழ்ந்தனர்.

[3]'கலம் செய் கோவே! கலம் செய் கோவே! பாலை நிலத்தில் ஏற்பட்ட போரில் மாண்ட என் கணவரை அடக்கம் செய்யும் ஈமத் தாழியிலேயே என்னையும் சேர்த்து அடக்கம் செய்யுமாறு சற்றே அகன்ற வாயையுடைய பெரிய தாழியாகச் செய்து தருவாய் எனக் கணவனை இழந்த தலைவி வேட்கோவை வேண்டுகிறாள்.

[4] 'கலம் செய்கோவே! கலம் செய் கோவே! நீ இடும் சூளையிலிருந்து கிளம்பும் திரண்ட கரும்புகை அகன்ற வானம் முழுமையும் சூழ்ந்து மறைகின்றதே! தேவர் உலகம் சென்ற நெடுமாவளவன் புகழ் மிகவும் பெரியது. அவனைக் கவிக்க நீ ஈமத்தாழிவனைய முயன்றுள்ளாய்! அது அவ்வளவு எளிதான செயலா? இந்நில உலகைத் திருவையாகவும் உயர்ந்த மலையையே மண்திரையாகவும் கொண்டு வனைய உன்னால் முடியுமா? என்று ஐயூர் முடவனார் வியக்கிறார்.

[5]கோஹூர்க் கிழார் கண்ட காட்சி மிகவும் பெரியது. சோழன் நலங்கிள்ளியின் கையில் இப்பெருநாடு எப்படி வணங்கும் தெரியுமா!

அறிவுமிக்க வேட்கோச் சிறுவர் கையில்,திருவையின் மீதுள்ள மண் எப்படிப் பல பல பாண்டங்களாக, அவன் உள்ளத்தில் உள்ளவாறு உருவாகுமோ, அத்தன்மையாகும் இத்தண்பணை நாடு' என் கிறார்.

கம்பரும், திருத்தக்க தேவரும் குயவன் திருவையின் ஓட்டத்தை ஓடும் குதிரையின் வேகத்திற்கு ஒப்பிடுகின்றனர்.

6 கொட்பு உறு கலினப் பாய்மா, குலால் மகன் முடுக்கிவிட்ட மட்கலத் திகிரி போல, வயின் வருவ' என்றும்,

7 'கூட்டுற முறுக்கிவிட்ட குயமகன் திகிரி போல
வாட்டிறல் தேவதத்தன் கலின மா'

என்றும் பாடியுள்ளனர்.

பரதக் கலையில் அஞ்சித மென்ற முத்திரைக்கு குயவன் மண் மிதிக்கும் பான்மை ஒப்புமையாக்கப் படுகிறது.

8 அஞ்சித மென்ப தனி குதி யூன்றி
மிஞ்சிய படத்தை மேநோக் குதலாம்
திடமுட லிப்பதச் செயலுரைத் திடினே
…… ……………. . . . .
குயவர் மண்ணைக் கூட்ட மிதித்தல்
நயமுறு மிதற்கென நாட்டினர் குறுமுனி

9 நற்றிணையில் குயவன்ஒருவன் நொச்சிமாலைஅணிந்து, பலி கள் இட்டு பூசை செய்து பேய்களையும், காக்கைகளையும் பலி யுணர்வுகொள்ள அழைத்து விழாவினைத் தொடக்கிவைக்கும் செய் தியை கயமனார் கூறுகிறார். இவ்வழக்கம் இன்றும் உள்ளது.'கிராம சாந்தி செய்தல்' என்ற பெயரில் தேர்த் திருவிழாவின் முதல் நாள் இரவு, குயவர்களின் பூசை நடைபெறுகின்றது. கொங்கு நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் தரும் சோழன் பூர்வபட்டயத்திலும், உள் ளூர்த் தேவதைகளைப் பற்றிய செய்திகள் உள்ளன. நற்றிணைப் பாடலில் கூறிய பழக்கத்தின் தொடர்ச்சி இன்று வரை உள்ளது வியப்புக்குரியதாகும்.

வேளாரின் கைவண்ணத்தைத் திருவள்ளுவரும் வியந்துரைக் கின்றார்.

10 நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மான் புனைபாவை அற்று.

'வேளிர் வரலாறு' என்ற நூலுள் மு. இராகவய்யங்கார் அவர்கள் குறிப்பிடுவது இங்கு குறிப்பிடத் தக்கது. 'மட்கலம்வனை வோர்க்கு வேட்கோ, இருங்கோவேள் என்ற பெயர்கள் நூலில் வழங்குவதால் குயவரும் வேளிரில் அடங்குவர் போலும்.இது பற்றிய ஆய்வுகள் இன்னும் வெளியாக வேண்டும்.

பண்டைக் காலத்தில் குயவர் குடி மக்கள் பெரும்புலவர் களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். வெண்ணிப் பறந்தலையில் சோழன் கரிகாலனுக்கும், பெருஞ்சேரலாதனுக்கும் நடந்த போரைப் பற்றி வெண்ணிக் குயத்தியார் என்ற பெண்பாற் புலவர் பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.[11] அவரின் ஊராலும் தொழி லாலும் அவர் வெண்ணிக் குயத்தியார் என அழைக்கப்பட்டிருக் கலாம்.

தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய பேராசிரியர், கோடன் என்கிற வேட்கோப் புலவரைக் காட்டுகிறார்.[12] அவன் வடமொழி யில் தேர்ந்தவன். பட்டிமன்ற விவாதம் ஒன்றில் அவன் வாதத் தால் கோபமுற்ற நக்கீரர் தன் பாட்டொன்றால் மயக்கமுறச் செய்து பின் பட்டிமன்றாத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க வேறொரு பாட்டின்மூலம் மயக்கம் தெளிய வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

சைவ சமய நாயன்மார் அறுபத்திமூவருள் ஒருவரான திருநீல கண்ட நாயனார் குயவர் குடியைச் சேர்ந்தவராவர். அவருடைய சிவ பக்தியை உலகிற்கு உணர்த்துவான்வேண்டி, சிவபெருமான் ஆடிய திருவிளையாடலை பெரிய புராணம் வெகுசிறப்பாகப் பாடு கிறது. நமசிவாயத்தின் மீது ஆணையிட்டு 'இனி எம்மைத் தொடாதீர்' என்று தன் மனைவி கூறியதால், பெண்ணினத்தின் உறவைவிட்டு துறவுள்ளத்துடன் இல்லறம் நடத்திய பாண் மையை அவர்களின் முதுமைக் காலத்தில் உலகம் அறிகின்றது.[13]

> [14] 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
> திருநீல கண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்'

என்று நம்பிஆண்டார்நம்பி அவருக்கு வணக்கம் செலுத்துகிறார்.

வேட்கோவர் கைத்திறனில் மயங்கிய புலவர்களில் 'இலியட்' என்ற காவியம் எழுதிய ஹோமரும் ஒருவராவார். [15]

> Pay me my price, potters and I will sing,
> Attend, O. Pallas, and with lifted arm protect their ovens

Let all their cups and sacred vessels blacken well,
And baked with good suceass; yield them
Both fair renown and profit'

4. கல்வெட்டுகள்

கொங்கு நாட்டில் அன்னூர் என்ற ஊரிலுள்ள மண்ணீசுவரர் கோவில் சுவற்றிலுள்ள கல்வெட்டில் வேட்கோவர் பற்றிய செய்தி ஒன்று உள்ளது. அதே ஊரில் உள்ள ஒருவரிடம் பெற்ற பணத்திற்கு வட்டியாக கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு மாதம் ஐந்து திருவோடுகள் கொடுப்பதற்கான ஒப்பந்தம்.[16]

ஆச்சாள்புறம் கோயில் கல்வெட்டு ஒன்றில், குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலத்தார் செய்த முடிவு குறிபபிடத்தக்கது. அதன்படி பாண்டங்களும் விளக்குகளும் செய்யும் குயவர்கள் மேல் துண்டு ஒன்று அணிந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது இடைகாலச் சமுதாயத்தின் குயவர்களின் நிலையை ஓரளவு புலப்படுத்தும். குயவர்களைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் ஏராளம். சமுதாயத்தின் இன்றியமையா உறுப்பு என்ற வகையில் சிறப்புடையார்.

5. தொழிலியல்

மண்ணைக் கொண்டு நடக்கும் பல தொழில்களில் குயவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ஒன்று மக்கள் சமையலுக்கும், மற்ற புழக்கத்திற்குமான சட்டிகள், பானைகள், சேமிப்புக் கலங்கள் முதலியன செய்தல். இரண்டாவது ஆடு, மாடுகளுக்கு குடிநீர் வைக்கும் தாழிகள், தானியங்கள் சேமிக்கும் குதிர்கள் முதலியன செய்தல். மூன்றாவது கோயில் விழாக்களுக்கான உருவாரங்கள், அரண்மனைக் குதிரை,புலி,பசு,காளைகள் போன்ற பொம்மைகளும் கடவுட் படிமங்களும் செய்தல். நான்காவது செங்கல், கூரை ஓடு முதலியன செய்தல். ஐந்தாவது வீடு கட்டுதல் போன்ற கொத்தனார் வேலை செய்தல், ஆறாவது கோயில் கோபுரப் பொம்மைகள் சுதையில் செய்தல். இவை யனைத்தும் பரம்பரையாக செய்துவரும் தொழில்களாகும்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தொழில் நுணுக்கத்தில் அதிக அளவு முன்னேற்றமில்லாதது மண்பாண்டத் தொழில் தான். தமிழ்நாட்டு நாட்டுப்புறங்களில் நடக்கும் தொழில் நுட்பத்தை

அறிந்துகொண்டால் முந்தைக்கால அறிவைத் தானே அறியலாம் ஊகித்து உணர வேண்டிய இன்றியமையாமையில்லை.

18-1-70 முதல், ஒரு வாரம், மதுரையில், மதுரைப் பல்கலைக் கழகமும் தமிழகத் தொல்லியல் துறையும் இணைந்து நடத்திய தமிழக வரலாற்றுக் கருத்தரங்கில் 21-1-70 அன்று காலை 9-15 மணி அளவில் Dr. அய்யப்பன் அவர்கள் தலைமையில் 'சமூகவியல்' பகுதியில் படித்த எழுத்துரையின் ஒரு பகுதி.

அடிக் குறிப்புகள் :

1. புறம் 228; 256
2. நா. மு. வேங்கடசாமி நாட்டார் - புறநானூறு (66) உரை
3. புறம் 256
4. புறம் 228
5. புறம் 32
6. கம்பர் - பாலகாண்டம் - மிதிலைக் காட்சிப் படலம் 10
7. திருத்தக்கத் தேவர் - சீவக. 706
8. பரத சாத்திரம்
9. நற்றிணை 293
10. குறள்
11. புறநானூறு 66
12. பேராசிரியம் (தொல்காப்பியம்) பொரு. 490 உரை
13. சேக்கிழார் - பெரியபுராணம்
14. நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் படை
15. Homer Illiod.
16. ARE 220/1922

காதம்

தூரத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல் காதம். ஒரு காதம் எவ்வளவு தூரம் என்று வினவினால் கிடைக்கும் பதில் சுமார் பத்து மைல் என்பதாகும். அதன் உண்மை பற்றி ஆராய்வதே இக் கட்டுரை.

பண்டைத் தமிழகத்தில் பல பொறியியல் நூல்கள் தமிழில் இருந்துள்ளன. காலப் போக்கில் அவை மறைந்துவிட்டன. அதே நூல்களைச் சிலர் வடமொழியில் எழுதி வைத்திருந்தனர். நல்ல வேளையாக அவை இன்னும் அழியாமல் உள்ளன. அவை வடமொழியில் இருந்த போதிலும் அதன் உள்ளடக்கம் தமிழ் நூல்களே ஆகும். தமிழ் நாட்டில் வழக்கத்தில் இருந்த கருத்துக்களே யாகும். அதில் நீட்டல அளவைகள் தெளிவாக வரையருக்கப்பட்டுள்ளன. அவை சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் கூறியவற்றோடு பொருத்தி வருகின்றன.

இளங்கோ அடிகள் அரங்கேற்றுக்காதையில் மாதவி ஆடிய மேடையின் அளவுகள் தரும்போது நீட்டல் அளவையின் வாய்ப்பாட்டினையும் தருகின்றார். அந்த அளவுகள் தமிழகத்தில் வழங்கி வந்த நிலைவு பெற்ற அளவுகளாகும். தற்போதும் அவை தபதிகளால் பின்பற்றப்பட்டு வருகின்றன, பழைய அளவுகளின் படி ஒரு விரல் என்பது தற்போதைய 1 3/8 அங்குலம் ஆகும்.

ஆறு விரல்	—	ஒரு சாண்	($8\frac{1}{4}$ அங்குலம்)
இரண்டு சாண்	—	ஒரு முழம்	($16\frac{1}{2}$ அங்குலம்)
இரண்டு முழம்	—	ஒரு கோல்	(3 அடி 3 அங்குலம்)

நமது நிகண்டுகளிலும், பிற பொறியியல் நூல்களிலும் இதற்கு மேற்பட்ட அளவுகள் கூறப்படுகின்றன.

நான்கு கோல்	—	ஒரு தண்டம் (11 அடி)
500 தண்டம்	—	ஒரு கூப்பிடுதூரம் (குரோசம்)
4 கூப்பிடுதூரம்	—	ஒரு காதம் (கவ்யூதி)
4 காதம்	—	ஒரு யோசனை

எனவே

கூப்பிடுதூரம்	—	1 மைல் 220 அடி (1.67 கி மீ)
காதம்	—	4 மைல் 880 அடி (6,7 கி மீ)
யோசனை	—	16 மைல் 5 பர்லாங் 220 அடி (26.8 கி மீ)

இந்த அளவுகள் தமிழகத்தின் பண்டைய நகரங்களில் வந்துள்ளதை இன்றும் காணலாம். பண்டைய செங்கற்கள் சாண் அளவின் பெருக்குத் தொகையாக அமைந்துள்ளதைக் காணலாம். நகரங்களின் தெரு அகலங்கள் தண்டம் என்ற அளவில் பெருக்குத் தொகையாக அமைந்திருப்பதைக் காணலாம். 5 தண்டம் அகலம் கொண்டது தேரோடும் வீதி என்றும் அரசப்பெருந்தெரு என்றும் அழைக்கப்படும். இன்றும் திருச்செங்கோடு நகரத்தின் தேரோடும் வீதி 55 அடி அகலம் உள்ளதை அளந்து அறியலாம்.

இனி காதம் என்ற சொல்லின் நீளம் உறுதிப்படுவதைக் காணலாம். தமிழ்நாட்டின் எல்லைகளைக் கூறும் தனிப்பாடல்கள் சில கிடைத்துள்ளன. சேர நாடு அரபிக்கடல் ஓரத்தில் உள்ளது. அதனை விடுத்தால், தென்னகத்தின் கீழ்க்கோடியில் இருப்பது பாண்டிய நாடு, அதற்கு மேலே சோழ நாடு, அதற்கும் மேலே தொண்டை நாடு. ஆக இந்த மூன்று நாடுகளின் நீளங்களையும் கூட்டினால் தமிழகத்தின் மொத்த நீளம் கிடைக்கும்.

பாண்டிய நாடு **ஐம்பத்தாறு காதம்**

வெள்ளாறது வடக்காம், மேற்கு பெருவழி,
தள்ளார் புனல் கன்னி தெற்காகும்–உள் ஆர
ஆண்ட கடல் கிழக்காம் ஐம்பத்தாறு காதம்
பாண்டிய நாட்டெல்லைப் பதி

சோழ நாடு: **இருபத்தி நான்கு காதம்**

கடல் கிழக்கு, தெற்குக் கரை பொரு வெள்ளாறு,
குடதிசையில் கோட்டைக்கரையாம்-வடதிசையில்
ஏழ்நாட்டுப் பண்ணை, இருபத்து நாற்காதம்
சோணாட்டு எல்லையெனச் சொல்.

தொண்டை நாடு: **இருபது காதம்**

மேற்கு பவழமலை, வேங்கடம் நேர் வடக்காம்,
ஆர்க்கும் உவரி அணி கிழக்கு,-பார்க்குள் உயர்
தெற்கு பினாகி, திகழ் இருபதின் காதம்
நல்தொண்டை நாடெனவே நாட்டு.

எனவே பாண்டிய நாடு, சோழ நாடு, தொண்டை நாடு ஆகிய வற்றின் மொத்த நீளம் 100 காதம். அதாவது சுமார் 670 கிலோ மீட்டர். இந்திய நிலப்படம் ஒன்றை எடுத்து கன்னியா குமரிக்கும் திருப்பதிக்கும் உள்ள தூரத்தை அளவு கோள் வைத்து அளந்து பார்த்தால் சுமார் 630 கிலோ மீட்டர். இது ஓரளவு பொருந்தி வரு வதை ஓர்க. ஒரு காதம் பத்துமைல் எனக் கணக்கிட்டால், 100 காத தூரத்திற்கு 1600 கிலோ மீட்டர் ஆகிவிடும். இது பொருந்தாமைக் காண்க.

இன்னுமொரு சான்றையும் காணலாம். மதுரையிலிருந்து பூம்புகார் செல்வதற்காகபயணம் தொடங்கிய கண்ணகி, கோவலன் கவுந்தி அடிகள் ஆகியோர் மதுரையை விட்டுக் கொஞ்ச தூரம் வந்தவுடன், ஓய்வெடுக்கின்றனர். அப்போது 'மதுரை இன்னும் எவ்வளவு தொலைவில் உள்ளதென' கண்ணகி வினவுகிறார். ஆறைஞ்சுகாதம் எனப் பதில் வருகிறது. அதாவது சுமார் முப்பது காதம். காதம் பத்து மைல் எனக் கணக்கிட்டால் 480 கிலோ மீட்டர் என ஆகிவிடும். தரைப்படத்தில் அளந்து பார்த்தால் இந்த தூரம் சுமார் 240 கிலோ மீட்டர் ஆகும். நம்முடைய கணக் குப் படி முப்பது காதம் என்பது சுமார் 191 கிலோ மீட்டர் ஆகும். எனவே இதுவே சற்று பொருத்தமாக இருப்பதை அறியலாம்.

சில கல்வெட்டுகளில் கங்கை-குமரி ஆகிய தூரம் 700 காவதம் என்று சொல்லப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் வஞ்சியிலிருந்து கங்கை வரை சென்ற தூரம் 140 யோசனை என்ற குறிப்பு வரு கின்றது. ஒரு யோசனை நான்கு காதம் ஆதலின் இத்தூராம் 560 காதம் ஆகின்றது. இந்த இரு இடங்களிலும் ஒரு காதத்தின் நீளத் தை 6.7 கிலோ மீட்டர் என்பதற்குப் பதிலாக 3.35 கிலோ மீட்டர் என எடுத்துக் கொண்டாலே பொருந்துகிறது, இடைக் காலத்தில் முழம் என்ற சொல்லை கோல் என்பதற்கு இணையாகப் பயன்படுத் திய பிழையாக இருக்கக்கூடும். எனினும் இது ஆய்வுக்குரிய பகுதி.

நமது இலக்கியங்களில் காதம் என்றும, யோசனை என்றும், கயிறு என்றும் வருகிற இடங்களிலெல்லாம் நுணுகி ஆராய்ந்தால் நீட்டல் அளவை முறை தெளிவு பெறும். எவ்வாறாயினும் காதம் என்பது பத்து மைல் அல்ல, சுமார் நான்கு மைல் ஒரு பர்லாங்கு 220 அடி என்பதை அறிகின்றோம்.

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட எழுத்துரை.

மாதவியின் கடிதங்கள்

மாதவி

எண்ணெண் கலைஞானத்தின் கொடுமுடியாய் விளங்கியவள் மாதவி. சங்ககாலச் சமுதாயத்தில் மேல்நிலைக் குடிமகள். அவளது வாழ்க்கை வழிகளில் முன்னேறிய அறிவியல் விளைவுகளைக் காணு கின்றோம். வளமான வாழ்க்கை வசதிகளை அறிந்து கொள்ளு கிறோம்.

இரண்டு கடிதங்கள்

அவள் கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் எழுதுகிறாள். அவை இரண்டும் தற்போது எந்த அருங் காணகத்திலும் பாதுகாக்கப்பட வில்லை.

முதல் கடிதம்

அடடா, அதன் நேர்த்தியை என்னென்று இயம்புவது! தற் காலத்தில் வாழ்த்துப் பாக்கள் அணி செய்யப்படுவது போன்று சண்பகம், மாதவி, தாமலம், கருமுகை, வெண்பூ, மல்லிகை, கழுநீர் கத்திகை மலர்கள் கொண்டு இயைந்த கதம்பச் சரத்தால் அழகுடன் சூட்டப்பட்டுள்ளது. நடுவில் முற்றிய பூந்தாழை மடல் வெண்மை நிறம் பளிச்சிடுகிறது. அதில் அலத்தகக் கொழுஞ் சேறு கொண்டு எழுதப்பட்டுள்ளது. இறகுப் பேனாவில் மைதோய்த்து எழுதுவது போல எழுதப்பட்டுள்ளது. இங்கு பேனாவிற்குப் பதிலாக "பித்தி கைக் கொழுமுகை" ஆணியால் எழுதப்பட்டுள்ளது. என்ன எழுதி யிருந்ததென் பதைப் பின்னர் காணலாம். எப்போது எழுதினாள் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்திரவிழாவின் போது கடற்கரை மணலில் கானல்வரி பாடு கின்றனர். சொற்குற்றம் நேர்வதால் பிரிவு நிகழ்கிறது. தன்னை விட்டுப் பிரிந்த கோவலனைக் கட்டி இழுத்து வர எழுதுகிறாள் முடங்கல். இனியதோழி வசந்தமாலை எடுத்துச் செல்கின்றாள்.

இரண்டாம் கடிதம்

கோசிகமாமாணி மூலமாக,மதுரைப் புறஞ்சேறியில்கோவலனிடம் சேர்ப்பிக்கப்பட்டது இரண்டாவது கடிதம். குலப்பிறப்பாட்டியோடு குடிபெயர நேர்ந்ததில் தன் பிழை பொருத்தருளக் கேட்கும் இறைஞ்சல் கடிதம். "மண்ணுடை முடங்கல்" என இரண்டு இடங்களில் இளங்கோவடிகளே குறிப்பிடுகிறார். "அலங்கரிக்கப்பட்ட ஓலை" எனக் கொள்ளளாம். ஓலையைக் கையில் பெற்றதும் கோவலன்,தான் அவளுடன் வாழ்ந்த காலத்தில் உணர்ந்த கூந்தல் நெய்மணம் நுகர்ந்தான். அவனால் கீழே வைக்க இயலவில்லை. "ஏட்டகம்" விரித்துப் படித்துணர்கின்றான்.

இலக்கணம்

சங்க காலத்தில் ஆட்சியில் இருந்த இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். எழுத்துக்களின் வரிவடிவத்திற்கு சில குறிப்புகள் மட்டும் எழுத்ததிகாரம் 14, 15, 16, 17. சூத்திரப் பாக்களில் காட்டப் பட்டுள்ளன. அவை

15. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்

16. எகர, ஒகரத்து இயற்கையும் அற்றே

17. புள்ளி இல்லா எல்லா மெய்யும் உரு உரு ஆகி அகரமோடு உயிர்த்தலும் ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்த்தலும் ஆயிர் இயல-உயிர்த்தல் ஆறே

கீறல் எழுத்து

ஓலைச் சுவடிகளைப் படிப்பவர் நன்கு அறிவர்-கீறல் எழுத்துள்ள ஓலைகளில் மெய்க்குப் புள்ளி வைப்பதில்லை. புள்ளி வைத்தால் ஓலை கிழிந்து விடும் என்பர். மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடும் முறை தற்போதும் உண்டு. சங்க காலத்திலும் இருந்தது. புள்ளி இல்லாதிருந்தாலும் பழக்கத்தின் காரணமாக சொற்றொடர் களைப் படித்து புரிந்து கொண்டனர். எனினும் இதனை ஒரு மாற்று ஏற்பாடாகத்தான் கொண்டிருப்பார்களே அன்றி Perfect system of writing ஆக இருந்திருக்க முடியாது.

ஏ, ஓ என்ற எழுத்துக்களின் நடுவில் புள்ளி வைத்துகுறிலாக்கும் பழக்கம் அக்காலத்து இருந்தது. இக்காலத்தில் இல்லை.

பதினேழாம் நூர்பாவின்படி மெய்யெழுத்தின் புள்ளியை எடுத்துவிட்டால், அது அகரம் ஏறிய உயிராக இருக்கும். இது தற்போதும் அப்போதும் பொருந்தும். ஆனால் பிற உயிர்கள் ஏறும்போது உருவு திரிந்து காட்சி தரும். இது இக்கால எழுத்திற்குப் பொருந்தாது. அக்கால எழுத்துக்களுக்கே பொருந்தும். உயிர்மெய்க்காக ஒரு சிறு அடையாளம் முதல் எழுத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கும். இந்த அடையாளங்களே காலப்போக்கில், தனியாக விலகி பெரிதாக ா, ெ ே-போன்ற குறியீடுகளாக வளர்ந்து விட்டன. இகர, ஈகார ஒட்டுகள் மட்டும், முதல் எழுத்தை விட்டு நகராமல் இன்றும் ஒட்டிக் கொண்டேயிருக்கின்றன.



தமிழ் எழுத்து முப்பதில் நேர் கோடால் ஆன எழுத்துக்களே மிகுதி. வளைவுகளைக் கொண்ட எழுத்துக்கள் குறைவு. காலப் போக்கில் நேர் கோட்டால் ஆன எழுத்துக்களும் வளையத் தொடங்கி, மிகுதியான வளைவுகளைப் பெற்று விட்டன.

பனை ஓலையில் கீறி எழுதுவதற்கு வளைந்த எழுத்துக்களே உகந்தன. நேர் கோட்டால் ஆன எழுத்துக்கள் வசதியானவை அல்ல. பனை ஓலையின் நரம்புகள் கிடைமட்டமாக உள்ளவை, அவற்றைக் கீறிக்குழி செய்வதன் மூலமே எழுத்து வடிவங்கள் பனை ஓலையில் இறங்குகின்றன.

தாழை மடலில் வண்ணக் குழம்பில் தோய்த்து எழுத வேண்டிய காரணம் தற்போது நன்கு புலனாகும். எழுத்துக்களில் மயக்கம் இன்றி, தெளிவாக எழுத விழைவோர் வண்ணக் குழம்பையே பயன் பயன்படுத்தினர் என்பதை மாதவியின் கடிதத்தால் உணருகிறோம். கல்லில் வெட்டுவது, வண்ணத்தில் தோய்த்து எழுதுவது போன்றதே யாகும். எப்படி இருந்தாலும் வெட்ட இயலும்.

சங்ககால எழுத்து முறை:

பழந்தமிழ் எழுத்துக்கள் வளைவு பெறத் தொடங்கியது, இரண்டாம் நூற்றாண்டு வாக்கில் ஆகும். எனவே அதற்கு முந்திய காலத்தில் வண்ணக் குழம்பில் தோய்த்து எழுதும் பழக்கமே இருந் திருக்கும். குழம்பு பிடிப்பு பெறல் வேண்டி., முதலில் கீறல் செய்து அதன் மேல் எழுதத் தொடங்கியிருக்கவேண்டும். காலஞ் செல்லச் செல்ல கீரலே போதுமென்ற நிலை தோன்றி விட்டது. பழந்தமிழ் எழுத்துக்கள் வளைவு பெறத் தொடங்கியதற்கு பனை ஓலையில் கீறி எழுதும் பழக்கமும் ஒரு காரணமாகலாம்.

சிலசொற்கள்

இரண்டு கடிதங்களும் "முடங்கல்" எனப்பட்டன. முந்தியது, எதனால் செய்யப்பட்டு, எவ்வாறு எழுதப்பட்டதென்று விளக்கப் படுகின்றது. பின்னதை ஓலை என்று அழைக்கின்றார். "ஏட்டகம்" விரித்துப் படித்தனன் எனவும் குறிப்பிடுகின்றார்.

முடங்கல் என்ற சொல்லிற்கு "தாழை" என்றும் ஒரு பொருள் உண்டு, புத்தம் புதிய தாழை மடல் பளீரென வெண்மை ஒளி வீசும் சில நாட்கள் வாடாமல் இருக்கும். வாடிய பின்னர் பழுப்பு நிறம் கொண்டு விடும்.

ஓலை என்ற சொல் தென்னோலை,பனை ஓலை ஆகியவற்றைச் சுட்டும். பனை ஓலையே எழுதுவதற்குப் பயன்படுவது. வாடுவதற்கு முன் பச்சை வண்ணத்திலும், வாடிய பின்னர் தூவெண்ணிறத்திலும் இருக்கும். வாடிய பனை ஓலையில் வண்ணத்தால் மை தொட்டும் எழுதலாம். ஆணி கொண்டு கீறியும் எழுதலாம். பனை ஓலையில் எழுதப்பட்ட பல வண்ண ஓவியங்களும் எழுத்துக்களும் தில்லி அருங்காணகத்தில் உள்ளன. அண்மைக் காலத்தில் கதர் வாரியம் பனை ஓலையில் திருக்குறளை அச்சிட்டு வழங்குவதை அறிவீர்கள்.

ஏடு என்பது மலரிதழைக் குறிக்கும். வாழை மரத்திலேயே வாடிவிடுகின்ற இலையையும் ஏடு (பனி ஏடு) என்பர். உணவு உண்ணுவதற்காக சேமித்து வைக்கப்படும். வாடிய இலை என்ற பொருளில் பனை ஓலையையும் குறித்தது போலும். முடங்கல், ஓலை, ஏடு ஆகியவை தனித்தனிப் பொருளவாயினும். எழுதுவதற்குப் பயன் பட்டபின், எழுதப் பயன்படும் எல்லாவற்றையும் குறிக்கலாயின.

எழுதும் முறை

சங்ககாலத்தில் எழுதும் முறை எவ்வாறு இருந்ததென்பதைக் காணவே மாதவியைத் தேடிச் சென்றோம். வண்ண மை கொண்டு தோய்ந்து எழுதப்பட்டனவா? எழுத்தாணி கொண்டு கீறி எழுதப் பட்டனவா? வண்ணத்தில் தோய்த்து எழுதுதல் முதற்காலம். கீறி எழுதும் முறை அதன் பின்னர் தோன்றியது.

....

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ஒரு கருத்தரங்கில் வாசித்த எழுத்துரை.

கயலும், வில்லும்

இந்தியப் பேரரசின் தற்போதைய 22 மாநிலங்களில் ஒன்றின் அரசாங்கச் சின்னம் இரண்டு மீனும், ஒரு வில்லும் ஆம். எந்த மாநிலம் என்று வியக்கத் தோன்றுகிறதல்லவா?

உறுதியாகத் தமிழ் நாட்டின் முத்திரை முகப்பல்ல. நெடிதுயர்ந்த கோபுரமே தமிழ்நாட்டின் பீடார் இலச்சினை. தோராயமாகக் கூடச் சொல்ல இயலாது!

இரண்டு மீன்கள் பண்டைத் தமிழ்ப்பாண்டியரின் இலச்சினை. கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் இன்றும் காண்கிறோம். நிற்கும் வடிவன இரண்டும், நடுவில் ஒரு மழு இருக்கும். சிதம்பரம் வடக்கு வாசல் கோபுரச்சுவரில் காணலாம்.

வில் சேரர்களின் சின்னம். இலக்கியங்கள் ஏத்திப் பரவுகின்றன. இனிப்படத்தில் கயலும் வில்லும் எவ்வாறுள்ளன என்று கண்டு களித்திடுவீர்.



வடவாரியர் படை கடந்து
தென் தமிழ்நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய
பாண்டியன் நெடுஞ்செழியன்
(சிலம்பு 3553-7)

என்று பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றி இளங்கோவடிகள் கூறி முடிக்கின்றார்.

ஒரு மொழி வைத்து உலகாண்டவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். அவன் மகன் சேரன் செங்குட்டுவன், பத்தினித் தெய்வத்திற்குப் படிமம் அமைக்க இமயத்திலிருந்து கல் எடுத்து வந்தவன்.

"வில் தலை கொண்ட வியன் பேர் இமயத்தோர்
கற்கொண்டு பெயருமென் காவலன்"

என முரசறைகின்றனர் வஞ்சி நகர் வீதிகளில்(சிலம்பு 3877-8)

ஆந்திர மண்ணில் கோலோச்சி வந்த சதகர்ணி என்றழைக்கப்படும், நூற்றுவர் கன்னர்க்கு

"கங்கைப் பேர்யாறு கடத்தற் காவன வங்கப் பெருநிரை செய்க"

என்று ஓலை அனுப்பினர். (சில 4051-2).

"கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற்பெற்ற
வங்கப் பரப்பின் வட மருங்கு"

எய்தினர் (சில 4063-4).

உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்
தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாம் எனக்
கலந்த கேண்மையிற் கனகவிசயர்
நிலந்தரைத் தானையொடு

நிகர்த்துப் போரிட்டனர் (சில 5069-74), போர், கடும்போர். தேர்ப் படை, புரவிப் படை, யானைப் படை, காலாட்படைகள் மோதின. வடபுலமே தூசு மயமாகியது. தலையிலாக் கவந்தங்கள் ஆடின. பேய்மகள் களித்தாள். ஒரு பகலில் ஆரியவரசர் அமர்க்களத்தில் தென் தமிழ் வீரம் அறிந்தனர்.

"......கனகனும், விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தேராளரொடு
செங்குட்டுவன் தன் சினவலைப்"

பட்டனர் (சில 4109-11). கனக, விசயரை மட்டும் சிறைப்பிடித்துக் கொண்டு மற்றவர்களை விடுதலை செய்து மக்கள் போற்றும் நல்லாட்சிக்கு வழி செய்தனர். "போற்றிக் காமின்" (4137) என ஆணையிட்டனர்

செங்குட்டுவனின் ஆட்சியை அந்நாட்டு மக்கள் விரும்பி ஏற்றனர். போற்றி வாழ்ந்தனர். ஏற்கனவே இமயத்தில் பொறிக்கப்பட்ட கயலும் வில்லும் பெருமைக்குரியனவாகத் திகழ்ந்தன. வில்லையும், கயலையும் அயலாட்சிச்சின்னமென அம்மக்கள் ஒதுக்கவில்லை. அந்நல்ல பண்பு காலத்தால் அழியவில்லை. தொடர்ந்து வளர்ந்து பெருமைமிகு உறவாக விளங்குகின்றது.

ஆம், இன்றும் உத்தரப் பிரதேசத்தின் அரசாங்க முத்திரைச் சின்னம் இரண்டு மீனும் ஒரு வில்லும், கடலே சூழாத உத்தரப் பிரதேசம் இரண்டு மீன்களைத் தன் இலச்சினையில் கொண்டுள்ளது. 'உத்தர் பிரதேஷ் சர்க்கார்' என இந்தியில் மேல் வளையத்தில் எழுதப்பட்டிருக்கும்.

இந்தியா ஒன்றென்ற உணர்வு இன்று தோன்றியதல்ல; 2000 ஆண்டுகட்கு முன்பே பூத்துக் குலுங்கிப் புகழ் மணம் பரப்பியது. உத்தரப் பிரதேசத்து மக்கள் நமது சகோதரர்கள். இமயமும் குமரியும் ஒன்றே.

*

கொங்கு 7/76

சேலம் மாவட்டத்து நடுகற்கள்

காலங்கள் தோறும் தமிழக வரலாறு என்னும் காவியம் எழுதப் பட்டு வருகின்றது. எழுதப்பட்ட ஏடுகள் எல்லாம் தொகுக்கப்பட்டு, துளையிடப்பட்டு, நல்ல நூல் கொண்டு கோர்த்து வைக்கப்படு கின்றன. அவ்வப்போது பிரித்துப் படிக்கும் போது சில பல ஓலைகள் சிதிலமடைந்து விடுகின்றன. அவைகளை உடனே எழுதிச் சேர்க்க ஆள் இன்மையால் அக்காப்பியமென்னும் கட்டிலே சில ஏடுகள் காணாமல் போய்விடுகின்றன. வரலாறு தொடர்ச்சியின்றி, தலையும் புரியாமல், காலும் புரியாமல் போய் விட்டது.

காணாமல் போன ஏடுகளைத் தேடிச் சேர்க்க வேண்டியது நமது கடமையாகின்றது. நமது முன்னோர் ஆங்காங்கு கல்லிலும் செம்பிலும் எழுதி வைத்துள்ளனர். கல்வெட்டாகவும், செப்புப் பட்டயங்களாகவும் அவை கண்ட கண்ட இடங்களில் சிதறிக் கிடக் கின்றன. அவற்றைத் தேடி, தொகுத்து தமிழக வரலாறு என்னும் காவியத்தைச் செப்பம் செய்வோம்.

பெரிய சக்கிலிச்சி ஏரிக் கல்வெட்டு*

டேனிஷ்பேட்டையிலிருந்து இராமமூர்த்தி நகர் செல்லும் வழியில் கேத்தநாய்க்கன்புதூர் என்னும் இடத்தில் பெரிய சக்கிலிச்சி ஏரி என்ற பெயரில் ஒரு ஏரி உள்ளது. அதன் கரையில் ஒரு மதகின் அருகில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை ஏரியின் உட் பக்கமாக உள்ளன. ஏரியில் நீர் வருங்கால் நீரில் மூழ்கிவிடும். கரையைப் பலப்படுத்த மண் இட்டால் அந்த மண்ணுக்குள் மறைந்து விடும். தலைப்பகுதி அரைவட்ட வடிவில் அமைந்துள்ள செவ்வகப் பலகைக்கல், அவற்றை அந்த ஊர்ச் சேரி மக்கள் பெரிய சம்பம்மா, சின்னச் சம்பம்மா என்ற இரு பெண் தெய்வங்களாகப் பாவித்து வணங்கி வருகின்றனர். நீர் வற்றிய காலங்களில் மண்ணைத் தோண்டி கற்கள் வெளியே தெரியுமாறு செய்து வணங்குவது அவர்கள் வழக்கம்.

அவ்விரண்டு கற்களிலும் எழுத்துக்கள் உள்ளன. கி. பி. எட் டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்தில் அவை அமைந் துள்ளன. தமிழ் எழுத்து வடிவின் ஒரு வகைக்கு வட்டெழுத்து என்று பெயர். அதிசயிக்கத் தக்க வகையில் இரண்டு கல்வெட்டின் வாசகமும் ஒன்றாகவே அமைந்துள்ளன. அதன் வாசகம் வருமாறு:

ஸ்ரீ கிடங்கல் புலியார் ம
க னல்லி ஓட்டை கண்டது

எழுத்துக்கள் மிக அழகாகவும், தெளிவாகவும் உள்ளன. எளிய சிவப்பு வண்ணத்தில் கற்கள் அமைந்துள்ளன. தாரமங்கம் கோயில் சிற்பங்கள் செய்யப் பயன்பட்ட வகையைச் சேர்ந்தன.

இந்தக் கல்வெட்டு வாசகத்திலிருந்து சில அரிய உண்மைகள் புலப்படுகின்றன. அந்த ஏரியின் பழைய பெயர் ''ஸ்ரீ கிடங்கல்'' என்பதாகும். கிடங்கல் என்பது நீர்நிலையைக் குறிக்கும். அதில் ''நல்லி'' என்பவன் ஒரு மதகு வைத்துள்ளான். மதகை ஓட்டை எனக் குறிப்பிட்டுள்ளார்கள். நல்லியின் தகப்பனார் பெயர் புலியார். இன்றுவரை அதனைச் சக்கிலியார் தமது தெய்வமாக வணங்கி வருவதால் இப்பெருமகன் அந்தக் குலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் குலத்தில் ஏற்றத் தாழ்வு பெருகும் காலத்திற்கு முன்னால் நடந்த செய்தியாகக் கொண்டால் இதன் பொருத்தம் நன்கு விளங்கும்.

மதகு வைத்த செய்தி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததால் ஏரி அதற்கு முந்திய காலத்தது என்பதும் தெரிவாகும். கொங்கு நாட்டில் வட்டெழுத்துக் கல்வெட்டு மிக அருகியே காணப்படுவதால் இதன் சிறப்பு விளங்கும். வேளாண்மைக்கான ஏரிக்கு ''ஸ்ரீ கிடங்கல்'' என அடைமொழியிட்டு அழைத்தல் நமது முன்னோரின் பண்பாட்டைப் புலப்படுத்தும்.

மருதூர்க் கல்வெட்டு

சங்ககிரி வட்டத்தில் ஒரு புதிய ஏரியினைப் பொதுப்பணித் துறை அமைத்து வருகின்றது. அந்த ஏரி அமைந்துள்ள ஓடை, மதுரகாளியம்மன் ஓடை என்று தற்போது வழங்கப்படுகின்றது. அந்த அணையின் மேல் கரையில் மதுரகாளியம்மன் கோயில் மிகச் சிறியதாக இருந்தாலும் பழைமைச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அதன் அருகில் ஒரு கிணறும் கிணற்று வாரியில் சில வாழை மரங்களும் உள்ளன. அந்த வாரிக்கரையில் ஒரு கல்வெட்டு அமைந்துள்ளது. சாதாரணமான செவ்வக வடிவக்கல். அதன் முன் பக்கமும் வலது பக்கமும் உள்ள வாசகம் வருமாறு.

முகப்பு

சிற்றூர் குளக்குறி
ச்சி படலோடு குறி
ச்சி அஞ் ஞூற்று ம
ங்கல மழபாடி
வடகரை நாட்டில்
இருப்பலி தெண்
ணிலி இந்த ஊர்க
ளில் காணி உடை
ய வெங்கச்சி வே
ட்டுவரில் காடு வெ
வட்ட திருவாள
ப் பிள்ளைக் காணி

வலது பக்கம்

மருதூ
ரில் எ
ழுருந்த
ருள ப
ண்ணி
ன் நார்

மதுரகாளியம்மன் என்று அந்தக் கோயிலின் பெயராக வழங்கி வருகின்றோம். ஆனால் இந்தக் கல்வெட்டிலிருந்து அது பிழை என்று தெரிகின்றது. இந்த இடத்திற்குப் பெயர் மருதூர். காளியம்மன் என்பதே காலப்போக்கில் மதுர காளியம்மன் என்று வழங்கி வருவதை அறியலாம். இருப்பலி என்பது அங்கிருந்து வெகு பக்கத்தில் உள்ள ஊர். எனவே அந்தப் பகுதி வடகரை நாடு என வழங்கி வந்துள்ளமை அறியலாம்.

காடுவெட்டி என்பது பல்லவர்களின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. எனினும் இங்கு அதைக் கொண்டு மயங்கவேண்டியதில்லை. கொங்கு நாட்டின் பூர்வ குடிகளான வேட்டுவருக்கும் இப்பெயர் உண்டு. வேட்டுவர் பிள்ளை என்ற பின்னொட்டு கொண்டுள்ளதை அறியலாம். திருவாளப் பிள்ளை அவர்களின் காணி (உரிமை) ஊர்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் நொய்யலாங்கரையில் அஞ்சூருக்கு அருகில் உள்ளது. மழபாடியும் திருச்சி மாவட்டத்தில் உள்ளது.

கல்வெட்டில் காலம் குறிக்கப்படவில்லை. எழுத்தமைதி கொண்டு இதனைப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வைக்கலாம். மதுரகாளியம்மன் கோயில் அவ்வளவு பழமையுடையதென்றறியலாம்.

திருச்செங்கோடு மலையின் தரைச் சந்தி

திருச்செங்கோடு மலை நாகம் ஒன்று படுத்திருப்பது போல அமைந்துள்ளது. அதனை நாககிரி என்று அழைப்பர். மலையின் மேல் அர்த்தநாரீசுவரரும், செங்கோட்டு வேலவரும் குடிகொண்டுள்ளனர். அந்த மலையின் வால் போன்ற பகுதியின் அடிப்பகுதி மகாதேவ வித்யாலயத்தின் அருகில் தரையோடு வந்து கூட்டுகின்றது. அந்த இடத்தில் சுமார் 500 ஆண்டுகட்கு முந்திய கல்வெட்டு ஒன்று உள்ளது. அதன் வாசகம் வருமாறு:

சோபகிரிது வருஷம்
ஆனி மாதம்
அற்த நாரீசுர
(ப)ண்டி தற்கு
தரை சந்திகை மா
——யம்

எழுத்துக்களுக்கு மேல் ஒரு சிவலிங்கம் வெட்டப்பட்டுள்ளது. மலையின் தொடர்ச்சி தரையைச் சந்திக்கும் இடம் பூசை செய்யப்பட்டுள்ளது. அதாவது மலையையே தெய்வமாக மக்கள் வழங்கி

வந்தது தெரிகின்றது. திருச்செங்கோடு மலை "தெய்வ மாமலை" என்று இலக்கியங்கள் கூறுவது நடைமுறையில் இருந்ததை இதனால் அறியலாம்.

இந்தக் கல்வெட்டு விரைவில் ஆக்கிரமிப்புகளால் அழியும் நிலையில் உள்ளதென்பதை மிக வருத்தத்தோடு உணரவேண்டி யுள்ளது.

இன்னும் சில கல்வெட்டுக்கள்

இன்னும் படித்துப் பார்த்து மக்களுக்கு அறிவிக்க வேண்டிய புதிய கல்வெட்டுகள் சிலவற்றின் தகவல் தருவதும் இன்றியமை யாததாகும்.

1. மதியம்பட்டி அணையில் கீழ்கரையில் சுமார் 300 ஆண்டு கட்கு முந்திய கல்வெட்டு தனிக்கல்லாகக் கிடக்கின்றது.

2. மதியம்பட்டியிலிருந்து பொரசல்பட்டி செல்லும் சாலையில் மதியம்பட்டி ஏரியின் அருகில் பீரியும் இட்டேரியில் ஒரு கல்வெட்டு. எல்லைக்கல் போன்று உள்ளது. நன்கொடைச் சாசனம்.

3. மதியம்பட்டி அணை செல்லும் வழியில் மணியகாரர் தோட்டத்தில் தெலுங்கு எழுத்துக்களுடன் ஒரு கல்வெட்டு கிடக் கின்றது.

4: கேத்தநாய்க்கன் புதூர் பெரிய சக்கிலிச்சி ஏரியின் கலுங் கலுக்கு அருகில் கன்னட எழுத்துக்களுடன் ஒரு நடுகல் உள்ளது.

சில நடுகற்கள்

போரில் வீரங்காட்டி மடிந்தவர்க்கு கல் நட்டு தெய்வமாக வணங்குவது நம்நாட்டு வழக்கம். சங்க காலத்திலிருந்து இந்த வழக்கம் உள்ளது. கல்லில் வீரனின் உருவமும் அவன் சிறப்பும் எழுதப்பட்டிருக்கும். எழுத்து இல்லாமலும் சில நடுகற்கள் இருக்க லாம். அத்தகைய அருமை வாய்ந்த நடுகற்கள் பல சேலம் மாவட் டத்தில் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன. அவற்றில் சில வருமாறு:

1. ஆட்டையாம்பட்டியிலிருந்து சேலம் செல்லும் வழியில் ஊரின் எல்லையில் சாலையின் வலதுப்பக்கக் காட்டில் ஒரு நடுகல் உள்ளது. இரண்டு பக்கக் கல்லும் மேற்கூரைக் கல்லும் உள்ளது. பின் கல்லில் இரண்டு வீரர்களின் உருவங்கள் உள்ளன. ஒரு வீரன் குதிரைமீது அமர்ந்தபடி கையில் ஈட்டி வைத்துள்ளான். குதிரை

தாண்டும் கோலத்தில் உள்ளது. எதிரே உள்ள வீரனின் கையில் நீளக் குழல் துப்பாக்கி உள்ளது. இது போன்ற நடுகல் இதுவரை தமிழ்நாட்டில் வேறு எங்கும் கண்டுபிடிக்கப்படவில்லை.

2. கே. மோரூர் சாலையில் பெருமாள் கோவிலுக்கு முன்னர் ஒரு நடுகல் உள்ளது. இரண்டு பக்கக் கல்லும் மேற்கூரைக் கல்லும் உள்ளது. பின் கல்லில் ஒரு ஆடவனும் அவனருகில் இரண்டு பெண்களின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. மூன்றும் வணங்கும் வடிவில் கைகளைக் கூப்பியவாறு அமைந்துள்ளன.

3. பழைய சூரமங்கலத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் சாலையின் ஒரு ஓரத்தில் ஒரு நடுகல் உள்ளது. அதற்குச் செங்கல் கட்டிடமும் சிறிய வளைவுக் கூரையும் உள்ளன. ஒரு வீரன், ஒரு பெண். ஒரு பசுமாடு அதன் கன்று ஆகிய உருவங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

4. சங்ககிரியில் திருச்செங்கோட்டுச் சாலைகில் தாலூகா அலுவலகத்தின் அருகில் சாலையில் ஒரு நடுகல் உள்ளது. மக்கள் தினசரி மஞ்சள் பூசி மாலையிட்டு வணங்குகின்றனர். ஒரு ஆடவனின் உருவமும் ஒரு பெண்ணின் உருவமும் வணங்கிய நிலையில் உள்ளன. தனிக் கல். கூரையில்லை எழுத்து உள்ளதா, இல்லையா என்று தெரியவில்லை.

தமிழ் நாட்டில் வரலாறு ஒழுங்காக எழுதப்படவில்லை என்பதை ஒரு குறையாகக் கூறுவர். ஆனால் தமிழர்களைப் போன்று எல்லாச் செய்திகளையும் அவ்வப்போது எழுதி வைத்தவர்கள் கிடையாது. சங்க காலந்தொட்டு சங்கிலித் தொடர்போல எல்லாக் காலத்திலும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றைத் தேடித் தொகுத்து செப்பம் செய்ய வேண்டியது இற்றைநாள் மக்கள் கடமையாகும்.

....

கொங்கு 4/1977

* பத்திரிக்காதர்மம்

கேத்தநாய்க்கன் புதூர் ஏரிக் கல்வெட்டு, கொங்குநாட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழகத்து மக்கள் மற்றும் உலக அறிஞர்கள் அறிதல் வேண்டும் என்ற ஆர்வம் கருதி, இச்செய்தியை 'இந்து' நாளிதழுக்கு அனுப்பபட்டது. நெடுந்தொலைவில் இருந்த போதிலும், பணியின் இடையே, பசி பாராது கடும் வெய்யிலில், மண்ணைத் தோண்டி, கல்லைக் கருவி, எளிய கருவிகள், வசதிகள் கொண்டு காகிதத்தில் மசிப்படி (estampage) எடுக்கப்பட்டது.

வட்டெழுத்தில் பயிற்சி குறைவாக இருந்த போதிலும், தொல்லியல் புலவர்களின் துணையோடு படித்து வாசகத்தைச் செப்பம் செய்து கொள்ளப்பட்டது. பின்னர் மசிப்படி, வாசகம், கல்லுள்ள இடம் மற்ற எல்லாக் குறிப்புகளுடன் விவரமாக எழுதி இந்துப் பத்திரிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தினசரி இந்து நாளிதழில் தேடியதுதான் மிச்சம். ஒரு நாள். அதே செய்தி இந்துவில் புகைப்படத்துடன் வெளியானது (புகைப்படம் நாம் அனுப்பவில்லை) அடியில் From our corespon. dant என்று இருந்தது.

ஒரே அதிர்ச்சி. உலகப்புகழ் பெற்ற நாளிதழிலா இந்த எத்து வேலை? இதனை ஆராய்ந்ததில் கிடைத்த உண்மை இதுதான்.

அந்தச்செய்தியில் சேலம், அருங்காட்சியகத்தின் பெயர், ஒரு சிறிய கன்னடக் கல்வெட்டின் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது அவரை அணுகி விசாரித்தோம். ஒருநாள் இந்துவின் சேலம் நிருபர் அவரை அனுகி, விவரம்முழுக்கக் கூறாமல் தன்னுடன் வருமாறு, இந்த ஏரிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். ஏரியின் முன்னாலிருந்த கன்னக் கல்வெட்டுக் கொண்ட சிறிய நடுக்கல்லைப் பார்த்து விவ ரம் கேட்டுக் கொண்டார். (அதன் வாசகம் இன்னும் படிக்கவில்லை) பின்னர் ஏரிக்கரையில் நாங்கள் ஏற்கனவே கரையைத் தோண்டிக் காண வசதியாக வைத்திந்தபடியால், புகைப்படம் எடுத்துக் கொண் டாராம். பிறகு திரும்பிவிட்டார்கள். பின்னர் இந்துவில் செய்தி வந் தது. அவருக்கும் இந்த ஏரியில் கல்வெட்டு இருத்த செய்தி இந்த நிருபருக்கு எப்படித் தெரிந்ததென்பது நெடுநாள் புதிராகவே இருந் தது. நாங்கள் கலந்துரையாடிய பின்னரே உண்மையை அறிந்து கொண்டார்,

ஒரு துப்பறியும் கதையின் மர்மம் துலக்கிய திருப்தி மிஞ்சியது. எங்கள் பெயர் வரவில்லையாயினும், எங்கள் செய்தி, அதே ஆங் கிலச் சொல் பிரயோகங்களுடன் இருந்ததில் மகிழ்ச்சியே.

இந்துவில் வெளிவருமுன்னரே கொங்கு இதழில் வந்து விட்டது. தினமணிச் சுடரிலும் "கல் வெட்டுக் கடவுள்" என்ற பெயரில் (எங்கள் பெயர் இல்லாமல்தான்) வந்துவிட்டது.

நமது "தர்மநெறி தவறாத" தமிழ் நாட்டுப் பத்திரிக்கையாளர் களிடம் இந்த நாட்டு இளைஞர்கள் விழிப்போடு இருக்க வேண்டு மென்பதற்காகவே இதனைக் குறிப்பிட்டோம். பொருத்தருளுக.

மாமல்லை

மாமல்லையைப் பற்றி அறிமுகப் படுத்தும் நூல்களுள் தலையா பது "மாமல்லை" என்ற நூல். மாமல்லையில் ஐந்து ரதங்களை குன்றன்ன கோயில்கள் என்று அதன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவற்றின் நடுவில் நிற்போர் "இங்கே முதலிடம் எதற்கு? கலைக்கா? கற்பனைக்கா?" என வினவுவர் என்கிறார் அதன் ஆசிரியர் திரு. நாகசாமி அவர்கள்.

கலை, கற்பனை இவற்றை விட உயர்ந்த காரணம் ஒன்று தெரிகிறது. அதுதான் "அறிவு" தனக்கு முற்பட்டு இருந்த கட்டிட அறிவை பின் வருவோர் கண்டு பயனடையும் வகையில் சிறிய அளவில் செய்த மாதிரி அமைப்புகளே அவை (Prototype Models) சிற்பிகள் சுவடி கொண்டு பல நாள் விளக்க வேண்டிய துன்பத்தைக் குறைக்கும் மாதிரி நகரம். பொறியியல் கணக்கீடுகளையும் சூத்திரங்களையும் விளக்குவதற்கான காட்சிக் கூடம். வருங்கால மக்கள் அறியும் வண்ணம் அமைக்கப்பட "டிஸ்னிலேண்டு". வால்ட் டிஸ்னிக்கு வழிகாட்டியே இராமசிம்மப் பல்லவன் தான்,

தொல்லியலர்கள் தமிழ் நாட்டுக் கட்டிடக்கலைப் பாடத்தைத் தொடங்குவதே மாமல்லையிலிருந்து தான். அதற்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடங்கள் எதுவும் கிடைக்காததே இதற்குக் காரணம்'

மகேந்திரமர்மன் (கி. பி. 609-630) தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டில், 'மகேசுவரனுக்கும், பிரமதேவனுக்கும், விஷ்ணுமூர்த்திக்கும், மரம், கல், சுண்ணாம்பு முதலியன இல்லாது மகேந்திர வர்மன் கோயில் ஒன்றை அமைத்தான்!' என்று கூறுகிறான்.

இதனால் பல்லவர்களுக்கு முன்னர் தமிழகத்தில கட்டிடக் கலை சிறந்து விளங்கியது என்றும் அதில் பயன்படுத்திய பொருள் கல், செங்கல், சுண்ணாம்பு மரம் ஆகியவை என்றும் அறிகிறோம், கல்லாலான குகைக் கோயிலை மகேந்திரவர்மனுக்கு முன்னாலேயே பாண்டியர்கள் வெட்டி வைத்திருந்தனர் என்பதை ஆனைமலைக் குகைத்தளியிலிருந்து அறியலாம்,

இந்தக் குகைத்தளிகள் ஏற்கனவே இருந்த கட்டிடத்தின் மாதிரிகள் என்று ஏன் சொல்கிறோம்? குகைத்தளியின் அமைப்பைப

பார்த்தாலே இதன் காரணம் புலனாகும். குகைத்தளிகள் அமைக்கும் பாறைகள் பெரும்பாலும் கிரானைட் (graiut) வகையைச் சேர்ந்தவை. பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு உருகி ஓடிய பாறைக் குழம்பு குளிர்ந்து கருங்கல்லாக மாறியவை. அதன் துகள்களில் ஒன்று வெட்டப்படுவதால் மற்றதன் மேல் விசை ஏதும் ஏற்படாது. ஒரு பகுதியில் குடைந்தாலும் மேல் பரப்பு விழுந்து விடாது. அதனால் குகைத்தளிகளுக்கு, தூண்களும் உத்திரங்களும் தேவையில்லை, ஆனால் கிட்டத்தட்ட எல்லாக் குகைத்தளிகளின் உள்ளமைப்பும், தூண், உத்திரம் முதலியவற்றோடு சாதாரணச் செங்கல் கருங்கல் கட்டிடங்களையே ஒத்திருக்கின்றன. சிற்பிகள் இதுநாள் வரை தூண், உத்திரம் இல்லாத ஒரு கட்டிடத்தை எண்ணிக் கூடப் பார்த்ததில்லை. பிற கட்டிடங்கள் எப்படியிருந்தனவோ அதே வகையில் 'நமக்கேன் வம்பு' என்ற வகையில் உட்புறத்தையும் அமைத்து விட்டனர்.

வெறும் கலைக்காகவோ, கற்பனைக்காகவோ என்றால் வெளித்தோற்றத்தில் எல்லாக் கைவண்ணத்தையும் காட்டிவிட்டு, உள்ளே மொட்டையாக விட்டிருப்பார்கள்.

கருங்கல் எவ்வளவு அமுக்கம் (Compressiou) தாங்கும் என்பது தற்காலக் கருவிகளால் தெளிவாக உணர முடிகிறது. அதே வேளையில் எவ்வளவு இழுப்பம் (Tension) எடுக்கும் என்ற சோதனைகளில் சீரான தகவல்கள் கிடைக்கவில்லை. ஒரே கல்லின் இருவேறு துண்டுகள் இருவேறு மதிப்புகளைத் தரும். இந்த ஒரே காரணத்தால்தான் கருங்கல்லின் பயன் தற்காலப் பொறியியலில் அருகி உள்ளது. அமுக்கம் மட்டும் வரும் இடங்களில் கருங்கல் தாராளமாகப் பயன்பட்டு வருகிறது. இழுப்பம் வரும் இடங்களிலெல்லாம் லாம் கல்லைவிட மரம் அதிகமாக முன்பு பயன்பட்டு வந்தது. இந்த இடத்தைத் தற்போது உறுதிசெய்த கற்காரை பிடித்துக் கொண்டது.

மாமல்லை ஐந்தளிகளில் ஐந்தும், தனித்தனிக் கட்டிட அமைப்புகளைக் காட்டுவது அதன் சிறப்பாகும். தர்மராஜ ரதம் என்ற முதல் கட்டிடம் தமிழகத்தின் பழைய முகில் மாடங்களின் மாதிரியாகும்.

குறியவு நெடியவுங் குன்று கண்டன்ன
சுடுமண்ணோங்கிய நெடுநிலைக் கோட்டம்
—மணிமேகலை

மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழி
—சிலப்பதிகாரம்

நெடுநிலை மாடங்களைபற்றிச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் கூறப்படுகிறது. தர்மராஜ ரதம் மூன்று மாடங்களைக் கொண்டதாக உள்ளது.

வகைபெற எழுந்து வானம் மூழ்கி
இல் காற் றிசைக்கும் பல் புழை நல்லில்

(மதுரைக்காஞ்சி 357—8)

என்ற இலக்கணத்திற்கேற்ப சாளரங்கள் வைத்து வசதியாக அமைந்துள்ளது. அர்ஜுன ரதமும் முகில் மாடங்களின் அமைப்பிலேயே அமைந்ததாகும்.

பீமரதம் சாலைவடிவில் அமைந்துள்ளது. மாமல்லையின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்: ''இதன் இருபக்கங்களிலும் மரச்சட்டங்களை உபயோகித்து வேயப்படும் கூரையின் அமைப்பு அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ளது.'' அலங்காரத்திற்கு மட்டுமல்லாமல், பிறர் அறிவதற்காகவும் வெட்டப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.

தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை

(பெரும்பாணா 263-5)

புதுவை வேய்ந்த கவி குடில்

(பெரும்பாணா 225)

ஈந்தலை வேந்த வெய்ப்புரக் குரம்மை

(பெரும்பாணா 88)

இன்று இச்சாலை அமைப்பை தமிழ் நாட்டில் எல்லாச் சிற்றூர்களிலும் காணலாம்.

திரௌபதி ரதம் இதே அமைப்பைக் கொண்டதாயினும் சதுர வடிவமானது. பீமரதத்தில் இருபுரம் சரிவாகவும் மீதி இருபுரம் செங்குத்தாகவும் உள்ளன. திரௌபதி ரதம் நாற்புரமும் சரிவாக உள்ளது. கூரைக்கட்டிடங்களுக்குப் பின்னர் வந்த ஓட்டுவில்லை வீடுகளிலும் இவ்வமைப்புகளைக் காணலாம்.

முக்கியமான கட்டிட அமைப்பு சகாதேவரதம். அதன் முகட்டை 'தூங்கானை மாடம்' என இலக்கியங்கள் கூறுகின்றன. பொறியியலில் ''குவிமாடம்'' (Dome) என்பர். செங்கல் கட்டிடத்திற்கு வசதியானதாகும். இன்றும் கோயில்களில் கருவறைக்கு மேல் இத்தகைய மாடங்கள் இருப்பதைக் காணலாம்.

யானையின் பின்புறம் போலத் தோற்றம் தருவதால் அதைத் தூங்கானை மாடம் என்றனர்.

புதுப் பிறை அன்ன சுதைசெய் மாடத்து
(புறம் 378)

மண்டபங்கள் பிறை போல வடிவமுடைய மாடங்கள் கொண்டிருந்தன, என அறிகிறோம். அவை சுண்ணாம்புச் சுதையால் ஆனவை.

மாமல்லையில் ஐந்தளிகள் அமைந்துள்ள வகை பெருநகரின் அகன்ற தெருப்போல ஒரே வரிசையில் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. 'வினைபுனை நல்லில்' பல கொண்ட, வியநகரரக, அமைந்துள்ளது கண்டு மகிழத்தக்கது.

இராஜசிம்மப் பல்லவன் ஐந்தளிகளை மட்டுமல்லாது மாமல்லை முழுவதையும் அமைத்ததில் கலை, கற்பனை இவற்றைவிட பொறியியற் கருத்தே முந்தியிருப்பதை யூகிக்கலாம். தனக்கு முன்னிருந்த கட்டிட அமைப்புகளை ஒரே இடத்தில் காணும் வண்ணம் அமைத்த பெருநோக்கம் புலனாகிறது. தமிழகத்துக் கட்டிடக் கலையின் வளர்ச்சியை ஆராயப் புகுவோர், ஐந்தளிகளுக்கு மூலக் கருவாக உள்ள சங்க இலக்கியக் கட்டிடக் கலைக் குறிப்புகளைத் தொட்டுத் தொடங்க வேண்டிய நிலைமை கண்கூடு. 'டிஸ்னிலேண்டு'க்கு முன்னோடியாக அமைந்த மாமல்லை, தமிழகத்தின் அறிவு சார்ந்த கலைக் கண்ணோட்டத்தின் விளைவேயாம்.

23-5-1971 அன்று தமிழகத் தொல்லியல் துறை நடத்திய "பல்லவர்காலக் கலை" கருத்தரங்கில் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தலைமையில் ஆராயப்பட்ட எழுத்துரை.

புகார்த் தூம்பு

பதியெழு வறியாப் பழங்குடி நிறைந்த புகார், இந்திர விழா மறந்ததால், கடல் பொங்கி அழிந்து விட்டதாக மணிமேகலை கூறு கிறது. அது உண்மையாகத் தெரியவில்லை. அன்றைய பெருநகர் பூம்புகார் இன்று பல சிற்றூர்களாகக் காட்சி அளிக்கின்றது. அங்கு நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் வரலாற்றை மெய்ப்பிக்கும் சான்றுகள் பல கிடைத்துள்ளன. அவற்றில் தலையாயது செங் கல்லால் கட்டப்பட்ட தூம்பு ஆகும்.

நடுவரசின் தொல்லியல் துறை அகழ்வுகளை மேற்கொண்டுள் ளது. செங்கல் கட்டிடத்தின் அமைப்பு நீர்நிலையியல் (Hydrostatics) விதிகளுக்கேற்ப வளைவாக அமைந்துள்ளது. நமது முன்னோரின் நீரியல் புலமையை இது புலப்படுத்தும்.

தொல்லியலர்களின் மதிப்பீட்டின்படி அது சுமார் 8 மீட்டர் வட்டமான குளமும் அதற்குள் நீர் வருவதற்கான வழியும் ஆகும். நீர் வழியின் அகலம் 84 சென்டி மீட்டர் என அளந்து கண்டுள்ள னர்.

அது வட்டக் குளமாக இருக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. இரு பக்கமும் நீண்ட மண் கரையின் நடுவில் அமைந்த தலைப்புப் பகுதி (head works) ஆக இலக்கலாம்.

நிச்சயமாக அது நீர் உள்ளே நுழையும் வழி அல்ல. நீர் வெளி யேறும் தூம்பு ஆகும். வெளியேறும் நீர், முழு அளவில் செல்வ தற்காக அமைக்க வேண்டிய வளைவுகளுடன் அமைந்திருப்பதே சான்றாம். நீரியலில், துளைவழி நீர்ப்போக்கு (flow through notehes) அறிந்தோர்க்கு அது எளிதில் புலனாகும்.

தூம்பின் அகலம் 84 சென்டி மீட்டர் என்பது குறிப்பிடத்தக் கது. அக்காலத் தமிழர்கள் பயன்படுத்திய கோல் என்ற அளவு கோலின் நீளம் 84 சென்டி மீட்டர் என்பதை அறிந்தால், இலக்கியத் திற்கும் நடைமுறைக்கும் உள்ள ஒற்றுமை புரியும்.

மாதவியின் அரங்கேற்றம் நடைபெற்ற மேடையின் அளவுகளை எடுத்துரைக்கும்போது, இளங்கோ அடிகள் இக்கோலின் விவரத்தையும் தருகின்றார்.

அதுவோ நிலத்தை அளந்து வீடுகளை வகுக்கும் (design) பொறியாளர்கள் பயன்படுத்துவது. பெருமலைகளில் உயரமாக வளர்ந்த மூங்கிலைத் தேர்ந்தெடுத்து, அதில் கணுவுக்குக் கணு ஒரு சாண் நீளம் உள்ள பகுதியில் நான்கு சாண் நீளம் வெட்டிக் கொள்வர். அதன் மொத்த நீளம் 24 விரற்கடை ஆகும். அதுவே அளக்கை நூல்களின் நெறிப்பட அமைந்ததாம். ஒரு விரற்கடை என்பது 1-3/8 அங்குலம். 8 விரற்கடை கொண்டது ஒரு சாண் (8-1/4''). 4 சாண் கொண்டது ஒரு கோல். (33'') இது 84 சென்டிமீட்டருக்குச் சமம். தஞ்சைப் பெருவுடையார் கோயில் இந்தக் கோல் அளவுகளிலேயே அமைந்துள்ளது. மாமல்லைக் குடைவரைகளும் இதே அளவால் அமைந்ததாகும்.

இளங்கோ அடிகள் தரும் கோல் அளவில், அக்காலக் கட்டிட அளவுகளுடன் பொருந்தியிருப்பது பெருவியப்பளிக்கக் கூடிய உண்மை ஆகும். இலக்கியத்தின் மெய்ப்பாடு தெள்ளென விளங்கும்.

கொங்கு 4/1973

மாதவி ஆடிய மேடை

ஆடலரசி மாதவியின் அரங்கேற்றத்தை கூறும் இளங்கோ அடிகள் அந்த மேடையை அமைத்த பொறியாளர்களுக்கு பாராட்டுத் தெரிவித்து விட்டு அதன் அளவுகளையும் அழகுகளையும் எடுத்துரைக்கிறார். அளக்கும் கோலின் தன்மையையும் காட்டுகின்றார். அந்தக்கோல் மூங்கிலால் ஆனது; கணுவுக்குக் கணுவு உள்ள தூரம் ஒரு சாண்; இருபத்தி நான்கு விரற்கடை நீளமுள்ளது. (ஒரு விரற்கடை 1 3/8 அங்குலம்; ஒரு கோல் 33'')

மேடையின் நீளம் எட்டுக்கோல் (22' - 0'') அகலம் ஏழுகோல் 19' - 3''), மேடையின் உயரம் ஒரு கோல் (2' - 9'') மேடைக்கும், உத்தரப் பலகை (CeillngSlab) க்கும் இடை உயரம் நான்கு கோல் (11' - 0''), மேடைக்கு இரண்டு பக்கமும் வாயிற்படிகள் இருந்தன. மேடையைச் சுற்றிலும் பூத கணங்களின் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

நான்கு தூண்களிலும் ஒளி விளக்குகள் பொருத்தப் பட்டு மேடையில் ஆடுவோர் நிழல் கீழே விழாதவாறு ஒளியமைப்பு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு ஓவியத் திரைகள் விரிக்கவும் சுருக்கவும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தன! விதானம் (ceiling) பல வகை வண்ணச் சித்திரங்ளைப் பெற்று அரிய வேலைப் பாட்டுகளுடன் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

இதை இளங்கோவே விளக்கக் கேட்போம்.

அரங்கின் இலக்கணம்

எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல் அளவு இருபத்து நால்விரல் ஆக
எழுகோல் அகலத் தெண்கோல் நீளத்து

ஒருகோல் உயரத்து உறுப்பின் தாகி
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோல் ஆக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்தப்
பூதரை எழுதி மேனிலை வைத்துத்
தூண்நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்.

(சிலம்பு–அரங்கேற்று கதை 95-113)

கொங்கு

முறை தெரியாக் கதை

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. விக்கிரமாதித்தன் முருங்கை மரத்தில் ஏறி, வேதாளத்தைக் கட்டித் தூக்கிக்கொண்டு வந்தான்.

வேதாளம் கதைசொல்லத் தொடங்கியது. ஒரு ஊரில், தந்தையும் மகனுமாக இரண்டுபேர் நடந்து போய்க்கொண்டிருந்தனர். அந்த வழியில் இவர்களுக்கு முன்னால் இரண்டுபேர் நடந்துபோன காலடித் தடங்கள் தெரிந்தன. அவை பெண்களின் காலடிகள் போலத் தெரிந்தன, ஓரிணை சற்றே சிறியதாகவும், அடுத்த இணை பெரியதாகவும் இருந்தன.

அவற்றைக் கண்ட தந்தையும், மகனும் ஒரு முடிவுக்கு வந்தனர். பெரிய காலடி உள்ள பெண்ணைத் தந்தையும், சிறிய காலடி உள்ள பெண்ணை மகனும் மணந்து கொள்வதாக ஏற்பாடு செய்து கொண்டனர். அதனால் வேகமாக நடந்து சென்றனர்.

விரைவில் முன்னால் சென்றவர்களைக் கண்டுபிடித்து விட்டனர். எதிர்பார்த்தது போலவே அவர்களும் பெண்கள்தான். அதில் ஒருத்தி தாய்; மற்றவள் மகள். அவர்களும் ஆண்களின் துணையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள முன்வந்தனர்.

ஆண்களின் தீர்மானத்தைக் கேட்டு மகிழ்ந்தனர். ஆனால் ஒரே ஒரு தவறு நேர்ந்துவிட்டது. அதாவது தாயின் காலடி சிறியதாகவும் மகளின் காலடி பெரியதாகவும் இருந்தன. இருந்தாலும் பரவாயில்லை என்று ஆண்களில் தந்தை, மகளையும், மகன் பெண்களில் தாயையும் திருமணம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்தனர்,

காலப்போக்கில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு குழந்தை—ஆண் குழந்தைகள் என வைத்துக் கொள்வோம்—பிறந்தன.

இப்போது அக்குழந்தைகளின் உறவு என்ன? மகன் குழந்தை அப்பனின் குழந்தையை அப்பா வழியில் 'சித்தப்பா' என்றழைப்பதா? தாய் வழியில் அக்காள் மகனை, மருமகன் என்றழைப்பதா?

வேதாளம் இவ்வாறு கேட்டதும் விக்கிரமாதித்தன் விடை தெரியாமல் விழித்தானாம்.

இது அசல் விக்கிரமாதித்தன் கதை! விக்கிரமாதித்தனுக்கு விடை தெரியாமல் தோற்றுப் போனான் என்பது அவனுடைய துண்ணறிவுக்குப் பொருத்தமாகப் படவில்லை,

இந்த கதையில் முறை தெரியாமல் போக வழியே இல்லை. இந்திய நாட்டில் பெரும்பாலான சமுதாயங்கள் ஆண் வழி உரிமையுடையவை உறவுகளெல்லாம் ஆண்களை அடிப்படையாகக் கொண்டவை. பெண்களைப் பற்றிய உறவைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இப்போதும் அந்தப் பழக்கம் தமிழ் நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகிறது.

வேளாளர் என்னும் குடிவரில் கொங்கு 24 நாட்டுப் பெயரையும் குடிப்பெயராகக் கொண்டு 24 பிரிவாக உள்ளனர். ஒரு நாட்டைச் சேர்ந்தவர் பங்காளிகள் — அடுத்த நாட்டவருடன்தான் மண உறவு கொள்வர். அதன்படி கிழங்கு நாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் தவ்வையும், தங்கையுமாவர். அவர்களைப் பூந்துறை நாட்டு இளைஞர் ஒருவரும், தட்டைய நாட்டு இளைஞர் ஒருவரும் மணந்து கொள்கின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் காளைக்கும், கன்னிக்கும் திருமணம் செய்யலாம்; செய்யப்படுகிறது. இங்கு பெண்களின் உறவைக் கவனிப்பதில்லை. ஆண்களின் உறவுதான் உரிமையுடையது.

அதேபோல வேளாளரில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்த கூட்டத்தைச் சேர்ந்தவர் வீட்டுப் பெண்களையே திருமணம் செய்வர்.

ஒரு கூட்டத்தைச் சேர்ந்த இருபெண்கள் அக்காள், தங்கையாகக் கருதப்படுவர் அவர்கள் வேறு இரண்டு கூட்டத்தைச் சேர்ந்த ஆடவரை மணந்து கொள்வதாக வைத்துக் கொள்ளலாம். அந்த இரு ஆடவரும் வேறு, வேறு கூட்டத்தைச் சேர்ந்தவர்களாதலால், தங்கள் பிள்ளை, பெண்களுக்கு மணவினை நடத்த உரிமை உள்ளது. அதன்படி அக்காள் மகனும் தங்கை மகளும் திருமண உறவு கொள்வது போலாகிறது. பெண் வழியில் பார்த்தால் பிழை போலத் தோன்றும்- ஆண் வழியில் பார்த்தால் பிழையில்லை. முறையான உறவுதான். சகோதரிகளில் அக்காளைத் தந்தையும், தங்கையை மகனும் மணந்து கொண்டுள்ளதை கோயில் பாளையம் என்ற ஊரில் காணலாம்.

அண்மையில் வந்த தேர்தல் வழக்கு ஒன்றில் அசாம் மலையினத்தவரை மணந்து கொண்ட தமிழ்நாட்டுப் பெண் மலையினமாகவே கருதப்படுவாள் என்று மேலுயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளதை நினைவு கொள்ளலாம்.

விக்கிரமாதித்தன் கதை எழுதியவர் எப்படி நாட்டு நடப்பை மறந்து விட்டாரோ, தெரியவில்லை. மகனின் பையன், அப்பனின் பையனைச் சித்தப்பா என்றழைப்பதே முறை எனச் சொல்லியிருக்க வேண்டும்.

கொங்கு 4/1972

சென்னிமலை

பண்டைப் புகழ் பெற்ற மலைகளுள் சென்னி மலையும் ஒன்று நற்றிணையில் (28) பாலைத் திணையில் புலவர் முதுகூத்தனார் அதன் அழகை அளவிடுகிறார்.

மணி போன்ற நீர் பாய்ந்து ஓடும் அருவி சூழ்ந்தது; பொன் வண்ண வேங்கைகள் பாய்ந்து ஓடும் அடுக்கடுக்கான மலைத் தொடர்; உயரமாக வளர்ந்து, கணுக்கள் நிறைந்த மூங்கில் மரங்கள் நிறைந்துள்ளன; மேலே பரவும் மழை மேகங்களைக் கிழிக்கின்ற **சென்னிக்கோடு** என்னும் பெயர் பெற்ற உயர்ந்த வளர்ந்த பெரிய மலை.

அந்த மலையின் தலைவனோ தலைவியைப் பிரிந்து சென்று விடுகிறான். தோழி என்னதான் ஆறுதல் கூறியும், கண்களையும், நெற்றியையும் கைகளால் நீவிவிட்டு அன்னை போல இனிய வார்த்தைகள் கூறியும் பயனில்லை. கள்வனைப் போல இதயங் கவர்ந்த அக் கொடியவனாகிய தலைவனின் நினைவு மாறவில்லை.

என்கைக் கொண்டு தன்கண் ஊற்றியும்
தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடிய மாதோ
மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்து
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழை கிழிக்குஞ் சென்னிக்
கோடுயர் பிறங்கல் மலைகிழ வோனே.

திருச்செங்கோடு என்பதுபோல அக்காலத்தில் சென்னிக்கோடு என்று வழங்கியதை அறிகின்றோம்.

குறுந்தொகை 144 ஆம் பாடலிலும் சென்னிமலை குறிக்கப் படுகின்றது.

சென்னிமலையின் அழகில் மயங்கிய இன்னொரு புலவர் மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார். (செங்கோடன் என்று தற்காலத்தில் கூடப் பெயர் வைத்துக் கொள்வதைக் காணலாம்)

ஒரு தலைவி தன் தோழியரை விட்டு விலகித் தலைவனோடு சென்று விடுவதைப் பற்றிச் செவிலித் தாய் வருந்துகிறாள்.

கொம்பிடை மலர்ந்த பூக்களைப் பறிப்பாள் வெண்ணுரை பொங்கும் கடலலையில் விளையாடுவாள். தன் தோழியரை விட்டுப் பிரியாத பண்பினள்; இன்றோ தோழியர் வேறு விளையாடல்களில் ஈடுபட்டிருந்த பொது, அவள் தனியே சென்று விட்டாள். அவ் வழியோ பரல் கற்கள் மலிந்தது; அவளது பாதங்களைத் துன்புறுத் தும்.

இந்நிகழ்ச்சி நடைபெற்றது சென்னிமலை அமைந்த நாடு. மலை முகட்டில் மழையைச் சுமந்த மேகங்கள் சூழ்ந்துள்ளன, விண்வரை உயர்ந்த கருங்கல் மலைகள் சூழ்ந்த நாடு அதுவாகும்

கழிய	காவி	குற்றம்	கடல
வெண்டலைப்	புணரி	யாடியும்	நன்றே
பிரிவி	லாய	முரிய தொன்	றயர
இவ்வழிப்	படுதலும்	ஒல்லாள்	அவ்வழிப்
பரல் பாழ்	படுப்பச்	சென்றனள்	மாதோ
சென்மழை	தவழும்	சென்னி	
விண்ணுயர்	பிறங்கல்	விளங்கு மலை	நாட்டே.

இங்கு 'சென்னி' என்பதற்கு 'உச்சி' என்று பொருள் கொண்டு பொதுவாக உரைப்பாரும் உளர். சென்னிமலை என்ற மலையின் பெயரை வைத்துப் பொருள் கொள்ளும் போது பொருத்தமான பொருள் தருவதால், இது சென்னிமலையே சுட்டும் என உறுதி யாகச் சொல்லலாம்.

கொங்கு 5/73

சொல்லாக்கம்

நுட்பச் சொற்கள் ஆக்குவது தனிக்கலை. அதற்கென சில வழி வகைகள் உண்டு.

ஒவ்வொரு மொழியிலும் பல சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன். ஒரே சொல்லுக்கு ஒவ்வொரு காலத்திலும் ஒரு பொருள் வீதம் பல பொருள் வழங்குவதுண்டு. ஒரே சொல்லுக்கு ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பொருள் வழங்கும். அறிவியல் பாடத்திற்கு சொல்லிற்கேற்ற மாறாத பொருள் தேவை, அதனால் ஒவ்வொரு சொல்லிற்கும் தகுந்த பொருள் அடைவு தரவேண்டும். ஒரே சொல் ஒவ்வொரு அறிவியல் பிரிவிலும் ஒரு பொருள் அடைவு கொள்ளும். ஆங்கிலத்திலும் ஒரே சொல் ஒவவொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பொருள் கொண்டிருப்பதைக் காணலாம்.

எனவே தமிழ்ச் சொல்லாக்கத்திற்குக் கீழ்க் கண்ட விதிகளைப் பின்பற்றலாம்,

1. ஆங்கில வேர்ச் சொல்லிலிருந்து வளர்ச்சி இருப்பது போல தமிழிலும் வேர் சொல்லிலிருந்து வளர்ச்சியோடு அமைத்தல் வேண்டும்.

Photo — ஒளி
Photograph—ஒளிவரை
Photography—ஒளிவரையம்
Photograher—ஒளிவரைவர்
Photo Electric Cell—ஒளிமின்கலம்
Photo Synthesis—ஒளிசேர்க்கை
Photometer — ஒளி அளவி
Photo technic—ஒளி நுட்பம்

2. ஒருசொல் அமைககும் போது அதன் தொடர்புடைய பல சொற்களைத் திரட்டி வேறுபாடு புலனாகும்படி அமைத்தல்.

Technic — நுட்பம்
Technician — நுட்பர்
Technology — நுட்பவியல்

Technologist — நுட்பவியலர்
Technocrat — நுட்பாளுநர்
Technical Terms — நுட்பச் சொற்கள்
Polytechnic — பன்னுட்பியம்
Monotechnic — ஒரே நுட்பியம்

3. ஒரு முன் இணைப்போ, பின் இணைப்போ பல இடங்களுக்குப் பொருந்துமாறு அமைத்து சீர்மை (Uniformity) க்கு முதலிடம் தரவேண்டும்.

வேர்ச் சொற்கள்

Geo — புவி
Bio — உயிர்
Archaeo — தொல்
Paleo — பழைய
Tele — தொலை
Micro — நுண்
Petro — பாறை

பின் இணைப்புகள்

Logy — இயல்
Meter — அளவி
Metry — அளவையம்
Graph — வரை
Graphy — வரையம்
Scope — நோக்கி

4. ஆங்கிலச் சொற்களை அடிப்படைச் சொற்களாக எடுத்துக் கொண்டு தமிழ்ச் சொற்களை அவற்றிற் கொப்ப அமைத்தல் நல்லது

Hydrology — நீரியல்
Hydraulics — நீரியம்
Hydrostatics = நீர்நிலையியம்
Dynamics — இயங்கியம்
Mechanics — எந்திரவியம்
Physics — இயல்பியம்
Chemistry — இயைபியம்
Polytechnic — பன்னுட்பியம்

குறிப்பு :- இயல் என்ற சொல் அறிவியல் பாடப் பகுதியைக் குறிக்கும் சொல்லாக இருந்த போதிலும் ஆங்கிலத்தில் logy என்று முடியாத இடத்தில் இயல் என்று முடியாதவாறு அமைத்தால் குழப்பம் குறையும்.

5. கிட்டத்தட்ட ஒரு பொருளுடைய பல சொற்களுக்கு இணையாக சொற்களைத் தேடி இடுகுறியாக நிர்ணயிக்க வேண்டும்.

Board	வாரியம்
Council	மன்றம்
Committee	ஆயம்
Commisson	ஆணைக்குழு, ஆணையம்
Corporation	பேராயம்
Society	சங்கம்
Federation	கூட்டணி
Confederation	பெருங்கூட்டணி
Institute	சமூகம்
Establishment	நிறுவனம்

6. ஒரு அறிவியல் பாடத்தை எடுத்துக் கொண்டால் அதில் வரும் சொற்களை ஒன்று திரட்டி. அவைகளுக்கேற்ப முறைப்படுத்தி அமைத்தல் வேண்டும்.

Load	எடை
Live load	நகர் எடை
Dead load	நகரா எடை
Distributed load	பரவு எடை
Uniformiy Distributed load	சீர் பரவு எடை
Load due to impact	உதைய எடை
moving load	இயங்கும் எடை

7. பெயர்ச் சொற்களை (Proper-Nouns அப்படியே எடுத்து பெயர்த்து எழுதலாம்.

எழுத்துப் பெயர்த்து எழுதும் போது தமிழ் முறைக்கு ஏற்ப சிறிதளவு மாற்றம் செய்து கொள்ளலாம். ஆனால் தமிழில் எழுதிய

பின் படித்தால் ஆங்கில மூல உருவம் புலனாக வேண்டும். மூல உருவம் புலனாகத அளவு உருமாற்றம் செய்தால் நன்மை தராது.

Toriselli — டாரிசெல்லி
Diesel — டீசல்
Volt — ஒல்ட்டு
Amphere — ஆம்பியர்

தற்போது மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்று தருவதால் ஆங்கிலம் அறியாத தமிழர் இனி இரார். எனவே மூலச் சொல்லை ஒரு தடவை ஆங்கிலத்தில் தெரிந்து கொண்டால், தமிழில் எழுதிய சொற்களையே ஆங்கில உச்சரிப்போடு படிக்கும் பழக்கமே இருக்கும்.

8. நல்ல சொல் கிடைக்காதவரை ஆங்கிலச் சொற்களை அடைப்புக்குறிக்குள் ஆங்கில எழுத்தோடு அப்படியே கையாளலாம்.

9. இயன்றவரை வடமொழிச் சொற்களை பயன்படுத்தாமை வேண்டும்.

கட்டுரை எழுதுமுன் சொற்களை கண்டுபிடிக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. எழுத, எழுத நல்ல சொற்கள் பிறக்கும். பழகப் பழகச் செப்பமுறும். ஏராளமாக எழுத வேண்டும். அப்போதுதான் நல்ல சொற்களைத் தேர்ந்தெடுக்கமுடியும். தொடக்கத்திலேயே சொற்களை நிலைவு (Standardise) செய்ய வேண்டியதில்லை. பல சொற்கள் பிறக்க வழிவிட்டு நல்லதைத் தேர்ந்தெடுக்கலாம்.

19-2-71 அன்று கிண்டி, பொறியிற் கல்லூரித் தமிழ் மன்றம் நடத்திய அறிவியலை நோக்கி கருத்தரங்கில் வாசித்த எழுத்துரையின் சுருக்கம்.

கொங்கு 5/1973

அடையாறு ஈமப்பேழை

காந்தியடிகள் நினைவாலயத்திற்கு எதிரில் அமைந்துள்ளது அழகப்பர் தொழில்நுட்பக் கல்லூரி. அந்த வளாகத்தில் ஒரு நூலகம் அமைப்பதற்காக அடித்தள வாணம் பறிக்கையில், சில தொன்மைச் சின்னங்கள் கிடைத்தன. அவற்றின் விவரம் தருவது இக்கட்டுரை.

B 8, B 10 ஆகிய இரண்டு குழிகளிலும் இரண்டு ஈமப் பேழை களின் பகுதிகள் கிடைத்தன. பண்டைக் காலத்தில் இறந்தோரை அடக்கம் செய்வதற்காக களிமண்ணில் செய்யப்பட்ட பேழை. ஏதாவது ஒரு மிருகத்தின் வடிவில் செய்யப்பட்டிருக்கும். வயிற்றுப் பகுதி அடிப்பகுதியும் அதற்குமேல் மூடி போன்றும் இரண்டு பகுதி யாகச் செய்யப்பட்டிருக்கும். கழுத்தில் தலைப் பகுதி தனியாகச் சொருகும் வகையில் அமைந்திருக்கும், வயிற்றுப் பகுதியிலிருந்து 10 அல்லது 12 கால்கள் இருக்கும்.

இறந்தவர்களை ஈமப்பேழையின் வயிற்றுப் பகுதியில் வைத்து, கூட ஒரு சில பொருள்களை வைத்து மூடி, இடுகாட்டில் தரை மீது வைத்து விடுவர்,

தற்போது கிடைத்தவை. சுமார் இரண்டடி ஆழத்தில் இருந் தன. மண் அழுத்தத்தால் அமுங்கிப் போய் இருந்தன. ஒன்று சுமார் 170 செ மீ நீளம் இருந்தது. கால் நின்ற பகுதி சல்லிமண்ணாலான கெட்டிப் பகுதி.மேல் பகுதி களிமண்ணால் ஆன பகுதி. இதிலிருந்தே ஈமப்பேழை புதைக்கப்படாமல் தரை மேல் நிறுத்தி வைக்கப்பட் டிருந்ததென்று அறிகின்றோம். கால்கள் சுமார் 10 செ. மீ. விட்டம் கொண்டவை. ஈமப்பேழையின் ஓடுகள், உமிகலந்த மண்ணால் செய்யப்பட்டுச் சுடப்பட்டவை. சுமார் 2 செமீ, கனமான ஓடுகளாகக் கிடைத்தன, கால்கள் ஒன்றுக் கொன்று இடைவெளி சுமார் 30 செ. மி. இருந்தது.

குழிஎண் B 10 : இந்தக் குழியில் இருந்த ஈமப்பேழை கிழக்கு மேற்காக இருந்தது, தலைமாடு கிழக்குப் பக்கம் இருந்தது. பொடித்து நைந்து போயிருந்த எலும்புத் துண்டுகள் இருந்தன. இத்துடன் அடியில் கூராகவும் மேலே வாய் அகலமாகவும் உள்ள, ஒரு மண்

1 2 3

1, 2. பேழையின் கால்கள் 3 திருவையில் செய்த ஓடு

1 2 3 4

1 ஈமப்பேழையின் வாய்ப்பாடு 2 & 3 மூடி 4 கழுத்து

1 2 3 4 5

1 எலும்புத்தூள் 2 கலையோட்டின் பகுதி 3 விலங்கு எலும்புத் தொல்படிவு (Fossil)
4 ஓடு 5 கொப்பரையின் அடிப்பாகம்



கலையோடு

RING STAND

BLACK WARE



கொப்பரை

BOWL

BLACK & RED WARE



GRAFITI FOUND ON A RING STAND

கலையோட்டின் மீதுள்ள எழுத்துகள்

ஏனமும் (கொப்பரை) அதைத் தாங்குவதற்காக ஒரு கலையோடும் இருந்தன. மேலும் சில சிறு ஏனங்களின் ஓடுகளும் இருந்தன. கலையோடு முழுவதும் கருப்பு வண்ணத்தில் இருந்தது. கொப்பரையின் உட்பக்கம் கருப்பாகவும் வெளிப்பக்கம் சிகப்பாகவும் இருந்தது. இவ்வகை கருப்பு-சிகப்பு ஓட்டிலிருந்து இதன் காலத்தை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கணக்கிடலாம்.

குழிஎண் B 8 : இந்தக் குழியில் இருந்த ஈமப்பேழை வட கிழக்கு தென்கிழக்கு திசையில் இருந்தது. வடகிழக்குப் பக்கம் தலைமாடு இருந்தது. இதிலும் எலும்புத் தூள் இருந்தது. ஒரு கருப்பு வண்ணக் கலையோடும், கருப்பு-சிகப்பு வண்ணக் கொப்பரையும், மேலும் சில சிறிய ஓடுகளும் இருந்தன. கலை ஓட்டின் துண்டுகளும் கொப்பரையின் துண்டுகளும் ஒட்டப்பட்டு, அழகப்பர் தொழில் நுட்பக் கல்லூரியின் நூலகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப் பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்கள் சென்று காணலாம். கலையோட்டின் விளிம்பு ஓரத்தில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. எனினும் அதன் மொழி புரியவில்லை. (படம் காண்க)

பிற குழிகளில் தோண்டிய மண்ணில் வேறு சில ஓட்டுத் துண்டுகள் கிடைத்தன. ஒரு பெரிய எலும்புத் துண்டின் தொல் படிவம் (Fossil) கிடைத்தது.

கணிப்பு : பெரியோர்களை அடக்கம் செய்யும் முறைகளில் ஈமப் பேழையில் அடக்கம் செய்யும் முறையும் ஒன்று என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலமாகவும் மணிமேகலை மூலமாகவும் அறிகின்றோம், சென்னை நகரத்திலும். அதன் சுற்று வட்டாரத்திலும் ஈமப்பேழைகளும், ஈமத்தாழிகளும் வேறு பல புதை முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அடையாற்றின் கரையோரம் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். அடையாற்றங்கரை நாகரீகம் பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய தென்பதை உணரலாம்.

பொட்டுச் சூடு

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன் செயலெழுதித் தீர்த்த முகம் திங்களோ காணீர் என்று கோவலன் மாதவியைக் கண்டு வியக்கிறான். கயலான கண்களுக்கும் வில்லான புருவங்களுக்கும் காரான கூந்தலுக்கும் இடைப்பட்ட பிரதேசம் ஒன்றுண்டு. அதுவே நெற்றி ஆகும்.

கொங்கு நாட்டுப் பெண்கள் பலரின் நெற்றியில் ஒரு தனிச் சிறப்பு தென்படும். அது ஒரு தழும்பாகும் அது வட்டமான ஒரு புள்ளியாக இருக்கலாம். அல்லது செங்குத்தான ஒரு நேர் கோடாக இருக்கலாம். இரண்டு புருவங்களுக்கு நடுவில் அந்தப் புள்ளி அமைந்திருக்கும் பச்சை குத்திக் கொள்வதும் உண்டு.

நெற்றிக்குப் பொட்டிட்டுக் கொள்வது மங்களத்தின் அறிகுறி. கண்ணாடியைப் பார்த்துந்தான் பொட்டிட்டுக் கொள்வர். இருத்தாலும் பல பெண்களுக்கு பொட்டு கோணலாகப் போய்விடும், இவ்வாறு கோணலாகாமல் வழிகாட்டியாக அமைவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதே அந்தப் புள்ளியாகும். சாந்துப்பொட்டை நேராக இடுவதற்காக நீளக்கோடு வைக்கப்படுகிறது.

இது எவ்வாறு வைக்கப்படுகின்றது? நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய மைகோதியில் நெற்றியிலே சூடு வைக்கிறார்கள். இளமையிலேயே. இரண்டு அல்லது மூன்று வயதிலேயே இதை வைத்து விடுகின்றனர். இது என்ன கொடுமை என்கிறீர்களா? தன் பெண்ணின் அழகு கருதி தாய்மார் குழந்தைகளுக்கு இடும் சூடு இதுவாகும். இந்த வழக்கம் இன்னும் பல கிராமங்களில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. (இளம் வயதில் வலிப்பு நோய் வந்தால், அதற்கு மருந்தாகப் பொட்டுச் சூடு வைப்பது வழக்கம் என்றும் கூறுவர். விரலி மஞ்சளைச் சுட்டு, நெற்றி நரம்பு பார்த்து, அந்த இடத்தில் வைத்தால் வலிப்பு நோய் மீண்டும் வராது என்பர்)

சில பெண்களுக்கு சூடு வைப்பதற்குப் பதிலாகப் பச்சை குத்தி விடுகிறார்கள். பொட்டாகவோ நேர்கோடாகவோ இருப்பதைக் காணலாம்.

மீண்டும் நினைவு படுத்துகிறோம். இந்த ஏற்பாடு பெண்கள் பொட்டு, திலகம் அழகாக நேராக இருப்பதற்காக, ஆனால் ஆண்ட

வன் பல வேளைகளில் அந்தப் பெண்கள் நெற்றியிலே திலகத்தை அதிக நாள் இட முடியாமல் சோதித்து விடுகிறான். ஆம், மங்கலத்தை எடுத்து வெள்ளாடை தந்து விடுகிறான். கணவனை இழந்த காரிகையாக, வெற்று நெற்றியராக இருப்பதைக் காண நேரிடுகின்றது. வெள்ளாடை உடுத்தி கைமை நோன்பு காக்கும் பெண்களின் நெற்றியில் இந்தப் பொட்டுச் சூட்டைக் காணும் போது, அன்று பழுத்துக் காய்ச்சிய மைகோதியை நெற்றியில் சுட்ட போது அந்தச் சின்னஞ்சிறிய சிசுவுக்கு ஏற்பட்டதை விட கடுமையான வலி நமது நெஞ்சில் தோன்றுகின்றது.

கொங்கு 11/76

கிண்டியில் பண்டைத் தாழி

கிண்டியிலுள்ள. கிங் நிலையத்தில் மின்னேற்றிக் கூடத்தின் அடித்தளம் தோண்டும் போது ஒரு ஈமத் தாழி கிடைத்தது. தாழிஓடு சுட்ட மண்ணாலானது. 1 செ. மீ. கனம் உள்ளது. தாழியின் வெளிப்புறம் வழவழப்பாகவும் உள்ளது. அதனுடன் மெல்லிய கருப்பு சிகப்பு ஒட்டுச் சில்லுகள் இரண்டு கிடைத்தன. ஓடுகள் நில மட்டத்திலிருந்து 70 செ. மீ. ஆழத்தில் கிடைத்தது; ஓடைக்கல் மேலே அமைந்திருந்தது.

கருப்பு-சிகப்பு ஓட்டுச் சில்லுகளின் அமைப்பைக் கொண்டு இதன் காலம் கி, பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தனியாகக் கருதும்போது இக்கண்டுபிடிப்பு பெரிய செய்தி அல்ல. ஆனால் மூன்றாண்டுகளுக்கு முன் அடையாறு நுட்பவியல் கல்லூரியில் கிடைத்த ஈமப்பேழைகளோடு ஒப்பிடுகையில், இது ஒரு முக்கியமான செய்தி ஆகின்றது. அடையாற்றின் தென்கரையில் சங்க காலம் தொட்டு மக்கள் தொடர்ந்து வசித்து வந்துள்ள உண்மை தெளிவாகின்றது.

புதையுண்ட பண்டை நகரம் ஒன்று சென்னை மாநகருக்குள்ளேயே மறைந்து கிடக்கின்றது. பொருளாதார முன்னேற்றத்தால் ஏற்படும் வளர்ச்சிப் பணிகளின் போது விழிப் போடிராவிட்டால் பண்டை நகரத்தின் எச்சங்கள் விரைவில் அழிந்து போகும்.

கொங்கு 5/73

அடையாறு பீரங்கி

1746 ஆம் ஆண்டு நடந்த அடையாற்றுப் போர் புகழ் பெற்றது சென்னை மாநகரை பிரெஞ்சுக்காரர் பிடித்துக் கொண்ட போது அதை ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கும்படி, ஆர்க்காடு நவாபு ஆணையிட்டார். பிரஞ்சுக்காரர் அடிபணியவில்லை, அதனால் போர்ப் படையை அனுப்பினார் நாவபு. இரண்டு தரப்பிலும் பீரங்கிகளும், வெடி மருந்துகளும் பயன் கடுத்தப்பட்டன.

அப்போரில் பயன்பட்டிருக்கலாம் என்று ஐறயுத்தக்க இரும்பு பீரங்கி ஒன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. பலகை வாராவதிக் கருகில், தரமணீ கிராமத்தில் புதிதாகக் வளர்ந்து வரும் அடிப்படை மருத்துவ அறிவியல் கழகக் கட்டிடத்திற்கான அடித்தளம் தோண்டும் போது கிடைத்தது. ஒன்பதடி நீளமும் ஒன்றரை அடி அகலமும், உள்ளது. துளைவிட்டம் அரை அடி, இரண்டு டன் எடை இருக்கலாம் பார்க்க விரும்புவோர் சென்று பார்க்கலாம்.

அடையாறு பீரங்கி

ஓலைச்சுவடிகள்

கரூர் வட்டம், கொக்கம்பட்டி கிராமத்திலிருந்து நான்கு ஓலைச் சுவடிகள் வாங்கி வந்து, தமிழக அரசின் சுவடிக் காப்பகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிய குறிப்புகள் வருமாறு :-

சுவடி 1 : அரிச்சந்திர புராணம் நாடக வடிவில் எழுதப் பெற்றது. எளிய நடையுடையது முற்றுப் பெறவில்லை.

சுவடி 2 : பாரதக் கதையின் ஒரு பகுதியாகிய சுந்தரி (திரோபதி) யின் திருமணச் செய்தியைச் "சுந்தரி அம்மானை" என்ற தலைப்பில் எழுதப் பெற்றுள்ள சுவடி. எளிய யான நடையிலேயே அமைந்துள்ளது. முற்றும் உள்ளது. பரிதாபி ஆண்டு கொக்கம் பட்டியைச் சேர்ந்தவரால் படி எடுக்கப் பட்டுள்ளதாக எழுதப் பட்டுள்ளது.

சுவடி 3 : விநாயர் அகவல், ஆத்திச்சூடி, உலகநீதி ஆகியன எழுதப் பெற்ற சுவடியாகும்.

"குழிமாற்று" என்ற தலைப்பில் தமிழ் எண்கள் எழுதப் பெற்ற பகுதியும் அடங்கியுள்ளது, தமிழக நில அளவையில் குழியும் ஒரளவு ஆகும். குறியின் மேல் வாய் கீழ்வாய் இலக்கங்களாக இருக்கலாம். என்று கருதப் படுகிறது. சுவடிக் காப்பகத் தலைவர் அவர்களின் ஆய்வில் உள்ளது. விரைவில் வெளியிடுவதாக உறுதி அளித்துள்ளார்கள்.

சுவடி 4 : "கோள் நிலை ஆருடம்" என்ற பெயரில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் ... போன்ற கோள்களின் தோற்ற திசை, சஞ்சரிக்கும் திசை விவரங்கள். அவற்றின் பலன்கள் போலவன வற்றை விளங்கு கின்றன.

சுவடிக்காப்பகம் (Oriantal Manuscirpt library) இவற்றை வெளியிடுமென்று எதிர்பார்ப்போமாக-

கொங்கு 6/.72

எமது வெளியீடுகள்

1. ஆய்வுத்தேன்
2. மதுக்கரைப்பட்டயம்
3. பூர்வச் சக்ரவர்த்தி நாடகம்
4. மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை
5. பழையனூர் நீலி
6. திருப்பாண்டிக் கொடுமுடி
7. தட்டயநாட்டார் தெவம்
8. ஆய்வுக் களஞ்சியம் - திருச்செங்கோடு-1
9. ,, திருச்செங்கோடு-2
10. ,, குறும்பொறைக் கோமான்

பிற நூல்கள்

1. புதிய தமிழ் வடிவம்
2. அளக்கையியல் (Surveying I Volume)
3. பொறியியல் வரைவுகள் (Engineering Drawing)

தேனோலை
11-பி, இரண்டாவது அவின்யு,
இந்திரா நகர், சென்னை–600 020.